வேருக்கு முன்முளையும் வித்தும் நுணித்தாய்ந்து
பாருக்குள் முந்தியது பைந்தமிழே என்றறைந்தாய்
அஞ்சொல்நுண் தேர்ச்சி அறிஞநீ ஓய்வுபெறத்
துஞ்சினாய் கொல்லோ துணிந்து!

கடல்கொண்ட தென்குமரி நீணிலமே மாந்தன்
உடல்கொண்ட தென்றபே ருண்மை – திடமாய்
அடித்தடித்துச் சொல்லினையே அண்ணல்நின் போல
முடித்தெடுத்துச் சொன்னார் எவர்!

– புலவர் இறைக்குருவனார்


'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை - 17.

பாவாணர் தமிழ்க்களஞ்சியம்

13

# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்–13



முதற்றாய்மொழி–1

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
## தமிழ்க் களஞ்சியம்

13

### முதற்றாய் மொழி – I

ஆசிரியர்
மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**
*சென்னை - 600 017*

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 13** |
| ஆசிரியர் | : | மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 1953 |
| மறுபதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16 + 160 = 176 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **165/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**"பெரியார் குடில்"**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* ***இரா. இளங்குமரனார்*** *அவர்களும், மருத்துவர்* ***கு.பூங்காவனம்*** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர்.இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*"சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* ***மறைமலையடிகளும்,*** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* ***பாவேந்தரும்,*** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* ***பேரறிஞர் அண்ணா*** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழிறிஞர்* ***இராசமாணிக்கனாரும்,*** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* ***பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,*** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர்* ***தமிழ்குடிமகன்*** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* ***இளவரசு*** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி" பாவாணர் என்று முதுமுனைவர்* ***இளங்குமரனார்*** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# வான்மழை வளச்சுரப்பு

*ஆழத்துள் ஆழமாய் அகழ்ந்து **தங்கம்** ஏன் எடுக்கப்படுகிறது? ஆழ்கடலுள் சென்று, உயிரைப் பணயம் வைத்து **முத்துக்** குளிக்கப் படுவது ஏன்? **பவழப்** பாளங்களை எடுப்பது ஏன்? **வயிரம்** முதலாம் மணிக்குலங்களை இடையறாமல் தேடித் தேடி எடுப்பது ஏன்?*

*அணிகலப் பொருள்கள் என்பதற்கு மட்டுமா? வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் ஈட்டுதற்கு அரிய **வைப்பு வளமாக** இருந்து, நாட்டின் பொருளியல் மேம்பாட்டுக்கு **அடிமணை யாகவும்** இவை இருப்பதால் தானே!*

*இவற்றினும் மேலாம் வைப்பு வளமும் உண்டோ? உண்டு! உண்டு! அவை **சான்றோர் நூல்கள்!***

*காலம் காலமாக அள்ளிக் கொண்டாலும் வற்றா வளமாய்த் திகழும் **அறிவுக் கருவூலமாம் நூல்கள்!***

*ஒன்றைக் கற்றால் ஒரு நூறாய் ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகத் தக்க பெறற்கரிய **தாய் நூல்களாம்** பேறமைந்த நூல்கள்! **சேய்நூல்களை ஈனவல்ல செழு நூல்கள்!***

*நுண் மாண் நுழைபுலத் **தாய் நூல்களாய் இருப்பினும்!** அவற்றைத் தாங்கிய **தாள்கள்,** எத்தகைய பேணுதல் உடையவை எனினும் கால வெள்ளத்தில் அழியக் கூடியவை தாமே!*

*__கல்லெழுத்தே,__ கதிர் வெப்பாலும் கடலுப்பாலும் காத்துப் பேணும் கடப்பாடில்லார் கைப்படலாலும் அழிந்து பட்டமை கண்கூடு தானே!*

*__ஏட்டு வரைவுகள்,__ நீரே நெருப்பே நீடித்த காலமே புற்றே போற்றா மடமையே என்பவற்றால் அழிந்து பட்டமைக்கு அளவு தானும் உண்டோ? மக்களுக்கு மாணப் பெரிய பயனாம் நூல்கள், கற்கும் மக்கள் பெருக்கத்திற்கும், பிறந்து பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கும் தக்க வகையில் அவர்களுக்குப் பாட்டன்*

*பாட்டியர் வைத்த* **பழந்தேட்டென்ன** *அந்நூல்கள், மீளமீளத் தட்டில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டுவது* **நூற்பதிப்பர்** *தவிராக் கடமையல்லவோ!*

*அக்கடமையை அவர்கள் காலந்தோறும் கடப்பாடாகக் கொண்டு செய்ய, ஆளும் அரசும் வாழும் அறிவரும் அருந்நுணையாதல் தானே கட்டாயத் தேவை! இவ்வாறு பதிப்பரும் அறிவரும் ஆள்நரும் தத்தம் மூச்சுக் கடனாக,* **நூற்கொடை புரிதலுக்கு மேற்கொடை இல்லையாம்!**

**மொழிஞாயிறு பாவாணர் நூல்கள்** *ஒன்றா இரண்டா? நமக்கு எட்டாதவை போக எட்டிய நூல்கள் 32. கட்டுரை பொழிவு முதலாம் வகையால் கிட்டிய திரட்டு நூல்கள் 12. இன்னும்* **எட்டாத தொகுப்பும்** *அங்கொன்றும் இங்கொன்றும் வர வாய்ப்புண்டு!*

**கடித வரைவு பா வரைவு** *என மேலும் பெருகவும் வாய்ப்புண்டு!*

*இவற்றை எல்லாம் ஆயிரம் அச்சிட்டு அவ்வளவில் நின்று விட்டால், தேடுவார்க்குத் தேடும் பொழுதில் வாய்க்கும் திருவாகத் திகழக் கூடுமோ?*

*ஆதலால்,* **சேய் நூல்களுக்கு மூலமாம் தாய்நூல்கள், காலம் தோறும் வான்மழை வளச் சுரப்பாக வெளிப்பட வேண்டும் கட்டாயம் உணர்ந்து கடமை புரியும் வீறுடையார் வேண்டும்! மிக வேண்டும்!**

*இத்தகைய விழுமிய வீறுடையர் - இனமானச் செம்மல் - தமிழ்ப் போராளி - திருத்தகு* **கோ. இளவழகனார்,** *தாம் முந்து முழுதுறக் கொணர்ந்த பாவாணர் படைப்புகளை மீளமீளத் தமிழுலாக் கொள்ள வைக்கும் முன் முயற்சியாய், இம்* **மீள்பதிப்பை வழங்குகிறார்!** *தமிழுலகம் பயன் கொள்வதாக! பயன் செய்வதாக!*

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

**இன்ப அன்புடன்**

**இரா. இளங்குமரன்.**

# சான்றிதழ்

பண்டித ஞா. தேவநேயனார், பி.ஓ.எல். பொதுவாக மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித் தமிழ்ச்சொல் ஆராய்ச்சிபற்றி எழுதிய நூல்கள் தமிழ்மொழியின் நீண்டகாலத் தேவையினை நிறைவு செய்தன. தம்முடைய இளந்தைக் காலத்திலே தலைமைக் கண்காணியார் தவத்திரு திரஞ்சு (Trench) எழுதிய 'சொல்லாராய்ச்சி', பேராசிரியர் மாக்கசு முல்லர் எழுதிய 'மொழியறிவியல்', பேராசிரியர் சாய்சு எழுதிய 'ஒப்பியல் மொழிநூல்' முதலிய ஆங்கிய நூல்களை யாமே பெருவிருப்புடன் படித்துக்கொண்டிருக்கும்போது அந்த முறையில் தமிழ்ச் சொற்களை ஆராய வேண்டுமென்று விரும்பினேம். தமிழ்ப் பேரறிஞர்கட்குப் புலப்படாமல் மறைந்து கிடந்த விரிவாகவும் வியப்பாகவுமுள்ள தமிழ்மொழியறிவுப் பரப்பு, பண்டாரகர் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு' நூலால் புலப்படலாயிற்று. எனினும் பண்டாரகர் கால்டுவெல், அறியப்படாத வட்டாரத்தில் செய்ததொரு முயற்சியாதலால் தமிழ்ச்சொற்களை யெல்லாம் விடாமல் நிறைவாக எடுத்தாராய்ந்துள்ளனர் என்று எதிர்பார்ப்பதற் கில்லை. இதுவே மொழியியலை ஆராய வேண்டு மென்று எம்மைத் தூண்டியது. எனவே 'ஞானசாகரம்' (அறிவுக்கடல்) என்னும் எம்முடைய இதழின் முதல் தொகுதியில் அத் துறையில் ஒன்றிரண்டு கட்டுரைகளை எழுதி வெளியிட்டேம். ஆனால் அப்போது சமயம், மெய்ப்பொருளியல், இலக்கிய வரலாறு ஆகிய துறைகளில் எம்முடைய மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக் கூடவில்லை. ஆயினும் தகுதியுடைய அறிஞர் யாராவது இத் துறையில் ஆராய்வதற்கு முன்வரக்கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம். அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர்தாம் எகிபதிய மொழியியல் ஆராய்ச்சி நூலை எமக்கு அனுப்பிவைத்தார். அது ஓரளவு எமக்கு மனநிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித் துறை மிகவும் விரிவும் ஆழமு முடையதாதலால் பழந்தமிழ்

இலக்கியங்களைக் கற்று அவற்றைக் கொண்டு நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முற்றும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ்வுற்றேம். அத் துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்பவற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம்.

சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித் திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றேம்.

மேலும் திரு. தேவநேயனார் பதியச் சொல்லும் ஆசிரியரும் இன்புறுத்தும் சொற்பொழிவாளருமாவர். பல தமிழ்க் கழக ஆண்டு விழாக்களில் எமது தலைமையின்கீழ் அவர் சொற் பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவை கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அமைந்து அவையோரைக் கிளர்ச்சியுறச் செய்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. அவர் வருந்தியுழைத்து ஆராய்ச்சி செய்துவரும் அறிஞர் ஆதலால் அவரைப் பணியில் அமர்த்தும் எந்த நிலையத்துக்கும் அவரால் பேரும் புகழும் கிடைக்கப் பெறும் என்று யாம் முழு நம்பிக்கையோடு கூறுகின்றேம்.*

- ***மறைமலையடிகள்***

* மறைமலையடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய சான்றிதழின் தமிழாக்கம்.

# முகவுரை

மாந்தன் அறிவு வளர வளரப் புதுப்புதுக் கலைகள் தோன்றிக் கொண்டே யிருக்கின்றன. அவற்றுள் மொழி ஒன்று.

கணிதமும், அறிவியலும் எங்ஙனம் திட்டமும் துல்லியமுமான நூற்கலையோ, அங்ஙனமே மொழிநூலும். ஆயின், கணிதம் முற்றும் அறிவியல் ஒருவாறும் நிறைவடைந்து விட்டன; மொழிநூல் இன்னும் அடையவில்லை.

ஒவ்வொரு நூற்கலைக்கும், (1) ஆய்வுநிலை (Empircal stage), (2) பாகுபாட்டு நிலை (Classificatory stage), (3) முடிபுநிலை (Theoritical stage), என முந்நிலைகளுண்டு. அவற்றுள், முதலிரு நிலைகளே மொழிநூல் அடைந் துள்ளது. இக்குறைபாட்டைச் சில ஆய்விலிகளும் அடிமை மனப்பான்மையரும் பயன்படுத்திக் கொண்டு, மொழிநூல் முற்றும் பாணிப்புக்கலை என்றும், மொழியாராய்ச்சி பயனில் முயற்சியென்றும், கூறி வருகின்றனர்.

ஒவ்வொரு நூற்கலைக்கும் சில பல நெறிமுறைகள் உள. அவற்றைக் கண்டுபிடிக்கும்வரை, ஆராய்ச்சியாளர் அடி சறுக்குவதும் குன்றுமுட்டிய குரீஇபோல் இடர்ப்படுவதும் இயல்பே. நெறிமுறைகளைக் கண்டுவிடின், கதிரவன் முன் காரிருள்போல் அனைத்திடர்ப்பாடும் அகன்றுவிடும்.

அறிவுப் பெருக்கமும் ஆராய்ச்சிவன்மையும் ஒருங்கே கொண்ட மேனாட்டார்க்கும் மொழிநூல் நெறிமுறைகள் முற்றத்தெரியாதபோது, நூற்றுக்குத் தொண்ணூறு தற்குறி களும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான மூடக் களஞ்சியங் களும் பகுத்தறிவில்லா உருவேற்றிகளும் குடிகொண்ட இந் நாட்டில், மொழி நூலைப்பற்றித் தவறான கருத்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

மொழியானது இந்நாட்டிற் பொதுவாய்க் கருதப்படுகிறபடி, இறைவனாற் படைக்கப்பட்டதன்று; இயற்கையாய் உள்ளது மன்று; மாந்தனால் ஆக்கப்பெற்றதே. ஆயின், ஒருவனால்

மட்டுமன்று; கழிபலவூழிகளாகக் கணக்கற்ற தலைமுறை யாளரால் சிறிது சிறிதாய் ஆக்கப் பெற்றதாகும். இங்ஙனம் ஆக்கப்பெற்ற மொழிகள் உண்மையில் ஒரு சிலவே. அச்சிலவே, அவற்றின் பல்வேறு நிலைகளில் நிகழ்ந்த திரிபு, சுருக்கம், பெருக்கம், கூட்டு, கலப்பு என்னும் ஐம்முறைகளால்; ஏறத்தாழ மூவாயிரம் மொழிகளாகக் கிளைத்து உலகமெங்கும் பரவியிருக்கின்றன. அம்மூல மொழிகளுள் முதன்மையானது தமிழே என்றும், அது தோன்றிய இடம் மாந்தன் பிறந்தகமாகிய குமரிநாடே என்றும், பத்தாண்டிற்கு முன்னரே வெளியிட்டேன். அதை மெய்ப்பிக்கும் வகையில், முதலாவது இந்நூல் வெளிவருகின்றது. அறிஞர் நடுநிலையாய் ஆய்ந்து தெளிக.

தமிழ் எங்ஙனம் ஒன்றன் சார்பின்றித் தானே தோன்றி வளர்ந்துளதென்பது. இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் விளங்காதிருப்பின், அது அடுத்துவரும் செந்தமிழ்ச் சொல்லியல் நெறிமுறைகள், 'வடமொழி வரலாறு' என்னும் நூல்களால் வெள்ளிடை மலையாம்.

பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி

மிகுத்ததினால் ஏது பயன்?

**சேலம்**
***21.2.1949*** **ஞா.தேவநேயன்**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | ... | iii |
| வான்மழை வளச்சுரப்பு | ... | v |
| சான்றிதழ் | ... | vii |
| முகவுரை | ... | ix |
| **நூல்:** | | |
| **1. குறிப்பொலிக் காண்டம்** | ... | 13 |
| 1. உணர்வொலிப் படலம் | ... | 13 |
| 2. ஒப்பொலிப் படலம் | ... | 14 |
| (1) உயர்திணை யொலிகள் | ... | 14 |
| (2) அஃறிணை யொலிகள் | ... | 14 |
| (3) விரவுத்திணை யொலிகள் | ... | 16 |
| (4) ஒலிக்குறிப்புகளைப்பற்றிக் கவனிக்க வேண்டியவை | ... | 16 |
| 3. குறிப்பொலிப் படலம் | ... | 21 |
| (1) வாயொலி | ... | 21 |
| (2) மூக்கொலி | ... | 21 |
| 4. வாய்ச்செய்கையொலிப் படலம் | ... | 22 |
| (1) ஆவி | ... | 23 |
| (2) அவ்வு | ... | 23 |
| 5. குழவி வளர்ப்பொலிப் படலம் | ... | 25 |
| (1) குழவியொலிகள் | ... | 25 |
| (1) உள்ளாவொலி | ... | 25 |
| (2) உள்ளியவொலி | ... | 25 |
| (2) தாயொலிகள் | ... | 26 |
| **2. சுட்டொலிக் காண்டம்** | ... | 27 |
| 1. சுட்டுக் கருத்து வளர்ச்சிப் படலம் | ... | 27 |
| (1) சுட்டொலிகள் | ... | 28 |
| (2) ஊகாரச் சுட்டுக் கருத்து வளர்ச்சி | ... | 31 |
| (3) ஈகாரச் சுட்டுக் கருத்து வளர்ச்சி | ... | 33 |
| (4) ஆகாரச் சுட்டுக் கருத்து | ... | 33 |
| 2. சுட்டொலித் திரிபுப் படலம் | ... | 34 |
| 3. ஊகாரச் சுட்டுப் படலம் | ... | 39 |
| **(1) முன்மையியல்** | ... | 39 |
| (1) முன்மைச்சுட்டு | ... | 39 |

(2) முன்னிலைப் பெயர் ... 40
(3) முன்மை (காலமும் இடமும்) ... 42
(4) முதன்மை ... 42
(5) முதுமை ... 42
(6) முன்னுறுப்பு ... 43
(7) முற்பகுதி ... 44
(2) **முன்னுறலியல்** ... 45
(1) தோன்றுதல் ... 45
(2) இளமை ... 47
(3) மடமை ... 50
(4) புதுமை ... 51
(5) பசுமை ... 52
(6) மென்மை ... 53
(7) முன்தள்ளி வருதல் ... 53
(8) தருதல் ... 54
(9) முற்செலவு ... 55
(3) **முற்செலவியல்** ... 56
(1) முன்தள்ளல் ... 56
(2) நீக்கல் ... 58
(3) துள்ளுதல் ... 59
(4) தெளித்தல் ... 60
(5) முற்செல்லுதல் ... 62
(6) விரைவு (துடுக்கு) ... 63
(7) நடுக்கம் (அச்சம்) ... 67
(8) வீசுதல் ... 67
(9) ஊக்குதல் ... 68
(4) **மேற்செலவியல்** ... 69
(1) எழுதல் ... 69
(2) புளித்துப் பொங்குதல் ... 70
(3) உவர்த்துப் பொங்குதல் ... 71
(4) உயர்ச்சி ... 72
(5) உச்சி (தலை) ... 75
(6) உச்சியணி ... 76
(7) தொங்கல் ... 76
(8) உயர்ச்சி குறிக்கும் இகரமுதற் சொற்கள் ... 77
(9) உயர்ச்சி குறிக்கும் எகரமுதற் சொற்கள் ... 78
(10) தன்மைப்பெயர் ... 82
(11) வினாச்சொல் ... 84
(12) உயர்ச்சி குறிக்கும் அகரமுதற் சொற்கள் ... 84

(13) குரவர் பெயர் ... 85
(14) பின்மை ... 87
(5) **நெருங்கலியல்** ... 88
(1) அணுகல் ... 88
(2) செறிதல் ... 89
(3) ஒடுங்கல் ... 90
(6) **தொடுதலியல்** ... 91
(1) தொடுதல் துறை ... 92
மெலிதாய்த் தொடுதல் ... 92
i தொடும் உறுப்பு (புறணி) ... 92
ii. தொடங்கல் ... 92
iii. தொடுப்பு ... 93
iv. துடக்கு ... 93
v. தொடர்ச்சி ... 93
(2) முட்டல் துறை ... 94
i. வலிதாய்த் தொடுதல் ... 94
ii. முட்டுக் கொடுத்தல் ... 95
iii. ஒலித்தல் ... 96
iv. தட்டல் (தடை) ... 99
v. கடை ... 100
vi. எல்லை ... 102
vii. முடிதல் ... 103
viii. மழுங்கல் ... 104
ix. மதிமுட்டு ... 105
x. மதி மழுக்கம் ... 105
xi. மொட்டையாதல் ... 105
xii. மங்கல் ... 107
xiii. வழித்தல் ... 108
xiv. வடித்தல் ... 109
xv. வார்தல் (நீளல்) ... 110
xvi. வழுக்கை ... 110
xvii. வழுக்கல் ... 111
xviii.நழுவல் ... 111
xix. குட்டையாதல் ... 113
xx. தட்டையாதல் ... 113
xxi. படர்தல் ... 119
xxii. அமுங்குதல் ... 121
(3) **குத்தல் துறை** ... 122
i. குத்துதல் ... 122
ii. குந்துதல் ... 122

| | | | |
|---|---|---|---|
| | iii. நேராதல் | ... | 123 |
| | iv. குத்தும் பொருள்கள் | ... | 123 |
| | v. குறண்டும் பொருள்கள் | ... | 125 |
| | vi. சுரசுரப்பு | ... | 126 |
| | vii. குத்தும் பொருள்களின் கூர்மை | ... | 127 |
| | viii. குத்துவதால் உண்டாகும் புள்ளி | ... | 127 |
| | ix. நுண்மை | ... | 128 |
| | x. நுண்வினைகள் | ... | 128 |
| | xi. நுண்பொருள்கள் | ... | 130 |
| | xii. குறும்பொருள்கள் | ... | 131 |
| (4) | **உறைத்தல் துறை** | ... | 135 |
| | i. சுடுதல் | ... | 135 |
| | ii. எரிதல் | ... | 136 |
| | iii. விளங்குதல் | ... | 137 |
| | iv. நீறாதல் | ... | 140 |
| | v. காய்ச்சுதல் | ... | 140 |
| | vi. உலர்தல் | ... | 141 |
| | vii. செந்நிறம் | ... | 142 |
| | viii. தெரிதல் | ... | 145 |
| | ix. அறிதல் | ... | 146 |
| | x. ஆராய்தல் | ... | 146 |
| | xi. தெளிதல் | ... | 146 |
| | xii. நீர்த்தெளிவு | ... | 147 |
| | xiii. கள்தெளிவு | ... | 148 |
| | xiv. வெண்மை | ... | 149 |
| | xv. வெளுத்தல் | ... | 149 |
| | xvi. வெண்மையான பொருள்கள் | ... | 149 |
| | xvii. தூய்மை | ... | 151 |
| | xviii. வெறுமை | ... | 151 |
| | xix. வறுமை | ... | 152 |
| | xx. வீண்மை | ... | 153 |
| | xxi. வெளி | ... | 153 |
| | xxii. வெளிப்பாடு | ... | 153 |
| | xxiii. சோம்பல் | ... | 154 |
| | xxiv. உறைப்பு | ... | 155 |
| | xxv. கடும்புளிப்பு | ... | 155 |
| | xxvi. சினத்தல் | ... | 156 |

# முதற்றாய் மொழி - 1

# முன்னுரை

*"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது*
*தன்னே ரிலாத தமிழ்."*

## குமரிக்கண்டமே மாந்தன் பிறந்தகம்

வரலாற்று நூல், நிலநூல் (Geology), கடல்நூல், (Oceanography), உயிர்நூல் (Biology), மாந்தனூல் (Anthropology) முதலிய பலநூல் ஆரா-ச்சியாளரும் குமரிக்கண்டமே (Lemuria) மாந்தன் பிறந்தகமா யிருந்திருத்தல் வேண்டுமென, ஓரிரு நூற்றாண்டுகட்கு முன்பே கூறிப் போந்தனர். மொழிநூலும் தமிழிலக்கியமும், அவர் தத்தம் நூற்சான்றுகொண்டு செ-த முடிபை வலியுறுத்துகின்றன. ஆயினும், வேற்றோர் பகைமையாலும் தன்னோர் அக்கறையின்மை யாலும், இவ் வுண்மை இன்னும் மறையுண்டு கிடக்கின்றது.

குமரிக்கண்டமே மாந்தன் பிறந்தகம் என்பதற்குக் காரணங் களாவன:

### (1) குமரிக்கண்டத்தின் தொன்முது பழைமை

மாந்தன் மட்டுமன்றி அவனுக்கு முந்திய விலங்கும், பறவையும் தோன்றுமுன்புகூட, குமரிக்கண்டம் நீண்ட காலமாக நிலைத்திருந்த தென்று, யோவான் இங்கிலாந்து (John England) கூறுகின்றார்.

### (2) தென்ஞால மக்களின் முந்தியன்மை (Primitiveness)

முந்தியல் மாந்தருட் பெரும்பாலார் தென்ஞாலத்திலேயே வாழ் கின்றனர். செவ்விந்தியரின் முன்னோரும் எசுக்கிமோவரின் முன் னோரும் தென்ஞாலத்தினின்றே ஆதியில் வடஞாலத்திற்குச் சென்ற தாகத் தெரிகின்றது.

### (3) தென்ஞால மொழிகளின் முந்தியன்மை

பண்பாடு பெறாதனவும், இலக்கியமில்லாதனவும் சொல்வளம் அற்றனவும், எட்டும் பத்தும் பன்னிரண்டுமாகச் சிறுதொகையான மெ-யொலிகளைக் கொண்டனவுமான, பழஞ்சிறுமொழிகள், தென் ஞாலத்திலேயே மிகுதியாக வழங்குகின்றன.

### (4) ஞாலத்தின் நடுமை

மாந்தன் பிறந்தகமாகக் கருதப்படும் பல்வேறு இடங்களுள், நண்ணிலக்கோட்டைச் சார்ந்து ஞாலத்தின் நடுமையாக இருப்பது குமரிக்கண்டமிருந்த இடமே.

### (5) மாந்த எலும்புக்கூடுகளில் மிகப் பழைமையானது சாவகத்தில் எடுக்கப்பட்டமை

இதுபோது கிடைத்துள்ள பழைய மாந்த எலும்புக் கூடுகளில், மிக முந்தியல் வா-ந்தது, குமரிக்கண்ட வெல்லையைச் சார்ந்த சாவகத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

### (6) மாந்தவினத்திற்கு அடுத்து முற்பட்ட காலவகைக் குரங்கின மும் குமரிக்கண்டத்திற்கே யுரிமை

இனங்களின் தோற்றத்தில், மாந்தர்க்கு முற்பட்டவையாகக் கொள்ளப்படும் முசு (lemur), வானரம் (monkey), கபி (ape), மாந்தற்போலி (anthropoid) என்னும் நால்வகைக் குரங்கும் குமரிக் கண்டத்திற்கே யுரியன. அவற்றுள் ஈற்றது இன்று இறந்துபட் டிருப்பினும், சாவகத்தில் எடுக்கப்பட்டுள்ள மாந்த எலும்புக்கூடு 'நிமிர்ந்த குரங்கு மாந்தன்' (Pithecanthropos erectus) என்னும் மாந்த வகைக் குரியதாகக் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது; கபிக்கும் நிமிர்ந்த குரங்கு மாந்தனுக்கும் இடைப்பட்டது மாந்தற் போலி, நிமிர்ந்த குரங்கு மாந்தனே மாந்தனின் முந்துநிலை. முசு மடகாசுக்கரிலும் (Madagascar) கீழிந்தியத் தீவுக்கணத்திலும், கபியைச் சேர்ந்தவற்றுள் கானரம்[1] (orangoutang), கிபன் (gibbon) என்னும் இரண்டும் கீழிந்தியத் தீவுக்கணத்திலும், வாழ்கின்றன.

கபிகள் மாந்தற்போலிக்கு நெருக்கமாயிருப்பதுபற்றி, அவற்றை மாந்தற்போலிக் கபி (anthropoid ape) என அழைப்பர்.

---

1. கானரம் (கான்நரம்) = காட்டுமாந்தன்.

**(7) குமரிக்கண்டம் வெப்பமண்டிலத்தைச் சேர்ந்திருந்தமை**

உடல் முழுதும் அடர்ந்த மயிர் போர்த்துக் குரங்கு நிலையி லிருந்த மாந்தற்போலி, மயிருதிர்ந்து மாந்தனாதற்கு வெப்ப மண் டிலமே ஏற்றதாம்.

மேலும், ஞாலத்தின் முதுபழங்காலத்தில் வடக்கிலும் தெற்கிலும் சமதட்பமண்டலத்தில் உறைபனியூழிகள் (Glacial periods) மாறி மாறி நிகழ்ந்ததாக நிலநூல் வல்லார் கூறுவதால், அதனாலும், நண்ணிலக் கோட்டைச் சார்ந்த வெப்பமண்டிலமே மாந்தன் பிறந்தகமாகக் கொள்ளப்படத்தக்கதாம்.

**(8) குமரிக்கண்டத்தின் வளச்சிறப்பு**

குரங்கினங்களும் அநாகரிக மாந்தனும் இயற்கையுணவை யுண்டு வாழ்தற்குப் போதிய வளச்சிறப்பையுடையது தென்ஞாலமே! அதிலும் குமரிக்கண்டமே.

உயிர்நூலும் மாந்தனூலும்பற்றிய பல்வேறு சான்றுகளைக் கொண்டு, குமரிக்கண்டத்தில் மடகாசுக்கருக்கு அண்ணிய இடமே மாந்தன் பிறந்தகமா யிருந்திருத்தல் கூடுமென ஊகிக்கின்றார் உயிர்நூல் வல்லாரான எக்கேல் (Haeckel) பேராசிரியர்.

**மக்கள் ஞாலத்திற் பரவியவகை**

குமரிக்கண்டத்தில் தோன்றிய மாந்தனினம், ஞாலத்திற் பல விடத்தும் பரவியமைக்குக் காரணங்களாவன:

**(1) இனப்பெருக்கம்**

மாந்தவினம் தோன்றியதிலிருந்து அது மேன்மேலும் பெருகி வருவதால், மக்கள் ஞாலமெங்கும் பரவியுள்ளமைக்கு முதற்காரணம் இனப்பெருக்கமே. ஒரேயிடத்தில் மிகப் பலர் கூடிவாழும்போது, இட வசதியும் உணவுவசதியும் குறைகின்றன. அவற்றை முற்றும் பெறு தற்குச் சிலர் பிரிந்துவாழ நேர்கின்றது.

**(2) இயற்கை விளைவு போதாமை**

மாந்தன் அநாகரிக நிலையிலிருந்தபோது இயற்கை விளைவையே முற்றுஞ் சார்ந்திருந்தான். ஒவ்வொரு விளையுட்கும் ஒவ்வொரு காலமும் இடமு முண்மையால், பழங்கால மாந்தர் பழுமரந் தேரும்

பறவைகள்போல் அடிக்கடி இடம் பெயர்ந்து வாழவேண்டி யிருந்தது. முதன்முதற் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த அநாகரிக மாந்தர் பிற நிலங் கட்குச் சென்றமைக்கு இதுவே பெருங்காரணம்.

**(3) செயற்கை விளைவு**

மாந்தர் செயற்கை விளைவைக் கண்டுபிடித்தபின் பலர் நில வளமும் நீர்வளமும் ஒருங்கேயுள்ள மருதநிலந் தேடிச் சென்று ஆங் காங்கு வாழநேர்ந்தது.

**(4) நிரைமே-ப்பு**

ஆடு மாடு எருமை ஆகிய முந்நிரையின் பயனையே உண்டு வாழ்ந்தவர், அவற்றிற்கு வேண்டும் புன்னிலந் தேடிச் சென்று நாடோடியர் ஆயினர்.

**(5) விலங்கச்சம்**

குறிஞ்சியிலும் அடவியான முல்லையிலும் வாழ்ந்த மாந்தர், என்றும் கொடிய விலங்குகளொடு போராட வேண்டியிருந்ததினால், அப் போராட்டத்தினின்று நீங்குதற்கு அவருட் சிலர் காட்டுச் சார்பை விட்டு நாட்டுச் சார்பை யுற்றனர்.

**(6) கொள்ளையும் போரும்**

வறண்ட நிலமாந்தரும் உணவு விளைக்காத கூட்டத்தாரும், அண்டையிலிருந்த உழவரையும் இடையரையும் கொள்ளையடித்தும் கொன்றும் வந்ததனாலும், முந்தியல் மாந்தரின் போரிலெல்லாம் தோற்ற குலத்தார் அனைவரும் கொலையுண்பது மரபாதலாலும், கொள்ளைக்குலத்தையும் பகைக்குலத்தையும் அடுத்துவாழும் எளிய குலத்தார் தொலைவாகச் சென்றுவிடுவதுமுண்டு.

**(7) இயற்கைப் பேரூறு**

கடல்கோள், எரிமலைக் கொதிப்பு, நிலநடுக்கம் முதலிய இயற்கைப் பேரூறு நிகழ்ந்தவிடத்தாருள், இறவா தெஞ்சியவர் வேறிடஞ் சென்றுவிடுவது பெரும்பான்மை.

**(8) வணிகம்**

இருவகை வணிகமும்பற்றி நிலங்கடந்தும் நீர்கடந்தும் நெடுந் தொலைவு சென்று வாழ்பவர் பலர்.

**(9) கடற்புயலும் கலச்சேதமும்**

கலஞ்செல் மக்களுள், கடற்புயலால் ஒதுக்கப்பட்டவரும், கலமுழுகித் தப்பியவரும், அடுத்த தீவிலும் நாட்டிலும் கரையேறித் தங்கி விடுவதுண்டு.

**(10) துணிசெயல் (Adventure)**

உறுவலியுங் கடுமறமுங் காரணமாக, துணிசெயல் நாடிச் சேணெடுந் தொலைவு சென்றுவாழும் இளைஞருமுளர்.

**(11) பஞ்சம்**

ஒரு நாட்டிற் பஞ்சம் நீடிப்பின், அந் நாட்டார் வளநாடு தேடிச் சென்றுவிடுவர்.

**(12) தண்டனை**

காட்டிற்குத் துரத்துவதும் நாடுகடத்துவதும், கடுங்குற்றவாளி கட்குப் பன்னாட்டரசியலாரும் தொன்றுதொட்டு இட்டு வருந் தண்டனையாகும்.

**(13) அரசியற் கொடுமை**

ஒரு நாட்டில் ஏதேனுமொரு காரணம்பற்றி அரசியலாரால் ஒடுக்கப்படுபவர், விடுதலை நாடிப் பிறநாடு செல்வர்.

**(14) பிறநாட்டு விருப்பம்**

ஓர் அயல்நாட்டின்மேல் ஒருவர் விருப்பங்கொண்டவிடத்து அங்குச் சென்று வாழ்வது இயல்பு.

## மொழி தோன்றிய வகை

இயற்கை விளைவையே முற்றுஞ் சார்ந்திருந்த அநாகரிக மாந்தர், மணவுறவும் மகவுவளர்ப்பும் பற்றி நிலையற்ற குடும்ப அள வான கூட்டுறவு பூண்டு வாழ்ந்து வந்தனர். அவர் கூடி வாழ்ந்தபோது ஒருவர்க்கொருவர் தத்தம் கருத்தைப் புலப்படுத்த வேண்டியதாயிற்று. அதற்குக் கண்சாடை, முகக்குறிப்பு, சைகை, நடிப்பு, உடலசைவு முதலிய செ-கைகளையும்; உணர்வொலிகள் (Emotional Sounds), விளியொலிகள் (Vocative sounds), ஒப்பொலிகள் (Imitative Sounds), குறிப்பொலிகள் (Symbolic Sounds), வா-ச்செ-கையொலி (Gesticulatory Sounds), குழவி வளர்ப் பொலிகள் (Nursery Sounds), சுட்டொலி (Deictic Sounds) ஆகிய எழுவகை யொலிகளையும்; இயற்கையாகவும் செயற்கையாகவும் ஆண்டு வந்தனர்.

செயற்கை விளைவை அறிந்துகொண்ட முந்தியல் மாந்தர், பயிர்த்தொழிலைச் செ-தற்கும் தற்காப்பிற்கும் தத்தம் பிள்ளை களுடனும் பேரப்பிள்ளைகளுடனும் கொட்பேரப்பிள்ளைகளுடனும், கூட்டங்கூட்டமாக ஒவ்வோரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய பின், நிலைத்த விரிவுபட்ட கூட்டுறவு ஏற்பட்டது; நாகரிகம் தோன்றி வளர்ந்தது; கருத்துகள் பல்கின. அவற்றைக் குறிக்கச் சொற்கள் வேண்டியிருந்தன. பழைய எழுவகை யொலிகளினின்றும் படிப்படி யா-ச் சொற்கள் பிறப்பிக்கப்பட்டன.

சொற்கள், முறையே,

(1) அசைநிலை (Monosyllabic Stage),
(2) புணர்நிலை (Compounding Stage),
(3) பகுசொன்னிலை (Inflexional Stage),
(4) கொளுவு நிலை (Agglutinative Stage),

என்னும் நால்வகை நிலைகளையடைந்து நிறைவடிவுற்றன.

கருத்துகள் மேன்மேலும் புதிது புதிதா-த் தோன்றத் தோன்றச் சொற்களும் ஆக்கப்பட்டுக்கொண்டே வந்ததனால், மொழியானது வளர்ச்சி யடைந்துகொண்டே யிருந்தது. பிற்கால மொழியை நோக்க முற்கால மொழிநிலை குறைபாடுள்ளதேனும், ஒரு குறிப்பிட்ட கால மொழிநிலையைத் தனிப்பட நோக்கும்போது, அது அக்காலத்திற் கேற்ப நிறைவுள்ளதாகவே யிருக்கும்.

குறிஞ்சிநிலத்தைவிட முல்லைநிலத்திலும், முல்லைநிலத்தை விட மருதநிலத்திலும், உழவு சிறப்பா-ச் செ-யப்பட்டது. .உழவிற்குத் தக்க ஊர்ப்பெருக்கமும், ஊர்ப்பெருக்கத்திற்குத் தக்க நாகரிகமும், நாகரிகத்திற்குத் தக்க மொழிவளர்ச்சியும், ஏற்பட்டன.

குறிஞ்சியினின்று மாந்தர் பிற நிலங்கட்குச் செல்லுமுன்னரே, மொழிக்கு அடிப்படையான சொற்களெல்லாம் தோன்றிவிட்டன. பிற நிலங்களில், வெவ்வேறு பொருள்களையும் வினைகளையும் குறித் தற்கு, வெவ்வேறு சொற்றொகுதிகள் எழுந்தன. பண்டமாற்றினாலும் ஆட்சிவிரிவினாலும் திணைமயக்கம் ஏற்பட்டதனால், நானில அல்லது ஐந்திணைச் சொற்றொகுதிகளுஞ் சேர்ந்து வளமுள்ள ஒரு பெருமொழி தோன்றிற்று. இங்ஙனம் குமரிக்கண்டத்தில் தோன்றிய மொழியே தமிழாகும்.

உலக முதற் பெருமொழியாக்கம் மிக மெல்ல நடைபெற்றிருக்கு மாதலானும், அதன் பின்னிலைகளினும் முன்னிலைகள் அமைதற்கு நீண்ட காலஞ் சென்றிருக்கு மாதலானும், நிமிர்ந்த குரங்குமாந்தன் (p.e.) காலம் கி.மு. 500,000 என்று மாந்தனூல் வல்லார் கூறியிருத்த லானும், தமிழ்மொழி குறிப்பொலி நிலையினின்று நால்வகைச் சொன்னிலையும் அடைதற்கு, ஏறத்தாழ ஓரிலக்கம் ஆண்டுகள் சென்றிருத்தல் வேண்டும். அதன் திருந்திய மொழிநிலை கி.மு. 25.000 ஆண்டுகட்கு முன்னரே ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

## தமிழ் முதற்றா-மொழி யென்பதற்குக் காரணங்கள்

(1) மாந்தன் பிறந்தகமாகிய குமரிக்கண்டத்தில் தமிழ் தோன்றி யுள்ளமை.

(2) இதுபோதுள்ள மொழிகளுள் தமிழ் மிகப் பழைமையான தாயிருத்தல்.

(3) தமிழ் எளிய வொலிகளைக் கொண்டிருத்தல்.

(4) தமிழிற் சிறப்புப்பொருள் தருஞ் சொற்கள் பிற மொழிகளிற் பொதுப்பொருள் தருதல்.

**எ – டு: செப்பு (தெ.), தா (இலத்தீன்).**

(5) தமிழ் இயற்கையான சொல்வளர்ச்சி யுடைமை (செயற்கை யான சொல்வளர்ச்சியின்மை).

(6) ஆரிய சேமியமொழிச் சொற்கள் பலவற்றின் வேரைத் தமிழ் தன்னகத்துக் கொண்டிருத்தல்.

(7) பல மொழிகளின் மூவிடப் பதிற்பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப் பெரிதுஞ் சிறிதும் ஒத்திருத்தல்.

(8) தா-தந்தையரைக் குறிக்கும் தமிழ் முறைப்பெயர்கள், ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் திரிந்தும் திரியாதும் வழங்கிவருதல்.

(9) தமிழ்ச்சொற்கள் வழங்காப் பெருமொழி உலகத்திலின்மை.

(10) ஒரு தனிமொழிக்குரிய தோற்ற வளர்ச்சி முறைகளைத் தமிழே தெரிவித்தல்.

(11) சில பல இலக்கண நெறிமுறைகள் தமிழுக்கும் பிற மொழி கட்கும் பொதுவாயிருத்தல்.

(12) பல மொழிகள் தமிழிலுள்ள ஒருபொருட் பலசொற்களுள் ஒவ்வொன்றைத் தெரிந்துகொண்டிருத்தல்.

**எ–டு: இல் (தெலுங்கு), மனை (கன்னடம்), அகம் (கிரேக்கம்), குடி (பின்னியம்).**

(13) பிறமொழிகட்குச் சிறப்பாகக் கூறப்படும் இயல்களின் மூல நிலைகள் தமிழிலிருத்தல். (எ-டு.) ஆரிய மொழிகளின் அசை யழுத்தமும் சித்திய மொழிகளின் உயிரிசைவு மாற்றமும் அமெரிக்க மொழிகளின் பல்தொகை நிலையும் போல்வன.

## பெரும்பான் மொழிகள் தமிழை ஒவ்வாதிருத்தற்குக் காரணங்கள்

தமிழ் முதற்றா-மொழியாயினும், பெரும்பான் மொழிகள் அதை ஒத்திருக்கவில்லை. அதற்குக் காரணங்களாவன:

(1) குமரிக்கண்டத்தில் மொழி தோன்று முன்னமே, சில மாந்தர் கூட்டங்கள் வெவ்வேறு திசையிற் பிரிந்து சென்று, ஆங்காங்கு வெவ்வேறு முறையில் ஒவ்வொரு சிறுமொழி வளர்த்துக்கொண்டமை.

(2) தமிழின் நால்வகை நிலையிலும் மக்கள் குமரிக்கண்டத் திலிருந்து வெவ்வேறிடம் பிரிந்து சென்றமையும், அவர்கள் மொழிகள் பலவகையில் திரிந்துபோனமையும்.

(3) குமரிக்கண்டத்திலிருந்து பிரிந்து சென்ற மக்கள், சென்ற தேயத்துச் சூழ்நிலைக்கேற்பப் புதுச்சொற்களை ஆக்கிக்கொண்ட பின், இன்றியமையாத அடிப்படைச் சொற்கள் தவிர ஏனைய தமிழ்ச் சொற்களெல்லாம் வழக்கின்றி மறைந்து போனமை.

(4) ஏறத்தாழ ஐம்பான் சொல்லாலும் அறுபான் சொல்லாலும் தம் கருத்துகளையெல்லாம் தெரிவிக்கும் அரை நாகரிக நாடோடிச் சிறு குல மாந்தர், அடிக்கடி தம் மொழியை அடியோடு மாற்றிக்கொண்டி ருந்தமை.

(5) போராலும் வலக்காரத்தாலும் வெல்லப்பட்ட மக்கள். வென்ற மக்களின் மொழியை முற்றும் அல்லது பெரும்பாலும் மேற்கொண்டமை.

(6) மொழிகள் மேன்மேலுந் திரிந்துகொண்டே வந்தமை.

## மொழிகள் மாந்தன் அமைப்பே

மொழிகள் என்றுமுள்ளவை யென்றும், இறைவனால் படைக்கப் பட்டவை யென்றும், இயற்கையா- அமைந்தவை யென்றும், சில

மொழிகள் தேவமொழி யென்றும்; பல தவறான கருத்துகளை இன்றும் பல இந்தியர் கொண்டுள்ளனர்.

மொழிகளெல்லாம் படிப்படியாகவும் சிறிது சிறிதாகவும் மாந் தனால் வளர்க்கப்பெற்றவையே. அவற்றுள் ஒருசில தனித்தனி யெழுந்த தனிமொழிகள்; ஏனைய இரண்டும் பலவும் கலந்த கலவை மொழிகள். உலகிலுள்ள மொழிகளெல்லாம் மக்கள் மொழிகளே.

மொழிகள் மாந்தன் அமைப்பே யென்பதற்குக் காரணங்களாவன:

(1) மொழியில்லாத அநாகரிக மாந்தர் இன்றும் சில மலை களிலும் காடுகளிலும் வாழ்ந்துவருதல்.

(2) மொழியுள்ள மக்களின் பிள்ளைகளெல்லாம், தம் பெற்றோர் மொழியை, அவரிடத்தும் பிறரிடத்தும் சிறிது சிறிதா-த் தம் பிள்ளைப் பருவத்திற் கற்றே பேசப் பழகுதல்.

குழவிப் பருவத்திலேயே மக்கட் கூட்டத்தினின்று பிரிக்கப் பட்டு, பேச்சுக் கற்கும் வா-ப்புச் சிறிதுமில்லாமல் வளர்க்கப்படும் எந்த ஆடவனும் பெண்டும், ஒரு மொழியும் பேசாது ஊமையா-த் தானிருக்க முடியும், பிறவிச் செவிடர் எல்லாரும் ஊமையராயிருத் தலை நோக்குக.

(3) மொழிகள், அவற்றைப் பேசும் மக்களின் நாகரிக அளவிற் கேற்ப வளர்ச்சியடைந்திருத்தல்.

(4) இருமொழியும் பல மொழியும் கலந்து பல கலவை மொழிகள் ஒருசில நூற்றாண்டுகட்கு முன் புதிதா-த் தோன்றியிருத்தல்.

(5) பல மொழிகள் வரவர வளர்ச்சியடைந்து வருவது வரலாற்றா லறியப்படல்.

(6) மொழிகள் பலவாயிருத்தல்.

இறைவன் படைப்பாகவாவது இயற்கை யமைப்பாகவாவது மொழியிருந்திருப்பின், ஒரேயினமான உலக மக்கட்கெல்லாம் ஒரே மொழியே யிருந்திருத்தல் வேண்டும்.

(7) கற்கப்படாத மொழிகள் ஒருவனுக்கு விளங்காமை.

மொழிகள் இறைவன் படைப்பாகவாவது இயற்கையமைப்பாக வாவது இருந்திருப்பின், எல்லா மொழியும் எல்லார்க்கும் இயல்பாகவே தெரிந்திருத்தல் வேண்டும்.

(8) இனத்தொடர்புள்ள மக்களின் மொழிகள் சொல்லிலும் இலக் கண நெறிமுறையிலும் பெரும்பாலும் ஒத்தும், அத் தொடர்பில்லா மக்களின் மொழிகள் அவ்விரண்டிலும் பெரும்பாலும் ஒவ்வாதும், இருத்தல்.

(9) இற்றைஞான்றும், புதுக் கருத்துகளைக் குறிக்கும் புதுச் சொற்கள், ஒவ்வொரு மொழியிலும் தோன்றிக்கொண்டும் சேர்க்கப் பட்டுக்கொண்டும் வருதல்.

கருத்துகளைக் குறிக்கும் ஒலிக்குறிகளே சொற்கள்; கருத்துகள் வரவரப் பல்கி வருகின்றன. அநாகரிகக் காலத்தில் கருத்துகள் சில்கி யிருந்திருக்குமாதலின், அவற்றைக் குறிக்கும் சொற்களும் சில்கியே இருந்திருத்தல் வேண்டும்.

## மொழி வளர்ச்சி ஒரு திரிந்தமைவு (Evolution)

மக்கள் கற்றிருக்கும் ஒவ்வொரு கலையும், அதன் தொடக்க நிலையிலிருந்து மெல்லமெல்லத் திரிந்து வளர்ந்து நீண்ட காலத் திற்குப் பின் நிறைவடைந்ததேயன்றி, ஒரேயடியா-த் தோன்றிய தன்று. இதனை ஈரெடுத்துக் காட்டுகளால் விளக்குவாம்.

இதுபோது மக்கள் பயிலும் கலைகளுள் ஆசிரியப் பயிற்சியும் ஒன்றாம். ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும் கல்லூரிகளும் தோன்று முன், ஆசிரியத் தொழிலிற் புகும் ஒவ்வொருவரும் தத்தம் ஆசிரியர் தமக்குக் கற்பித்த முறையில் ஒரு கூற்றையன்றி வேறொன்றும் அறியாதவரா யிருந்தனர். அதனால், அவரது ஊழிய முற்பகுதியில் மாணவ ருளங்கொளக் கற்பிக்கும் ஆற்றலற்றவரா யிருந்தனர். தற் காலக் கற்பிப்பு முறையில் ஒரு பகுதியை அஃதாவது நுவற்சி நெறி முறைகள் சிலவற்றைக் கண்டறிதற்கும், அவர்க்கு நீண்ட காலஞ் சென்றது. ஆகவே, அவருடைய பிற்கால மாணவரே அவர் கற்பிப் பால் பெரும் பயன் பெறமுடிந்தது. ஆயின், ஆசிரியப் பயிற்சி ஏற்பட்டபின்போ, ஆசிரிய வூழியத்தை மேற்கொள்ள விரும்பும் ஒவ்வொரு மாணவரும், அவ் வூழியத்தைத் தொடங்கு முன்னரே, நுவற்சி நெறிமுறைக ளெல்லா வற்றையும், ஆசிரியப்பயிற்சி வாயி லா- ஒருங்கே அறிந்துகொள்கின்றனர். அந் நெறிமுறைகளெல்லாம் ஒருவராலேயே அல்லது ஒரே தலைமுறையில் கண்டுபிடிக்கப் பட்டவையல்ல. பல நூற்றாண்டுகளாக, பற்பல நுண்மாண் நுழைபுல ஆசிரியரால், ஒவ்வொன்றாகக் கண்டுபிடிக்கப்பட்ட நுவற்சி நெறி முறைகளின் தொகுதியே, இற்றை ஆசிரியப் பயிற்சியாகும்.

முதற்கால மாந்தர் உணவுப்பொருள்களைப் பச்சையாகவே உண்டு வந்தனர்; அதன்பின் சுட்டுண்ணக் கற்றனர்; அதன்பின் முறையே, அவித்துண்ணவும், உப்பிட்டவித்துண்ணவும், மசாலை யென்னும் கறிச்சரக்குச் சேர்த்துக் குழம்பு கூட்டு சாறு முதலியன கா-ச்சவும், வறுவல் பொரியல் சுண்டல் புழுக்கல் முதலிய முறை களைக் கையாளவும், அற்றைப் பலகாரஞ் செ-யவும், நீண்டநாட் பலகாரஞ் செ-யவும், கற்றனர். இவற்றிற்குச் சென்ற காலம் எத் துணையோ ஊழிகளாகும். ஆயின், இன்றோ, பன்னீடூழிகளாகப் படிப் படியா- வளர்ந்துவந்த மடைக்கலையை, ஒருவர் சின்னாளில் முற்றும் பயின்றுகொள்கின்றனர்.

இங்ஙனமே, மாந்தன் தோன்றியதிலிருந்து கழிபல ஊழிகளாக வளர்க்கப்பட்ட கருத்தறிவிப்புக் கலையாகிய மொழியும், இன்று ஒவ்வொருவராலும் பெற்றோர் மற்றோர் வாயிலாகப் பிள்ளைப் பருவத்திற் கற்கப்படுகின்றது. ஆயின், இற்றை மொழிநிலை என்றும் இருந்திலது. முதலாவது, விலங்கும் பறவையும் போலப் பல்வேறு குறிப்பொலிகளாலேயே மாந்தர் தம் கருத்தைத் தெரிவித்து வந்தனர். பின்பு, அக் குறிப்பொலிகள் சொன்னிலை யெ-தின. அச் சொற்கள், முற்கூறியவாறு, முறையே அசைநிலை புணர்நிலை பகுசொன்னிலை கொளுவுநிலை ஆகிய நால்வகை நிலைகளை அடைந்தன. அதன் பின், தனிச்சொல்லும் (simple word)கூட்டுச்சொல்லும் (compound word) ஆன சொற்களின் பெருக்கம் ஏற்பட்டு, மொழியானது இற்றை நிலையடைந்தது. இங்குக் கூறப்பட்ட ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு பேரூழி சென்றதென்பதை அறிதல் வேண்டும்.

கி.மு. பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தலைச்சங்கத் தமிழ் முத்தமிழாயிருந்ததனால், அம் முத்தமிழும் ஒன்றுசேரற்கும், அவற் றுக்கு மூலமான இயற்றமிழின் இலக்கணம் அமைதற்கும், அவ் விலக் கணத்திற்கு மூலமான இலக்கியம் எழுதற்கும், அவ் விலக்கியத்தின் சிறந்த வடிவான செ-யுள் தோன்றற்கும், அச் செ-யுட்கு மூலமான உரைநடை அல்லது மொழி தோன்றற்கும், எத்துணையோ ஊழிகள் சென்றிருத்தல் வேண்டும்!

## தமிழ் அல்லது தமிழன் பிறந்தகம் குமரிக்கண்டமே என்பதற்குக் காரணங்கள்

(1) தமிழ் தொன்றுதொட்டுத் தென்னாட்டில் வழங்கிவரல்.

(2) தமிழ்நாட்டில் தெற்கே செல்லச் செல்லத் தமிழ் தூ-மை யாகவும், வடக்கே செல்லச் செல்ல அது திரிந்தும் இருத்தல்.

(3) தமிழ்நாட்டையடுத்து வடக்கும் மேற்கும் தமிழின் திரிபான திரவிடமொழிகள் வழங்கல்.

(4) இந்தியாவில், வடக்கே செல்லச் செல்லத் திரவிட மொழிகள் திரிதல்.

(5) வடஇந்தியாவில் திரவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் வழங்கல்.

(6) இந்தியாவிற்குப் புறம்பாகப் பெலுச்சித்தானத்திலன்றி வேறோரிடத்தும் திரவிட மொழி வழங்காமை.

(7) தமிழிலக்கிய மெல்லாம் தென்னாட்டிலேயே இயற்றப் பட்டிருத்தல்.

(8) வணிகத்தால் பிற நாடுகளினின்று வந்த கருப்பொருள் களன்றி, பண்டை யிலக்கியத்திற் கூறப்பட்டுள்ள முதல் கரு வுரியாகிய மூவகைப் பொருள்களும், தென்னாட்டிற்கே யுரியவை யாயிருத்தல்.

(9) பழம் பாண்டிநாடு குமரிக்கண்டப் பகுதியாகக் கூறப் பட்டிருத்தல்.

(10) தமிழ் ஒலிமுறைமை தென்னாட்டிற்கன்றி வேறொரு நாட்டிற்கும் ஏலாமை.

# ①

# குறிப்பொலிக் காண்டம்

## 1. உணர்வொலிப் படலம்

மக்கள் தம் உள்ளத்துத் தோன்றும் உணர்வுகளை, தம்மையறியா மலே உடன் வெளிப்படுத்தும் வாயில் ஒலிகள், உணர்வொலிகளாம்.

**எடுத்துக்காட்டு:**

| **உணர்வு** | **ஒலிகள்** |
|---|---|
| மகிழ்ச்சி | ஆ, ஊ, ஏ, ஐ, ஆ–, ஓ |
| நோவு | ஆ, ஈ, ஊ |
| வியப்பு | ஆ, ஆஆ (ஆவா) – ஆகா, ஏ, ஐ, ஓ |
| இழிவு | ஊ, பூ |
| இரக்கம் | ஆ, ஆஆ – ஆவா |
| தெளிவு | ஓ, ஓஓ – ஓவோ – ஓகோ |

இவை போல்வனவே பிறவும்.

இவ் வொலிகள், குரல் வேறுபாட்டாலும், மாத்திரை வேறு பாட்டாலும், அசையழுத்த (accent) வேறுபாட்டாலும், அலகுநிலை (pitch) வேறுபாட்டாலும், அவ்வவ் வமையத்திற்கேற்ப வெவ்வேறு உணர்வுகளை உணர்த்தும்.

சில உணர்வுகள் மெல்லிய சகரவொலியால் மட்டும் உணர்த்தப் படும். அவை என் என்னுந் துணைவினை சேர்த்துக் கூறப்பெறும்.

**எ—டு: ஊசு ஊசெனல் (உறைத்தற் குறிப்பு)**

## 2. ஒப்பொலிப் படலம்

இருதிணைப் பொருள்களும் இயற்கையாகவும் செயற்கையாகவும் பிறப்பிக்கும் ஒலிகளைப் போன்ற ஒலிக்குறிப்புகளும், அவற்றை அடியாகக்கொண்ட சொற்களும், ஒப்பொலிச் சொற்களாகும்.

எ—டு:

### (1) உயர்திணை யொலிகள்

| **ஒலிக்குறிப்பு** | **சொல்** |
|---|---|
| சப்(பு) | சப்பு - சப்பிடு - சாப்பிடு - சாப்பீடு - சாப்பாடு |
| சவ(க்கு) | சவை - சுவை, சுவண்டை |
| கறு | கறி (கறித்தல் = மெல்லக் கடித்தல்) |
| கடு | கடி |
| இக்(கு) | விக்கு - விக்கல் |
| ஏவ் | ஏப்பம் |
| இ இ, இசி | இசி - சிரி |
| கெக்கக் கெக்க | கெக்கரி |
| ஏ | ஏங்கு (ஏங்குதல் = பெருமூச்சு விடுதல்) |
| து | துப்பு |
| கார் | காறு |
| ஆ | ஆவலி - அவலி - அவலம் (=அழுகை, துன்பம்) |

| **ஒலிக்குறிப்பு** | **சொல்** |
|---|---|
| குறட்டு | குறட்டை |
| துறட்டு | துறட்டை |
| சீ | சீழ்க்கை, சீத்தை |
| வீள் | வீளை |

### (2) அஃறிணை யொலிகள்

(உயிரி யொலிகள்)

| **ஒலிக்குறிப்பு** | **சொல்** |
|---|---|
| மா | மாடு |
| காள்-காழ்[2] | காழகம், கழுதை (தெ. காடிதெ) |

2. கழுதைக்குக் காதில் உபதேசம் பண்ணினாலும் 'காழ் காழ்' என்கிறதை விடாது என்பது பழமொழி.

| | |
|---|---|
| ஞள் | ஞள்ளை - ஞெள்ளை, ஞாளி - நாளி = நா- |
| குர் | குரங்கு |
| கீர் | கீரி |
| சரசர (என்று நகர்வது) | சாரை |
| காகா | காக்கா - காக்கை, காகம் |
| கூ | குயில் |
| கூம் | கூகை |
| சிள் | சிள் |
| ஈ | ஈ |
| உர் | உரறு |
| உர் | உறுமு |
| ஊள் | ஊளை |
| கும் | குமுறு - குமுறி (ஒருவகைப் புறா) |
| கே | கேர் - கேரு (கேருதல் = கோழி முட்டையிடக் கத்துதல்) கொக்கக் கொக்க கொக்கரி |
| இம் | இமிர் - ஞிமிறு - மிஞிறு, இமிழ் |
| சீத்(து) | சீறு - சீற்றம் (உயிரிலியொலிகள்) |
| சல்சல் | சலங்கை - சதங்கை, சிலங்கை |
| கிலுகிலு | கிலுகிலுப்பை |
| கிண்கிண் | கிண்கிணி |
| உர் | உரும் - உருமு (இடி) |
| விண்(யாழ் நரம்பொலி) | வீணை |

வில்நாணைத் தெறிக்கும்போது எழுமொலியை விண் என்றொலிக்கிறது என்பதையும், வில்லினின்று வில்யாழும் வில்யாழி னின்று வீணையாழும் பிறந்திருத்தலையும், புண்பட்ட நிலையில் உடல் நரம்பு துடிப்பதை விண் விண்ணென்று தெறிக்கிறது என்பதை யும், ஓர்ந்துணர்க.

(உறுமி, கஞ்சுரா (கிஞ்சிரி), கிறி, குடுகுடுப்பை (குடுகுடுக்கை), சல்லரி, சல்லிகை, சாலர், சிங்கி, தகுணிச்சம், தம்புர், பறை, மதங்கம் (மிருதங்கம்), முதலிய இசைக்கருவிப் பெயர்களும்; அகவு கனை குரை பிளிறு முதலிய கத்து வினைச்சொற்களும்; ஒலிக்குறிப்பை யடியாகக் கொண்டு பிறந்தவையே.

சில அஃறிணை யொலிக்குறிப்புகளும் சொற்களும் கடுமை அல்லது இழிவுபற்றி மக்கள் செயலையுங் குறிக்க வரும்.

**எ–டு: சள்ளெனல் = நா–போற் சினத்தல், சீறுதல் = அராப்போற் சினத்தல்.**

## (3) விரவுத்திணை யொலிகள்

| ஒலிக்குறிப்பு | சொல் |
|---|---|
| அ(ள்) | அழு |
| இர் | இரை |
| ஈ | இயம், இயம்பு, இயங்கு[3], இயை-இசை |
| ஏ | ஏங்கு (ஏங்குதல் = ஒலித்தல்) |
| ஓ | ஓசை - ஓதை |
| கர் | கரை |
| கூ | கூ, கூவு, கூப்பு - கூப்பிடு - கூப்பீடு - கூப்பாடு; கூச்சல், கூகை |
| பட்டு | படு (படுதல் = ஒலித்தல்) |

பேரோசையைக் குறிக்கும்போது, ஓகாரமும் ஓகார உயிர்மெ-யு மாகிய இடைச்சொல்லாற் குறிப்பது வழக்கம்.

**எ–டு: ஓவென்று இரைகிறது, கோவென்று அலறினான், சோ வென்று மழை பெ–கிறது.**

அழை, விளி முதலிய பல ஒலிவினைச் சொற்கள் ஒலிக்குறிப் படியினவாகத் தோன்றாவிடினும், உண்மையில் ஒலிக்குறிப்படியினவே எண்ணிறந்த ஒலிக்குறிப்புச் சொற்கள் வழக்கற்று மறைந்தன.

### (4) ஒலிக்குறிப்புகளைப்பற்றிக் கவனிக்க வேண்டியவை

(1) ஒலிக்குறிப்புகள் இத்துணைய வென்றும் இத்தகைய வென்றும் அறியப்படாவாறு எண்ணிறந்தன; பல்திறத்தன.

(2) ஒலிக்குறிப் பெல்லாம் இடைச்சொல்லாம். சொல்லென்று விதந்து சுட்டப்பெறுவன பெயரும் வினையுமாகிய இரண்டே. சொற்றன்மை நிரம்பிய வொலி சொல்லும், நிரம்பாவொலி ஒலிக் குறிப்பும் ஆகும். மண்ணும் மரமும் போலக் கருவிநிலைப்பட்டவை ஒலிக்குறிப்புகள்; குடமும் பெட்டியும் போலச் செ-பொருள் நிலைப் பட்டவை சொற்கள்.

---

3. இயங்கு – இயக்கு. இயக்குதல் – ஒலிப்பித்தல், ‘‘கொடுமணி யியக்கி’’ (திருமுருகாற்றுப் படை, 246)

(3) ஒரேயொலி வெவ்வேறு செவிக்கு வெவ்வேறு வகையா-க் கேட்பதால், ஓர் ஒலிக்குறிப்பு வெவ்வேறு வடிவிலும் அமையலாம்.

எ–டு: குறட்டு, துறட்டு (குறட்டையொலி)
(சலக்கு) – சளக்கு, சளப்பு (துப்பொலி)
வீர்வீர், வீரா வீரா (குழவி கதறொலி)

(4) சில வொலிகள் ஒரே செவிக்கு வெவ்வேறு வகையா-க் கேட்கலாம்.

எ–டு: கு–, சு– (சொ–) = தாளிப்பொலி.
ஓ, உவா – கக்கலொலி.

(ஓ-ஓக்களி, ஓங்களி; உவா - உவட்டு - உமட்டு - குமட்டு)[2]

(5) சில வொலிகள் வாயடைத்த நிலையில் மூக்குவழிப் பிறக்கும் மூச்சொலிகளாதலின், அவை சரியா- ஒத்தொலித்தற்குரியன. அவற்றினின்று பிறக்கும் ஒலிக்குறிப்புகளும் சொற்களும், அவற்றின் மூல வொலிகளை ஒருமருங்கே அல்லது இயன்ற அளவே ஒத்திருக்கும்.

| **ஒலிக்குறிப்பு** | **சொல்** |
| --- | --- |
| எ–டு: | |
| முக்(கு) | முக்கு – முற்கு |
| மூங் | முனங்கு |

முக்குதல் கனமான பொருள்களைத் தூக்கும்போதும், முனங்குதல் கடுநோ-ப்பட்டிருக்கும்போதும், நிகழ்வன.

(6) சில வொலிக்குறிப்பினின்று பிறந்த சொற்கள், மூலவொலி யில்லாத எழுத்தையும் கொண்டிருக்கும்.

| | **ஒலிக்குறிப்பு** | **சொல்** |
| --- | --- | --- |
| எ–டு: | லுலுலுலு | குலவை |

கடைசியர் மங்கல அமங்கல வினைகளில் வாயால் நிகழ்த்தும் ஒலி குலவை.

(7) ஒலிக்குறிப்புகளிற் சில தாமே சொல்லாவன; சில தம்மி னின்று சொற்களைப் பிறப்பிப்பன; சில இரண்டுமன்றி ஒலிக் குறிப்பாகவே நின்றுவிடுவன.

3. வழக்கில், ஓக்களித்தல் என்பது கக்கலுக்கு முந்திய வாயசைவையும், உமட்டல் (குமட்டல்) என்பது வாயசைவிற்கு முந்திய வயிற்றுணர்ச்சியையும், குறிக்கும்.

| ஒலிக்குறிப்பு | சொல் |
|---|---|
| எ—டு: கூ | கூ(கூவு) |
| காகா | காகம் |
| சலக்கு | — |

இங்குக் கூறப்பட்ட மூவியல்புகளும் மக்கள் செயலால் நேர் வனவேயன்றி, ஒலிக்குறிப்புகட்கு இயல்பாக வுரியனவல்ல. மக்கள் செயல் ஒலிக்குறிப்பின்மேல் ஏற்றிக் கூறப்பட்டதென்றே அறிக.

சில ஒலிக்குறிப்புகள் துணைவினையேற்று வினையாகும்.

**எ—டு: ஓ—ஓக்களி. வீர் (வீறு) – வீரிடு (வீறிடு)**

(8) இருதிணை யுயிரிகளும் இயல்பாகக் கத்துவதைக் குறிக்கும் வினைச்சொற்கள் ஒலித்தல், கூப்பிடுதல் என்னும் இருபொருட்கும் ஏற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ—டு: | கத்துதல் | = | ஒலித்தல், | கூப்பிடுதல். |
| | கரைதல் | = | ஒலித்தல், | கூப்பிடுதல். |
| | கூவுதல் | = | ஒலித்தல், | கூப்பிடுதல். |
| | விளித்தல் | = | ஒலித்தல், | கூப்பிடுதல். |
| | அழைத்தல் | = | கத்துதல், | கூப்பிடுதல் |

இவற்றுட் கரை அழை என்னுஞ் சொற்கள் அழுதலையுங் குறிக்கும்.

(9) தமிழிலக்கணத்திற் கொவ்வா ஒலிக்குறிப்புகள் இலக் கணத்திற் கேற்ப மாற்றப்பெறும்.

**எ—டு: லொட்டு – நொட்டு, லலல – தலல.**

(10) ஒலியெழும் வினைகளைக் குறிக்கும் சொற்களில், மெல்லோசை யுணர்த்த மெல்லொலி யெழுத்துகளும் வல்லோசை யுணர்த்த வல்லொலி யெழுத்துகளும் வரும்.

**எ—டு: கறி – கடி.**

**கறித்தல், மெல்லக் கடித்தல்.**

(11) ஒலிக்குறிப்புகளைப் பின்வருமாறு ஐவகையா- வகுக்க லாம்:

| வகை | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1. ஒற்றைக் கிளவி | கிண், மடார், கடக்கு |
| 2. இரட்டைக் கிளவி | சலசல, நெருநெரு |
| 3. அடுக்குக்கிளவி | கிண்கிண், சல்சல், துடும்துடும் |
| 4. எதுகைக் கிளவி | தொப்புத்திப்பு, கி-யா மி-யா |
| 5. மோனைக் கிளவி | கிண்கிணீர், மடமடார். |

ஒருவர் அல்லது பலர் பொருளில்லாது வாயில் வந்தவாறு பேசுவதையும் கத்துவதையுங் குறித்தற்கு, ஆட்பெயரும் பொருட் பெயரும் அடுக்குக்கிளவியாக வருவதுமுண்டு.

**எ–டு: ஆலே பூலே, காமா சோமா, கன்னா பின்னா.**

(12) இரட்டைக் கிளவிகள் அசைநிலைக் காலத்தில் தனித்தும் வழங்கின. தொடர்ச்சி குறிக்கவே அவை அக்காலத்தில் அடுக்குக் கிளவிகள்போல் இரட்டின. அவை தனித்து வழங்கிய அசைநிலைக் காலம் கடந்து கழிபல வூழிகளா-விட்டமையின், அவை தனித்து வருந் தன்மை இன்றுணரப்படவில்லை.

(13) சில அடுக்குச் சொற்களும் தனிச்சொற்களும், 'என' அல்லது 'என்று' என்னும் சொற்சேர்க்கையால், ஒலிக்குறிப்புப் போலத் தோன்றும்.

**எ–டு: மினுமினு வென்று மின்னுகிறது.**
**"குறு குறு நடந்து."**
**சுள்ளென்று வெயிலடிக்கிறது.**
**வெள்ளென விளர்த்தது.**

மினு என்பது மின்னு என்பதன் தொகுத்தல். குறு என்பது குறுகிய எட்டுவைத்தலைக் குறிக்கும் சொல். சுள் என்பது சுடுதலைக் குறிக்கும் பழைய வினைச்சொல். 'மினுமினு வென்று மின்னுகிறது' என்பது 'அடியடியென்று அடித்தான்' என்பது போன்ற வழக்காகும்.

(14) சில ஒலிக்குறிப்புகள் சுட்டொலியொடுங் கலந்துள்ளன. இவ் வுண்மை சுட்டொலிக் காண்டத்தால்தான் விளங்கும்.

(15) சில வொலிக்குறிப்புச் சொற்களினின்று ஒன்றும் பலவுமான வழிமுறைக் கருத்துச் சொற்கள் பிறக்கும்.

**எ–டு: ஈ–ஈயல் – ஈசல். ஈ போன்றது ஈசல்.**

ஒருவன் இருண்ட வேளையில் ஒரு தோற்றத்தைக் கண்டு அரண்டு குழறும் ஒலியினின்று, பே (பேபே) என்னும் ஒலிக்குறிப்புத் தோன்றியுள்ளது. பேபே என்று உளறுகிறான் என்பது வழக்கு. ஓர் அதிகாரியிடம் அல்லது கொடியோனிடம் ஒன்றை உரைக்கும்போது ஒருவன் அஞ்சிக் குழறுதலையும், பேபே என்று உளறுதல் என்பர். ஆகவே, பே என்பது ஓர் அச்சக் குறிப்பொலியாகும். இதனின்று பின்வருஞ் சொற்கள் தோன்றியுள்ளன.

பே - பேம் = அச்சம்.

***“பேநாம் உருமென வரூஉங் கிளவி***
***ஆமுறை மூன்றும் அச்சப் பொருள.”***

என்பது தொல்காப்பியம். (தொல். உரி, 67)

பேதல் = அஞ்சுதல். பே - பே- = அஞ்சப்படும் ஆவி அல்லது தோற்றம்.

பே-தல் = அஞ்சுதல். ‘பேயப்பேய விழிக்கிறான்’ என்பது உலக வழக்கு.

பே- - பேயன் = பே- பிடித்தவன், பேயாடி, பே-பிடித் தவனைப் போன்ற பித்தன், பித்தனைப் போன்ற மூடன்.

பே - பேக்கு = பேதை, மூடன். பேக்கு - பேக்கன். பேக்கு - பேக்கல். பேக்கல் + ஆண்டி = பேக்கலாண்டி.

பே - பேது = பே- பிடித்தாற்போன்ற மருள், மயக்கம், அறியாமை. பேது + உறு = பேதுறு.

பேதுறுதல் = மயங்குதல், பேது - பேதை = மூடன், அறிவிலி, வெள்ளை (கள்ளமிலி). பேதை - ஏதை.

பேது - பேத்து. பேத்துதல் = அஞ்சி உளறுதல், உளறுதல்.

பேத்து - பேந்து. பேந்துதல் அஞ்சுதல். ‘பேந்தப்பேந்த விழிக்கிறான்’ என்பது உலக வழக்கு.

பேந்து = பே-. பேந்து - பேந்தான் = பே-ப்பந்து என்னும் விளையாட்டு.

பேத்து - பீத்து. ஒ.நோ: தேஞ்சுவை - தீஞ்சுவை. பீத்துதல் = உளறுதல். தற்புகழ்ச்சியா- உளறுதல்.

பீத்து - பித்து. ஒ.நோ: தீம் - தித்தி.

பித்து = மயக்கம், மதிமயக்கம், மூளைக்கோளாறு, தலைக் கிறுக்கு, தலைச்சுற்றை யுண்டாக்கும் நீர் (bile), அந்நீரைக்கொண்ட வுறுப்பு (gall - bladder), மயக்கநிலைப்பட்ட காதல் அல்லது அவா.

பித்து - பித்தன் = கிறுக்கன், கழிபெருங் காதலன் அல்லது பற்றினன். பித்து - பிச்சு - பிச்சன்.

பித்து - பித்தம் = பித்து. நீர், பித்தநாடி. பித்தநீர் மிக்கநோ-. அந் நோயால் உண்டாகும் தலைச்சுற்று. மூளைக்கோளாறு, மயக்கம், மயக்கக் காதல்.

பித்தம் - பித்தல். பித்தலாட்டம் = மாறாட்டம், ஏமாற்று.

பித்து - பிதற்று. பிதற்றுதல் = உளறுதல். பிதற்று - பினற்று - பினத்து - பினாத்து. பினாத்துதல் = நோ- நிலையில் உளறுதல்.

## 3. குறியொலிப் படலம்

இசைவு வெறுப்பு முதலிய மனநிலைகளை யுணர்த்தற்கு, வாயாலும் மூக்காலும் இசைக்கும் அடையாள வொலிகள் குறியொலி களாகும்.

### (1) வாயொலி

'ச்சு' என்பது போன்ற ஒலியை வாயா லிசைப்பது, பிறர் கூற்றை ஒப்புக்கொள்வதையும் ஒப்புக்கொள்ளாமல் இகழ்வதையுங் குறிக்கும். இது 'உச்சுக்கொட்டல்' எனப்படும். மறுப்பொலி உடன்பாட்டொலி யினும் வலியதாயும் முகக்குறிப்போடு கூடியதாயு மிருக்கும்.

கையால் வாயிலடித்துக்கொண்டு ஆ வென்று ஆரவாரித்தல் வெற்றிக்குறியாகும். இது 'ஆவலங் கொட்டல்' எனப்படும். (வலம் = வெற்றி)

### (2) மூக்கொலி

வா- மூடியிருக்கும் நிலையில், 'ஊம்' என்பது போன்ற ஒலியை மூக்காலொலிப்பது, உடன்பாட்டைக் குறிக்கும். இது 'உம்மெனல்' அல்லது 'ஊங்கொட்டல்' எனப்படும். இது தனித்த நிலையில் உடன்பாட்டையும் இரட்டிய நிலையில் மறுப்பையுங் குறிக்கும்.

இனி, குரல் வேறுபாட்டாலும் மாத்திரை வேறுபாட்டாலும் அசையழுத்த வேறுபாட்டாலும், ‘ஊங்கொட்டல்’ வியப்பு இழிப்பு வெறுப்பு வெகுளி முதலிய பல குறிப்புகளையும் உணர்த்தும். அன்று அததற்குரிய முகக்குறிப்போடு கூடிவரும்.

இனி, விலங்குகளையும் பறவைகளையும் விளிக்கப் பயன் படுத்தும் ஒலிகளும் ஒருசார் குறியொலிகளே.

| | | |
|---|---|---|
| ஆட்டை அழைக்கும் ஒலி | - | பா-! |
| மாட்டை அழைக்கும் ஒலி | - | பா! |
| நாயை அழைக்கும் ஒலி | - | சூ சூ ! தோ தோ! துவா துவா! |
| கோழியை அழைக்கும் ஒலி | - | பே பே! |

இனி, சரியா- ஒலித்துக்காட்ட முடியாதனவும் மொழிக்குப் பயன்படாதனவுமான, எத்துணையோ குறியொலிகள் உளவென அறிக.

## 4. வா-ச்செ-கையொலிப் படலம்

சில வா-ச் செ-கைகளால் ஏற்படும் வா-நிலைகளை, அச் செ-கைகளைக் குறிக்குஞ் சொற்கள் முற்றுமாயினும் ஒரு மருங் காயினும் அமைக்குமாயின். அவை வா-ச்செ-கை யொலியடிப் பிறந்தவையாம்.

எ—டு:

| **செ-கை** | **செ-கைக்கேற்கும் ஒலி** | **சொல்** |
|---|---|---|
| வா-திறத்தல் | அ, ஆ | அங்கா |
| வா- (பெருமூச்சிற்கும் கொட்டாவிக்கும்) | ஆ | ஆவி |
| வா-ப்பற்றுதல் | அவ் | அவ்வு -வவ்வு - கவ்வு |
| பல்லைக் காட்டுதல் | ஈ | இளி |
| காற்றை வா-வழி முன்றள்ளல் | ஊ | ஊது |

‘ஆ வென்று வாயைத் திறக்கிறான்’, ‘ஈ யென்று பல்லைக் காட்டுகிறான்’ என்னும் வழக்கையும் அவ் என்று சொல்லும்போது கவ்வுகிற வா-நிலை யமைவதையும் காண்க.

## (1) ஆவி

ஆவித்தல் = வா-திறத்தல்; வா-திறந்து பெருமூச்சு விடுதல், கொட்டாவி விடுதல்.

ஆவி = வா-வழிவரும் காற்று, மூச்சு (உயிர்ப்பு), உயிர், ஆன்மா, உயிர்போன்ற தோற்றம்.

## (2) அவ்வு

அவ்வு - வவ்வு - கவ்வு. இவை முறையே, ஔவு, வௌவு, கௌவு என்றும் எழுதப்படும்.

***"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்***
***ஔஎன் நெடுஞ்சினை மெ–பெறத் தோன்றும்."***

அவ்வு (ஔவு)தல் = வாயாற் பற்றுதல். கன்று புல்லை அவ்வி (ஔவி)த் தின்கிறது என்பது வழக்கு.

அவ் - அவ- அவா = வாயினாற் பற்றுதல்போல் மனத்தினாற் பற்றும் ஆசை.

அவ - அவவு - அவாவு. அவாவுதல் = ஆசைப்படுதல்.

அவாவு - ஆவு. ஆவுதல் = ஆசைப்படுதல். ஆவு - ஆவல். ஆர்வத்தோ டணைத்தலை ஆவிசேர்ந்து கட்டுதல் என்பர்.

வவ்வுதல் = வா-ப்பற்றுதல்போற் கைப்பற்றுதல், பறித்தல். வவ்வு - வாவு - வாவல் = பெருவிருப்பம்.

கவ்வுதல் = வாயாற் பற்றுதல்.

கவ் - கவ - கவர். கவர்தல் = பற்றுதல், விரும்புதல்.

***"கவர்வுவிருப் பாகும்"*** ***(தொல். உரி. 64)***

கவ - கா - காதல். கா - காம் - காமம் - காமர்.

காம் + உறு = காமுறு. காமம் - காமன்.

கவ்வுதல் = கவ்வித்தின்னுதல். தின்னுதல்.

கவ்வு - கப்பு. கப்புதல் = கவளங்கவளமாக விழுங்குதல்.

கவ்வு - கவளம் = ஒரு முறை கவ்வும் அல்லது தின்னும் அளவான உணவு.

கவ்வு - கவியம் - கவிகம் = கறுழ் (bit).

கவ - கவவு = கவ்வுதல், கவ்வினாற்போல் அணைத்தல், அகப் படுத்தல், அகத்திடுதல்.

***“கவவகத் திடுதல்”*** ***(தொல். உரி. 59)***

கவவுக்கை = அணைத்த கை.

கவர்தல் = பற்றுதல், அகப்படுத்துதல், வசப்படுத்துதல். கவர் - கவர்ச்சி. கவ்வு - கப்பு = கவர்ச்சி.

கவர்தல் = பற்றுதல், பறித்தல். கவாஅன் = கவருங் கள்வன்.

கவர் - கவறு = கவருஞ் சூதாட்டு, சூதாடு கருவி.

கவ்வு - கவுசனை - கவிசனை = அகத்திடும் உறை.

கவ்வு - கப்பு. கப்புதல் = அகத்திடுதல், மூடுதல்.

கவ - கவை. கவைத்தல் = அகத்திடுதல், இரு கையாலும் அணைத்தல்.

கவ்வு - (கவள்) - கவளி = கவ்வினாற்போல் மேலும் கீழும் சட்டம் வைத்துக் கட்டும் பொத்தகக்கட்டு, கட்டு, வெற்றிலைக் கட்டு. கவளி - கவளிகை.

கவ்வு - கவுள் = கவ்வும் அலகு, கன்னம், உள்வா-, மேல்வா- கீழ்வாயலகுகள் கவ்வுங் குறடு போலிருத்தலால், அலகு கொடிறு எனப்படுதல் காண்க. (கொடிறு = குறடு).

கவ - கவை = கவ்வும் அலகு போன்ற கவட்டை, கிளை. கவ - கவவு = கவட்டை. கவர்தல் = கவ்வும் அலகுபோற் பிரிதல். கவர் = பிரிவு. கவை, கிளை. கவராசம் = இரு கவருள்ள கருவி(divider). கவ்வு - கப்பு = கிளை.

(கவள்) - கவடு = கவை போன்ற தொடைச்சந்து, கவர், கவட்டை, கிளை. கவடு - கவட்டி = கவை, தொடைச்சந்து, கவடு - கவட்டை = கவை, பிரிவு, கிளை, சுண்டுவில்.

(கவள்) - கவண் = கவட்டை போன்ற கயிற்றுக்கருவி. கவண் - கவணை. கவண் - கவண்டு - கவண்டி.

கவணை கவண்டு கவண்டி என்னும் மூன்றும் கவண் என்பதன் மறுவடிவங்களே.

கவ - கவான் = தொடைச்சந்து, தொடை, தொடைச்சந்துபோல் இரு மலைக்குவடுகள் பொருந்தியிருக்கும் இடம்.

கவ - கவல். கவலுதல் = பல கவர்படுதல். பல கவர்படுதல் போலப் பல நினைவுகொண்டு கலங்குதல். கவல் - கவலை = கவை, கிளை, கவர்த்த வழி, பல நினைவுக்கலக்கம், அக்கறை.

கவல் - கவலி. கவலித்தல் = கவலைப்படுதல்.

கவ் - கவ்வை = கவலை, கவலைப்பட்டுச் செ-யுங் காரியம், காரியம், வேலை. கவ் - கவை = காரியம். ஒரு காரியத்திற்கும் பயன்படாதவனைக் கவைக்குதவாதவன் என்பர்.

கவலி - கவனி. கவனித்தல் = கவலையோடு (கருத்தோடு) பார்த்தல். கவனி - கவனம்.

## 5. குழவி வளர்ப்பொலிப் படலம்

குழவி வளர்ப்புக் காலத்தில் குழவி வாயிலும் தா- வாயிலும் பிறக்கும் ஒலிகள், குழவி வளர்ப்பொலிகளாம். அவற்றுள், குழவி யொலிகள், உள்ளிய (voluntary) வொலி, உள்ளா (involuntary) வொலி என இருதிறப்படும். பச்சிளங்குழவிகள் எண்ணாது இயல் பா-க் கத்தும் ஒலிகள் உள்ளாவொலியும், பேச்சுக் கற்கும் பிள்ளை கள் தப்பொலிகளாகக் கூறும் திருந்தாச் சொற்கள் உள்ளிய வொலியும் ஆகும்.

### 1) குழவியொலிகள்

**(1) உள்ளா வொலி**

இங்கா = பால்:

குழவிகள் இயல்பாக மிடற்றிற் பிறப்பிக்கும் ‘இங்கு’ என்னும் பொருளற்ற வொலிக்கு, பால் என்றும் பொருளைச் செவிலியர் படைத்துக்கொண்டனர்.

அம்மா அப்பா என்னுஞ் சொற்கள் இவ்வகையிற் பிறந்தன வாக, மேலை மொழிநூல் வல்லார் கொள்வர். அது பொருந்தாது என்பது பின்னர் விளக்கப் பெறும்.

**(2) உள்ளிய வொலி**

மி-யா (பூனை)
ளொள் ளொள் (நா-)
பீப்பீ (ஊதுகுழல்)
டும்டும் (மேளம்)

இத்தகைய வொலிகள் பல, ஆப்பிரிக்க மொழிகளும் ஆத்தி ரேலிய மொழிகளும் போன்ற திருந்தா மொழிகளில், சொல்லாக வழங்குகின்றன.

ஆங்கிலத்திலுள்ள mew, bow vow, pipe, tom tom என்னுஞ் சொற்கள் இத்தகையனவே.

தமிழிலும், காக்கை (காக்கா), ஞள்ளை (ஞள்), துந்துமி - தும்தும் - துப்துப் - துந்துபி (வ.), சடபுடா முதலிய சொற்கள் இம்முறை யிலேயே அமைந்துள்ளன.

இத்தகைய வொலிகளெல்லாம் உண்மையில் ஒப்பொலிகளே யாயினும், குழவி வாயினின்று வருவன என்னும் சிறப்புப்பற்றி வேறு பிரித்துக் கூறப்பட்டன என்க. இவற்றின் தொகுதியைக் குழவிமொழி (child language) என்பர்.

## (2) தாயொலிகள்

குழவியைத் தொட்டிலிலிட்டுத் தா- லாலாவென் றொலித் தாட்டுதல் லாலாட்டு. ஆங்கிலரும் இதை lullaby என்பர்.

லாலா - ராரா - ராராட்டு; ராரா - ரோரோ -ரோராட்டு. லகரம் தமிழிற் சொன்முதலெழுத் தன்மையின், லாலாட்டு என்பது தாலாட்டு எனப்படும். ல - த, போலி.

ஒ.நோ. கலம்பம் - கதம்பம், சலங்கை - சதங்கை.

பிள்ளைத் தமிழ்ப் பனுவலில், தாலாட்டுப்பருவம் தாலப்பருவம் எனப்படும். தாலம் என்பது தால் எனக் கடைக்குறைந்தும் வரும். தாலப்பருவச் செ-யுள்களில் மகுடமாக வரும் 'தாலோ தாலேலோ' என்னுந் தொடர் தாலாட்டுச் சொல்லாகும்.

தாலாட்டு - தாராட்டு.

மக்கள் தொடக்கூடாததும் குழந்தைகள் தின்னக் கூடாததுமான இழிபொருளை, தா-மார் குழந்தைகளிடம் 'சுக்கா' என்னுஞ் சொல்லாற் குறிப்பர்.

இக் காண்டத்திற் கூறப்பட்ட ஐவகையொலிகளுள், உணர் வொலிகளும் குறியொலிகளும், சிறுபான்மையிலும் மொழிவளர்ச் சிக்குப் பெருந்துணை செ-யா வகையிலும் ஓரன்ன தன்மைய. ஏனை மூன்றனுள், குழவியொலிகளினும் வா-ச்செ-கையொலிகளும், வா-ச் செ-கையொலிகளினும் ஒப்பொலிகளும், இவ் விருவகையிலும் சிறந்தனவாம்.

# 2

# சுட்டொலிக் காண்டம்

## 1. சுட்டுக் கருத்து வளர்ச்சிப் படலம்

மொழி வரலாற்றில், முதன்மையா-க் கவனிக்க வேண்டிய மூன்று காலங்கள் உள. அவை, **சைகைக் காலம், குறிப்பொலிக்காலம், சுட்டொலிக் காலம்** என்பன.

விலங்கும் பறவையும்போல உணர்வொலிகளை மட்டுங் கொண்டு, அவற்றால் உணர்த்த முடியாத பிற கருத்துகளை யெல்லாம் சைகைகளைக்கொண்டே உணர்த்திய காலம், சைகைக் காலமாகும். இச் சைகை முறையைச் **சைகைமொழி** (Gesture language) என்பர். சிறுபான்மை சைகைகளைத் துணைக்கொண்டு, உணர்வொலி முதலிய ஐவகைக் குறிப்பொலிகளையுங் கையாண்ட காலம், குறிப்பொலிக் காலமாகும். இக் குறிப்பொலி மொழியை **இயற்கை மொழி** (Natural language) என்பர். குறிப்பொலிகளுடன் சுட்டொலி களையுங் கையாண்டு, அவற்றினின்று பல்லாயிரக்கணக்கான சொற் களைத் திரித்துக்கொண்ட காலம், சுட்டொலிக் காலமாகும். சுட்டொலி கள் தோன்றியபின்னரே மொழி வளர்ச்சியடையத் தொடங்கிற்று. இது போதுள்ள தமிழ்ச்சொற்களில், நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு சுட்டொலியடிச் சொற்களே. உண்மையில் சுட்டொலியடிச் சொற் றொகுதியே மொழியெனினும் இழுக்காகாது. சுட்டொலிகள் தோன்றிய பின் சொல் வளர்ச்சியடைந்த மொழியைப் **பலுக்கு மொழி** (Articulate language) என்பர். இதுவே மொழியெனச் சிறப்பித்துச் சொல்லப் படுவது. ஆகவே, சுட்டொலித் தோற்றம் முற்கால மொழியாகிய திருந்தா மொழிக்கும் பிற்கால மொழியாகிய திருந்திய மொழிக்கும் இடைப்பட்ட எல்லைக் கோடாகும்.

## (1) சுட்டொலிகள்

முந்தியல் மாந்தர், முன்னிலைக்கும் அண்மைக்குமன்றிப் பயன் படாமையும் தெளிவின்மையும் சில கருத்தறிவித்தற் கியலாமையும் ஆகிய முக்குறைகள் சைகைமுறைக் கிருத்தலைக் கண்டபின், அண்மை சேடிமையாகிய இருமைக்கும் பயன்படுமாறு அறுவகை ஒலிகளைக் கருத்தறிவிக்கும் வாயிலாகக் கையாண்டு வந்தனர். அவற்றுள் சுட்டுக் கருத்தைத் தெரிவித்தற்குக் கையாளப்பட்டவை ஆ(அ), ஈ(இ), ஊ(உ) என்பன. இம் மூன்றையும், முறையே சேடிமைச் சுட்டாகவும், அண்மைச் சுட்டாகவும், முன்மைச் சுட்டாகவும் ஆண்டு வந்தனர்.

முதற்காலத்தில் சைகைகளே பெரும்பாலும் கருத்தறிவிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டமையின், பின்னர் அவற்றிற்குப் பதிலாக ஒலிகளைக் கையாண்டபோதும், அவற்றையும் ஒருவகைச் சைகைகளாகவே கருதிவந்தனர். உண்மையில், ஒப்பொலிகளும் வா-ச்செ-கை யொலி களும் ஒலிச்சைகைகள் (Sound-gestures) என்னத் தக்கனவே. ஒரு காக்கையின் வடிவைக் கைச்சைகையால் நடித்துக் காட்டுவது போன்றதே, அதன் குரலைக் காக்கா வென்று ஒலிச்சைகையால் நடித்துக் காட்டுவதும். ஒருவனுடைய உடல் நிலையை அல்லது உளநிலையை அதற்குரிய உணர்வொலிகளால் இன்னொருவன் நடித்துக் காட்ட முடியுமாதலின். உணர்வொலிகளும் ஒலிச்சைகைகளாகப் பயன் படுத்தக் கூடியவையே.

சுட்டொலிகளும் முதலாவது வா-ச்சைகை யொலிகளாகவே பிறப்பிக்கப்பட்டன. வா-ச்செ-கை யொலிகட்கும் இவற்றிற்கும் வேறுபா டென்னையெனின்; அவை ஓரிடத்தையுஞ் சுட்டாது சில வா- வினையைச் சுட்ட, இவை எவ்வினையையுஞ் சுட்டாது மூவிடத்தையும் அவற்றிலுள்ள பொருளையும் சுட்டுவதே.

சேடிமை அண்மை முன்மை ஆகிய மூவிடங்களையும் முறையே சுட்டக்கூடிய ஒலிகள் ஆ, ஈ, ஊ என்னும் மூன்றா-த்தான் இருக்க முடியும். வாயை ஆவென்று விரிவாகத் திறந்து சேடிமையைச் சுட்டும்போது ஆகார வொலியும், ஈயென்று பின்னோக்கி யிழுத்துச் சேடிமைக்குப் பின்மையாகிய அண்மையைச் சுட்டும்போது ஈகார வொலியும், ஊவென்று முன்னோக்கிக் குவித்து முன்மையைச் சுட்டும் போது ஊகாரவொலியும், பிறத்தல் காண்க. நெடிலின் குறுக்கம் குறிலும் குறிலின்

நீட்டம் நெடிலுமாதலின் ஆ, ஈ, ஊ எனினும் அ, இ, உ எனினும் ஒன்றே. குறிலினும் நெடில் ஒலித்தற் கெளிதாதலானும், குழந்தைகள் குறில்களைப் பெரும்பாலும் நெடிலாகவே யொலித்த லானும், குழந்தை நிலையிலிருந்த முந்தியல் மாந்தன் வாயில் நெடில் களே முந்திப் பிறந்திருத்தல் வேண்டும்.

வாயினால் சே-மை அண்மை முன்மை ஆகிய மூவிடங் களையும் சுட்டவேண்டுமாயின், இன்றும் மேற்கூறிய மூவகையி லல்லது வேறுவகையில் சுட்ட முடியாது. அம் மூவகைச் சுட்டுநிலை யில் ஆ, ஈ, ஊ தவிர வேறெழுத்தொலிகளையும் பிறப்பிக்க முடியாது. சே-மையைச் சுட்ட வேண்டுமாயின் வாயை விரிவா-த் திறத்தல்வேண்டும். அந் நிலையில் ஆகாரந்தான் ஒலித்தற்கியலும். சே-மைக்குப் பின்மையாகிய அண்மையைச் சுட்டவேண்டுமாயின் வாயைப் பின்னோக்கி யிழுத்தல் வேண்டும். அந்நிலையில் ஈகாரம்தான் ஒலித்தற்கியலும். முன்மையைச் சுட்ட வேண்டுமாயின் வாயை முன்னோக்கிக் குவித்தல் வேண்டும். அந் நிலையில் ஊகாரந்தான் ஒலித்தற்கியலும். ஆகவே, சுட்டொலி கள் மூன்றும் கணிதம்போல் அளவைப்பட்டனவும், திட்டமானவும், எவ்வகையிலும் மாறாதனவும் ஆகும்.

ஆகார ஈகாரச் சுட்டுகளை இக்கால மக்கள் முந்தியல் மாந்தர் போல் ஒலிப்பதில்லை. ஊகாரச் சுட்டு இதழ் குவிந்தொலிப்பதாதலின், அதை ஓரளவு முன்னோரொத் தொலிக்கலாம். ஆயின், அது இன்று வழக்கற்றது.

சைகைக் கால மாந்தர் கைச் சைகையால் சே-மை யண்மை முன்மையிடங்களைச் சுட்டி வந்தது போன்றே, சுட்டொலிக்கால மாந்தரும் வா-ச் சைகையாற் சுட்டி வந்தனர். முச்சுட்டுகளையும் ஒலிக்கும்போது, அவர் வா-ச்கைகையை முதன்மையா-க் கவனித் தனரேயன்றி, அவ்வொலிகளை யன்று. அறுவகை யொலிகளினின்றும் சொற்கள் தோன்றி மொழி வளர்ச்சியுற்ற பின்னரே, மக்கள், வா-ச் சைகை யுணர்ச்சியின்றி ஒலிகளையே அல்லது சொற்பொருளையே நோக்கி வருகின்றனர்.

சுட்டொலிகள் தோன்றிய காலம் அசைநிலைக் காலமாதலின், அன்று அவை வா-ச்சைகை யொலிகளாகவே யிருந்து செவ்வை யா-ப் பலுக்கப்பட்டன. பின்பு ஈரசைச் சொற்களும் மூவசைச் சொற்

களுந்தோன்றி, வா-ச்சைகை யின்றிச் சொற்களே சுட்டுப்பொருளை யுணர்த்துந் திறம் பெற்றபின், வா-ச்சைகை விட்டுவிடப்பட்டது. அதனால், இன்று சுட்டொலிகளின் வா-ச்சைகைத் தன்மை பொது வா-உணரப்படவில்லை. இதனை ஓர் ஓரன்ன நிகழ்ச்சியால் விளக்க லாம்.

ஒருவரால் கொடுக்கப்பட்ட பொருளின் சிற்றளவைக் குறித்தற்கு, ஆட்காட்டி விரலின் நுனியில் ஒரு சிறு பகுதியைப் பெருவிரலால் தொட்டுக்காட்டி, 'இத்துணையுண்டு (இத்துணைப்போலக்) கொடுத்தான்' என்று முன்பு சைகையோடு கூறிய கூற்று, இன்று சைகை யின்றியே பொருளுணரப்படுதலால், சைகையில்லாமலே கூறப்படுதல் காண்க. இங்ஙனமே சுட்டொலிகளும். 'இத்துணையுண்டு' 'இத்துணைப் போல' என்னுந் தொடர்கள், இன்று கொச்சை நடையில் 'இத்துனூண்டு' 'இத்தினிப்போல' எனத் திரிந்து வழங்குகின்றன.

மூவகைச் சுட்டுக் கருத்துகளினின்றும், சிறப்பாக முன்மைச் சுட்டுக் கருத்தினின்று, பற்பல கருத்துகள் ஒன்றன்பின் ஒன்றாகவும் ஒன்றினின் றொன்றாகவும் தொடர்ந்து தோன்றியுள்ளன. அவற்றைக் குறித்தற்கே மூவகைச் சுட்டொலிகளினின்றும் கணக்கற்ற சொற்கள் திரிக்கப்பட்டு, மொழி வளர்ச்சியடைந்து வளம்பெற்றுள்ளது.

மூவகைச் சுட்டுகளுள், முன்மையென்பது அணுகிய எதிர் நிலை. அண்மையென்பது, முன்மையினும் பிற்பட்ட அல்லது பேசு பவனுக்கும் முன்நின்று கேட்பவனுக்கும் இடைப்பட்ட, அருகுநிலை. முன்மைக் கப்பாற்பட்டது சே-மை. உரையாடும் இருவருள் முன்னிற் பவன் நிற்கக்கூடிய தொலைவரையும் முன்மையிடமாக, ஊகாரச் சுட்டு வழக்கற்றதனாலும், முன்மையென்பது சே-மைக்கும் அண்மைக்கும் ஒருவகையில் இடைப்பட்டதாதலானும், இடைக்காலத் திலக்கணியர் முன்மைச் சுட்டை இடைமைச் சுட்டெனக் கருதினர் போலும்!

மூவகைச் சுட்டுகளையும் ஆ, ஈ, ஊ என்ற முறையிற் கூறுவதே நெடுங்கணக்கு மரபாயினும், அம் மூன்றும் சொற்பெருக்க வகையில் முறையே ஒன்றினொன்று சிறந்திருத்தலால், 'சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்' என்னும் உத்திபற்றி, அவை ஈங்கு ஊ, ஈ, ஆ முறையிற் கூறப்படும்.

## (2) ஊகாரச் சுட்டுக் கருத்து வளர்ச்சி

ஊகாரச்சுட்டு, முற்கூறியபடி முதலாவது முன்மையைக் குறிக்கும். முன்மையென்பது, காலமுன், இடமுன், முன்னிலை, முன்னுறுப்பு, முற்பகுதி, முனி (நுனி) முதலிய பல கருத்துகளைத் தழுவும்.

முன்மைக் கருத்தினின்று முன் வருதலாகிய தோன்றற் கருத்துப் பிறக்கும். வித்தினின்று முளையும் மரத்தினின்று துளிரும் தாயினின்று சேயும் போல, எப்பொருளும் ஒன்றினின்றே தோன்றுதலானும்; குட்டி யுங் குழவியும் முகமும் முன்னுங் காட்டியல்லது புறமும் பின்னுங் காட்டித் தோன்றாமையானும்; எப்பொருட்கும் முற்பகுதி முகம் எனப் படுதலானும் முகத்திற்கு எதிர்ப்பட்ட பக்கம் முன்மையாதலானும்; புதிதா- ஒன்றினின்று ஒன்று தோன்றுதலெல்லாம் முன்வருதலேயாதல் அறிக.

தோன்றற் கருத்தினின்று முற்படற் கருத்துப் பிறக்கும். ஒரு மரத்தில் தோன்றிய தளிர் முன்னால் நீண்டு வளர்வதும், ஓர் உடம்பில் தோன்றிய உறுப்பும் கொப்புளமும் முன்னுக்குத் தள்ளியும் புடைத் தும் வருவதும், இவை போல்வன பிறவும், முற்படலாகும்.

முற்படற் கருத்தினின்று முற்செலவுக் கருத்துப் பிறக்கும். இடம் பெயரும் இருதிணை யுயிரிகளும் ஓரிடத்தினின்று இன்னோரிடத் திற்குச் செல்வதெல்லாம் முற்செலவே. பிற்செலவெல்லாம், பெரும் பாலும், உயிரிகள் சிறிது வளர்ச்சியுற்றபின்பும் குறுந்தொலைவிற்கும் வேண்டுமென்றே நிகழ்த்தப் பெறுவதால், இயற்கையான செலவெல் லாம் பொதுவாக முற்செலவென்றே யறிக. கீழிருந்து மேற்செல்வதும் ஒருவகை முற்செலவாதலின், முற்செலவு என்பது எழுதல் அல்லது உயர்தலையுந் தழுவும்.

முற்செலவுக் கருத்தினின்று நெருங்கற் கருத்துப் பிறக்கும். ஒரு மரக்கிளை நீண்டு வளர்ந்து இன்னொரு கிளையை அடுப்பதும், இரு திணை யியங்குயிரிகளும் முன்சென்று தாந்தாம் விரும்பும் இடத்தை யும் பொருளையுங் கிட்டுவதும், நெருங்கலாகும்.

நெருங்கற் கருத்தினின்று தொடுதற் கருத்துப் பிறக்கும். ஒரு பொருள் எத்திசையிலாயினும் மேன்மேலும் சென்றுகொண்டே யிருப்பின், ஏதேனுமொரு பொருளைத் தொட்டே தீரல் வேண்டும். முன்னோக்கிச் செல்லும் உயிரிகளும் தாம் விரும்பிய பொருளையும்

இடத்தையும் தொட்டடையும். தொடுதல் என்பது, மெலிதா-த் தொடுதல் வலிதா-த் தொடுதல் என இருபாற்பட்டு, தீண்டுதல், தழுவுதல், முட்டுதல், குத்துதல், உறைத்தல் முதலிய பல கருத்துகளைத் தழுவும்.

தொடுதற் கருத்தினின்று கூடற் கருத்துப் பிறக்கும். கூடல் என்பது ஒன்றிய கூடல், ஒன்றாக் கூடல் என இருவகை. மண்ணொடு மண்ணும் நீரொடு நீருங் கூடுவது ஒன்றிய கூடல்; உடலொடு உடலும் கூலத்தோடு கூலமுங் கூடுவது ஒன்றாக்கூடல். ஒன்றாக்கூடல் மீண்டும் தொட்டுக் கூடல் தொடாது கூடல் என இருதிறத்தது.

கூடற் கருத்தினின்று வளைதற் கருத்துப் பிறக்கும். ஒன்றாக் கூடலில், சில பொருள்கள் வளைவதுண்டு. ஒன்றையொன்று முட்டிய இருபொருள்கள் ஒன்றாதவையாயின், அவற்றுள் மெலியது கம்பி போல் நீண்டிருப்பின் வளையும். கல்லைமுட்டிய வேரும் கடினமான பொருளை முட்டிய ஆணியும் வளைதல் காண்க. வழிச்செல்வோன் தெருவடைத்த சுவரை முட்டித் திரும்புவதும், வேற்றிடஞ் சென்றவன் வினைமுற்றி மீள்வதும், அணிவகையில் வளைதலின்பாற்படும். வளைதல் என்பது சா-தல், கோணல், திருகல், வட்டம், சுற்றல், சூழ்தல், உருட்சி, சுழற்சி முதலிய பல கருத்துகளைத் தழுவும்.

கூடற் கருத்தினின்று பிறக்கும் மற்றொரு கருத்துத்துளைத்தற் கருத்தாகும். முட்டிய பின் வளையாத வலிய பொருள், தான் முட்டி யதைத் துளைத்தும் செல்லும். ஆணி சட்டத்தையும், வண்டு மரத்தை யும், பூச்சி பொத்தகத்தையும், மாந்தன் மலையையும் துளைக்கலாம். துளைத்தல் என்பது குழித்தல், தோண்டுதல், துளையிடுதல், புகுதல், துருவுதல் ஆகிய பல கருத்துகளைத் தழுவும். துளைத்துப் புகுதலும், துளைக்குட் புகுதலும் எனப் புகுதல் இருவகைத்து. உயிரிகள் தத்தம் உறைவிடத்திற்குட் புகுதல் துளைக்குட் புகுதலாகும். ஒன்றைத் துருவிய பொருள் இறுதியில் வெளிப்படும். அது தோன்றல் அல்லது முன்வருதல் போன்றதாகும். அதன்பின் நிகழக்கூடியவை, தோன்றல் முதல் துருவல்வரை கூறியுள்ள பல நிகழ்ச்சிகளே. இவை ஒரு பொருளின் காலமெல்லாம் மீண்டும் மீண்டும் நிகழ்ந்துகொண்டே யிருக்குமாதலின், ஊகாரச் சுட்டுக் கருத்து வளர்ச்சி முற்றுறும் எல்லை துருவற்கருத்தே. ஆகவே, தோன்றல் முதல் துருவல்வரையுள்ள கருத்துகளெல்லாம் ஒரு சுழல் சக்கரமாதல் காண்க.

ஊகாரச் சுட்டால் முறையே உணர்த்தப்பெறுங் கருத்துகளில், முதன்மையானவையே இங்குக் குறிக்கப்பட்டுள. இவற்றின் நுட்ப வேறுபாடுகளையும், இவற்றுக் கிடையிடைத் தோன்றும் ஏனைய நுண் கருத்துகளையும், நூலுட் காண்க.

## (3) ஈகாரச் சுட்டுக் கருத்து வளர்ச்சி

ஈகாரச் சுட்டு, முதலாவது அண்மையைக் குறிக்கும். அண்மை முன்மைக்குப் பின்மையாதலாலும், ஈகாரத்தை யொலிக்கும்போது வா-பின்னுக்கிழுப்பதாலும், அண்மைக் கடுத்த ஈகாரச் சுட்டுக் கருத்துப் பின்மையாகும்.

பின்மைக் கருத்தில் தோன்றுவது பிற்படற் கருத்து.

மாந்தன் நின்ற நிலையில் இயற்கையா- ஒன்றை இழுப்பது முன்னின்று பின்னாதலின், பிற்படற் கருத்தினின்று பிற்படுத்தற் கருத்தாகிய இழுத்தற் கருத்துப் பிறக்கும்.

மேனோக்கிச் சென்ற பொருள் பிற்படுதல் இறங்கலாதலின், பிற்படற் கருத்தினின்று இறங்கல் அல்லது கீழுறற் கருத்துத் தோன்றும்.

ஈகாரச் சுட்டா லுணர்த்தப்பெறும் பெருங் கருத்துகள், அண்மை பின்மை கீழுறல் என்னும் மூன்றே. முதுகிற்குப் பின் நிகழ்வது ஒருவருக்குந் தெரியாமையானும், முன்னோக்கிக் கொண்டு பின்னுக்குச் செல்வது மாந்தனுக்கும் மற்ற வுயிரிகட்கும். இயற்கையன்மையானும், பின்மைக் கருத்தில் வேறொன்றுந் தோன்றற்கில்லை. மேனின்றிறங்கும் ஒரு பொருள் நிலத்தில் அல்லது நீரில் விழுந்து அதற்குள் புகினும் கீழுறல் அல்லது இறங்குதலாகிய அளவே ஈகாரச் சுட்டுக்கருத் தெல்லைக் குட்பட்டதாம். ஒரு பொருளுக்குட் புகுவதெல்லாம் துளைத்தலின் பாற்பட்டதாகலின், அது ஊகாரச் சுட்டின் ஆட்சிக்குட்பட்டதென அறிக.

## (4) ஆகாரச் சுட்டுக் கருத்து

ஆகாரச்சுட்டு, ஒரு திசையையுஞ் சிறப்பா-ச் சுட்டாது சே-மை யை மட்டுங் குறித்தலானும், ஒருசார் சே-மை கண்முன் தோன்றும் அண்மைக்கப்பாற் பட்டதாதலானும், சே-மையின் தொடர்ச்சி யெல்லாம் சே-மையே யாதலானும், சே-மைக் கருத்தினின்று வேறொரு கருத்துந் தோன்றுதற்கின்று.

இங்ஙனம் உலகியல் நிகழ்ச்சிகளையெல்லாம் ஊன்றிக் கவனித்து, சுட்டுக் கருத்துகளோடு அவற்றைத் தொடர்புபடுத்தி, உளநூற் கொப்ப வும் ஏரணநூற் கிசையவும், இயற்கையுண்மை எள்ளளவுந் தப்பாது, எல்லாக் கருத்துகளையுங் குறிக்கும் சொற்களை ஆக்கிக் கொண்ட முன்னைத் தமிழரின் நுண்மாண் நுழைபுலம் என்னே!

மூவகைச் சுட்டுகளிலும், முற்போக்குக் கருத்தை யுணர்த்தும் முன்மைச் சுட்டே, மொழிவளர்ச்சியிலும் முன்னேற்றத்தை யுண்டு பண்ணியது, முன்னி மகிழத்தக்கது.

## 2. சுட்டொலித் திரிபுப் படலம்

மூவகைச் சுட்டுக் கருத்துகளினின்றும் நூற்றுக்கணக்கான வழிமுறைக் கருத்துகள் தோன்றியுள்ளமையால், மூவகைச் சுட்டொலி களினின்றும், ஒருபொருட் பல சொல்லும் பலபொரு ளொருசொல்லு மாக, பல்லாயிரக்கணக்கான சொற்கள் தோன்றியுள்ளன. ஓரசைச் சொல்லாக மட்டுமன்றி ஓரெழுத்துச் சொல்லாகவுமுள்ள ஆ, ஈ, ஊ என்னும் மூன்றே மூன்று சுட்டொலிகளினின்று, இத்துணை எண்ணருஞ் சொற்கள் தோன்றியுள்ளதெங்ஙனம்? பல்வகைத் திரிபுகளே அதற்குக் காரணம். ஒரு சொல்லின் பொருள் திரியும்போது அச் சொல்லும் உடன் திரிய வேண்டும் என்னும் சொல்லியல் நெறிமுறைப்படி ஆ, ஈ, ஊ என்னும் முச்சுட்டுச் சொற்களும், மூவகைப் புணர்ச்சித் திரிபு, அறுவகைச் செ-யுள் திரிபு, பலவகைப் பண்புத்திரிபு, முக்குறை, மும்மிகை, மூவகைப் போலி, இலக்கணப்போலி, முறைமாற்று, இனத் திரிபு, மோனைத்திரிபு, எதுகைத்திரிபு, மரூஉ முதலிய பல்வகைத் திரிபுகளால் பல்லாயிரக்கணக்கான சொற்களைப் பிறப்பித்திருக் கின்றன.

இத் திரிபுகளெல்லாம் குறிப்பொலிகட்கும் செல்லுமேனும், சிறப் பாகச் சுட்டொலிகட்கே பொருந்துவதனால், இக் காண்டத்தில் கூறப் பட்டன. இங்கும் முக்கியமானவையேயன்றி ஏனைய விளக்கப்படா. இவை யெல்லாவற்றையும் எமது 'செந்தமிழ்ச் சொல்லியல் நெறி முறைகள்' என்னும் நூலுட் கண்டுகொள்க.

சுட்டடிச் சொல்லாக்கத்திற்குப் பெருந்துணை செ-யுந் திரிபுகள், மும்மிகை, இனத்திரிபு, மோனைத்திரிபு என்னும் மூன்றாகும்.

மும்மிகை என்பன முக்குறைக்கு நேர்மாறானவை. அவை முதன்மிகை, இடைமிகை, கடைமிகை என்பன.

எ–டு: முதன் மிகை: உந்து – நுந்து
இடை மிகை: இலகு – இலங்கு
கடை மிகை: முன்– முன்பு

இனத்திரிபு என்பது உயிரினத் திரிபு, மெ-யினத் திரிபு என்னும் இருவகை இனவாரித் திரிபாகும். அவற்றுள் மெ-யினத் திரிபு, வல்லினத் திரிபு மெல்லினத் திரிபு முதலிய நால்வகைப்படும்.

எ–டு: உயிரினத் திரிபு: பரு – பெரு, வாயில் – வாயல்
மெ–யினத் திரிபு: சலங்கை – சதங்கை, தொழுதி – தொகுதி
வல்லினத் திரிபு: பொற்றை – பொச்சை, அத்தன் – அச்சன்
மெல்லினத் திரிபு; கழங்கு – கழஞ்சு
இடையினத் திரிபு: பிள் – பி–
ஒலியினத் திரிபு: ஒளிர் – ஒளிறு

இத் திரிபுகள் இரண்டும் பலவும் சேர்ந்தும் வரும்.

எ–டு: மலங்கு – விலங்கு (விலாங்கு) இலந்தை – இரத்தி

மோனைத்திரிபு என்பது மோனையாகத் திரிந்து செல்வது. அது ஒருமடி திரிவதும், பலமடி திரிவதும் என இருதிறப்படும்.

எ–டு: கிண்டு – கெண்டு ஒருமடி மோனை
நீள் – நெடு

தேம் – தீம் – தித்தி பலமடி மோனை
குள் (குடம்) – கூள் – கொடு – கோடு

கூள் = வளைவு. வளைந்த வாழைப்பழ வகை கூளிவாழை யெனப்படுதல் காண்க. கோடு = வளைவு.

உயிரெழுத்துகளில் எதுவும் எதுவாகவேனும் திரியலாமேனும், உ-அ, உ-இ, என்னுந் திரிபுகள் பெருவழக்கானவும் மொழி வளர்ச்சிக்குப் பெருந்துணை செ-பவும் முதன்மையா-க் கவனிக்க வேண்டியவுமாகும்.

எ–டு:

| **உ–அ** | **உ–இ** |
|---|---|
| உகை – அகை | துற்றி – திற்றி |
| குள் – கள் | புணை – பிணை |
| குடும்பு – கடும்பு | புட்டம் – பிட்டம் |
| குட்டை – கட்டை | பு– – பி– |
| குலை – கலை | புரள் – பிறழ் |
| குறுவா– – கதுவா– | புரண்டை – பிரண்டை |

துக்குணி – தக்குணி
துளிர் – தளிர்
துணை – தனை
முடங்கு – மடங்கு
முறி – மறி
முடி – மடி

புழுக்கை – பிழுக்கை
முடுக்கு – மிடுக்கு
முண்டு – மிண்டு
முல்லு – மில்லு
முழுங்கு – விழுங்கு
முளகு – மிளகு

குறிலுக்குச் சொன்னது நெடிலுக்கும் ஒக்குமாதலின், மேற்கூறிய திரிபுகளை முறையே ஊ - ஆ, ஊ - ஈ என்றுங் கொள்ளல் வேண்டும்.

எ–டு: **ஊ – ஆ**
மூட்டு – மாட்டு

**ஊ – ஈ**
தூண்டு – தீண்டு
(தூண்டா விளக்கு = தீண்டா விளக்கு)
நூறு – நீறு
பூறு – பீறு
நூன் – நீன்
பூளை – பீளை
பூட்டை – பீட்டை

மெ-யினத் திரிபுகளுள், ள்-- சிறப்பாகக் கவனித்தற்குரியது. பல ளகர மெ-யீற்றுச்சொற்கள் யகர மெ-யீற்றுச் சொற்களாகத் திரி கின்றன.

எ–டு: கொள் – கொ–
தொள் – தொ–
பிள் – பி–
மாள் – மா–

ஐகார ஔகார உயிர்ப்புணரொலிகள் (vowel diphthongs) தோன்றியபின், தனி அகரக்குறிலை யடுத்த யகரமெ- அ- என்று எழுதப்படாமல் ஐ என்றே எழுதப்பட்டு வந்திருக்கின்றது.

***"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்***
***ஐஎன் நெடுஞ்சினை மெ–பெறத் தோன்றும்"*** ***(மொழிமரபு. 23)***

என்று தொல்காப்பியர் கூறுதல் காண்க.

எ–டு: அள் = கூர்மை. அள் – (அ–) – ஐ = நுண்மை.
நொள் – நள் – (ந–) – நை.
நொள்ளுதல் = தளர்தல். நொள் – நொள்கு. நைதல் = தளர்தல்.
பொள் – பொ– – (ப–) – பை.
பொ– = உட்டுளையுள்ளது.
வள் – (வ–) வை = கூர்மை.

அன் என்பது அ- என்று திரிந்தபின் உயிரேறின் ஐகாரமாக எழுதப்படுவதில்லை.

எ—டு: (அ—) — அயில் = கூர்மை
பள் — (ப—) — பயம் = பள்ளம்
(வ—) — வயிர் = கூர்மை

இத்தகைய திரிபுகள் தமிழில் நிரம்ப வுள.

சில்லிடத்து உயிரினத் திரிபொடு மோனைத் திரிபு கலப்பது முண்டு. இம் முறையில், உ-அ என்பது ஒ-அ என்றாகும்; உ-இ என்பது உ-எ என்றாகும்; உ-எ என்பது மீண்டும் ஒ-எ என்றாகும். உ-ஒ, இ-எ என்பன மோனையாதல் காண்க.

எ—டு:

| **ஒ—அ** | **உ—எ** | **ஒ—எ** |
|---|---|---|
| ஒழி—அழி | உகள்—எகிர் | சொருகு — செருகு |
| ஒடுங்கு — அடங்கு | குழுமு — கெழுமு | மொழுகு — மெழுகு |
| கொம்பு — கம்பு | துளி — தெளி | |
| தொள்ளாடு — தள்ளாடு | | |
| தொளத்தி — தளத்தி | | |
| பொலிசை — பலிசை | | |
| மொக்கை — மக்கை | | |

கம்பைக் கொம்பு என்பது வடார்க்காட்டு வழக்கு. அதுவே முந்து வடிவாகும்.

குறிலுக்குச் சொன்னது நெடிலுக்கும் ஒக்கும்.

எ—டு:

| **ஓ—ஆ** | **ஊ—ஏ** | **ஓ—ஏ** |
|---|---|---|
| கோல்—கால் | ஊர்—ஏர் (எழுச்சி) | தோண்டு — தேண்டு |
| நோடு — நாடு | கூழ்வரகு — கேழ்வரகு | நோடு — நேடு |
| (நோட்டம் — நாட்டம்) | | மோடு — மேடு |
| | | மோளம் — மேளம் |

இங்குக் காட்டப்பட்ட எடுத்துக்காட்டுச் சொற்களுள், முழுங்கு முளகு மொழுகு மோளம் என்பன பார்த்த அல்லது கேட்டவளவில் கொச்சைபோலத் தோன்றும். ஆயின், அவையே மூலவடிவம் என்பதும், அவற்றின் இகர முதல் வடிவம் அவற்றின் திரிபே என்பதும் இந் நூன்முழுதும் நோக்குவார்க்கு விளங்கும்.

சுட்டடிச் சொல்லாக்கத்திற் கேதுவாக, முச்சுட்டொலிகளும் முதலாவது அடைந்த திரிபு கடைமிகை.

**எ—டு: ஆ – ஆன் (ஆங்கு), ஆது.**

சுட்டொலிகள் முதல் நிலையில் நெடிலாயிருந்தன என்பது முன்னரே கூறப்பட்டது.

அடுத்தபடியாக நிகழ்ந்த சுட்டொலித் திரிபுகள் திரிதலும் இடைமிகையும்.

**எ—டு: ஆங்கு, ஆண்டு.**

ஞாங்கர் (ஆங்கர்) என்னும் முதன்மிகை புலவர் புனைவாகத் தெரிகின்றது.

நாளடைவில் முச்சுட்டொலிகளும் குறுகின.

**எ—டு: ஆ – அ, ஆது – அது, ஆங்கு – அங்கு.**

அதா - அந்தா, அதோ - அந்தோ முதலிய திரிபுகளால், சுட்டுச் சொற்களின் இடைமிகை யுணரப்படும்.

சுட்டொலிகள் குறுகியபின், உகரச்சுட்டினின்று உல் என்னும் ஒப்புயர்வற்ற மாபெரு மூலவடி தோன்றிற்று. அது பின்பு, உகரத்தொடு கூடி மொழி முதலாகும் அறுமெ-யோடுஞ் சேர்ந்து. **குல் சுல் துல் நுல் புல் முல்** என்னும் அறுபெருங் கிளையடிகளைத் தோற்றுவித்தது. அவற்றினின்று, முற்கூறிய ஊகாரச் சுட்டுக்கருத்து ஒவ்வொன்றிற்கும், கவையுங்கொம்பும் கிளையுஞ்சினையும் போத்துங் குச்சும் இணுக்குங் கொழுந்துமாக, பற்பல சொற்கள் கிளைத்துந் தோன்றியுமுள்ளன. லகரமெ-யினின்று எங்ஙனம் பிறமெ-கள் திரி கின்றன என்பது 'செந்தமிழ்ச் சொல்லியல் நெறிமுறைக'ளில் காட்டப் பெறும்.

மூவின மெ-களுள் வல்லினமெ- தமிழ்ச்சொற்கு ஈறாவ தில்லை. மெல்லின மெ-களுள் மகரமும் இடையின மெ-களுள் லகரமும், ஒலித்தற்கெளியவாம். இவ் விரண்டனுள் மகரமே முந்திய தாயினும், சொல்லாக்கத்திற்கு லகரவீற்றடியே பெரும்பாலும் பயன் படுத்தப் பெற்றுள்ளது.

சில கருத்துகட்குச் சில கிளையடிச் சொற்கள் மறைந்துவிட்டன. அவை வழங்கின நிலம் இந்துமாவாரியில் மூழ்கிப் போனமையாலும்,

அவை ஆளப்பெற்ற நூல்கள் இறந்துபட்டமையாலும், அவற்றை இன்று காட்டற்கில்லை. ஆயினும், அவற்றின் முன்னுண்மை, ஊகிப்பு ஒப்பு ஆகிய இருவகையளவைகளான் உணரப்படும். மறைந்துபோன சொற்கள் சில, தொடர்பு குறித்தற்குக் காட்டப்பட்டவிடத்துப் பிறைக் கோட்டுள் இடப்பட்டுள.

வகரம் உகரத்தோடு கூடி மொழி முதல் வரும் எழுத்தன்மையின், உகரச்சுட்டுச் சொற்கள் வகர முதலவாயிருக்குமாயின், அவை பகர மகரச் சொற்களின் திரிபென்றே அறிதல் வேண்டும்.

எ—டு: **பண்டி – வண்டி, முழுங்கு – விழுங்கு. முடுக்கு – விடுக்கு. பண்டி என்னுஞ் சொல் புல் என்னும் கிளையடியினின்று பிறந்ததாகும். இது ஊகாரச் சுட்டுப்படலத்தில் வளைதலியலில் விளக்கப்படும். ஆண்டுக் காண்க.**

உ-ஊ-ஒ-ஓ என்பது உகரமோனையுயிர் வரிசையாதலால், இதிலுள்ள எவ்வெழுத்து மொழிமுதல் வரினும் ஒன்றே.

ஈகாரச்சுட்டு, உல் என்னும் மூலவடிக்கும் குல் சுல் முதலிய கிளையடிகட்கும் ஒப்பாக, ஒழுங்கான இனப்பெருக்க அடிகளைத் தோற்றுவித்திலது. ஆயினும், சில மெ-களோடு கூடிச் சில கருத்துப் பற்றிய சொற்களைப் பிறப்பித்துளது.

ஆகாரச்சுட்டு அதுவுமின்றிச் சுட்டுக் கருத்தொன்றே பற்றி நின்று, சில சுட்டுச் சொற்களைமட்டும் பிறப்பித்துளது.

வடமொழியில் வழங்குந் தமிழ்ச்சொற்கள் இந் நூலின் இடை யிடை வருங்கால், அவற்றை வடசொல்லென மயங்கற்க. வடமொழி ஒரு தனி மொழியன்று என்பதும், அது தென்மொழி வழிப்பட்டதென் பதும், ‘வடமொழி வரலாறு’ என்னும் நூலில் விளக்கப்பெறும். தமிழைத் தமிழ் வாயிலாகவன்றி வடமொழி வாயிலாக வுணர்தல் கூடாது.

## 3. ஊகாரச் சுட்டுப் படலம்

### (1) முன்மையியல்

#### (1) முன்மைச்சுட்டு

ஊ = முன்னிலையிலுள்ள.

உ = முன்னிலையிலுள்ள

(உன்னா! = உதோ!)

உது - உதோ! (உந்தோ! உதா! உந்தா!).

உது = முன்னிலையிலுள்ளது.

உது - உதோ - உதோள் - உதோளி = (உவ்விடத்தில்) முன்னிலை யிடத்தில்.

ஊங்கு = முன்னிலையில், முன்பு.

உங்கு = முன்னிலையில். உங்கு - உங்கா.

(ஊங்கு - ஊங்கண் - உங்கண் - (உங்கன்) - உங்ஙன் - உங்ஙனம் = உவ்விடம், உவ்வாறு).

உந்த = முன்னிலையிலுள்ள. (உந்த + இடம் = உந்திடம்)

(உன்ன) = முன்னிலையிலுள்ள, உத்தகைய.

உவ் - உவன் = முன் நிற்பவன், உவ் - உவ - உவை = முன்நிற்பவை.

**குறிப்பு:** ஊ என்பது முதற்காலத்தில் பெயரும் பெயரெச்சமும் குறிப்பு வினையெச்சமுமாகிய சுட்டுச் சொல்லாக வழங்கிற்று.

### (2) முன்னிலைப் பெயர்

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| ஊன் | ஊம் (முதல் நிலை) |
| நூன் | நூம் (இரண்டாம் நிலை) |
| நீன் | நீம் (மூன்றாம் நிலை) |

### முன்னிலைப் பெயரின் வேற்றுமையடி

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| ஊன் - உன் | ஊம் - உம் |
| நூன் - நுன் | நூம் - நும் |
| நீன் - நின் | நீம் - நிம் |

**குறிப்பு;**

(1) மூவிடப் பதிற்பெயர்களும் நெடுமுதல் குறுகியே வேற்றுமை யேற்கும். முதற்காலப் படர்க்கைப் பதிற்பெயர் தான் தாம் என்பன. பின்பு அவை தற்சுட்டுப் பெயராயின.

(2) மூவிடப் பதிற்பெயர்களிலும், னகரவீறு ஒருமையையும் மகரவீறு பன்மையையும் உணர்த்தும்.

(3) நீன், நீம் என்னும் இருபெயர்களும், இன்றும் தென்னாட்டுப் பழங்குடி மக்கள் வழக்கில் உள்ளன.

(4) நீம் என்பதன் வேற்றுமையடி வழக்கற்றது.

(5) நீன் நீம் நீங்கள் என்னும் முப்பெயரும், முறையே, இழிந் தோன் ஒத்தோன் உயர்ந்தோன் ஆகியோரைக் குறிக்க ஆளப் பெறும்.

**ii. முன்னிலை யொருமைப்பெயர்**

நீன் – நீ (நான்காம் நிலை)

ஒ.நோ: தம்பின் – தம்பி (கடைக்குறை)

நீ என்னும் பெயர் வேற்றுமை யேலாதிருப்பது. அது நீன் என்னும் பெயரின் திரிபாதலை உணர்த்தும்.

**iii. முன்னிலைப் பன்மைப் பெயர்**

| பன்மைப் பெயர் | இரட்டைப் பன்மைப்பெயர் | |
|---|---|---|
| ஊம் | ஊங்கள் | 4ஆம் நிலை |
| நூம் | நூங்கள் | |
| நீம் | நீங்கள் | |

**iv. இரட்டைப் பன்மைப் பெயரின் வேற்றுமையடி**

ஊங்கள் – உங்கள்
நூங்கள் – நுங்கள்
நீங்கள் – நிங்கள்

**v. முன்னிலைப் பன்மைப் பெயர்**

நீ + இர் = நீயிர்
= நீவிர் (இலக்கணப் போலி) 5ஆம் நிலை
= நீர் (தொகுத்தல்)

நீ என்னும் ஒருமைப் பெயரடியாகப் பன்மைப்பெயர் அமைக்கக் கருதி, அவர் என்னும் படர்க்கைப் பெயருக்கொப்ப ரகர விகுதி யேற்றி, நீயிர் என அமைத்தனர் இடைக்காலத்தினர். நீம் என்னும் சொல் பல வகுப்பாரிடை வழக்கற்றுப் போனமையே இதற்குக் காரணம். நீம் என்னுஞ் சொல்லைப்போன்றே நீர் என்பதும் ஒத்தோனைக் குறித்தலையும், இவற்றுள் பின்னது நிர் என வேற்றுமைத் திரிபு கொள்ளாமையையும், நோக்குக.

***"நீயிர் நீவிர் நான் எழுவா யலபெறா"*** *(நன். 264)*

என்னும் நூற்பாவில், நீர் என்பதையுஞ் சேர்த்துக்கொள்ளாமை நன்னூலாரின் மொழியாரா-ச்சி யின்மையையே காட்டும்.

### (3) முன்மை (காலமும் இடமும்)

ஊங்கு = முன்பு. (உங்கண் - ஊங்கணோர் = முன்னோர்). புரம் = முன்.

முகம் = முன்பு, காரணம்.

முகம் - முகர் - முகரி = தொடக்கம்.

முதல் - முன், தொடக்கம். அடி, காரணம்.

(முதலி = முதலிலுள்ளவன் - ள் - து.)

முந்து - முந்தை - முத்தை.

(முந்துரி - முந்திரி = முதற் சிற்றிலக்கம்)

முன் - முன்னம் - முனம். முன்னம் - முன்னர். முன் - முன்பு. முன் - முன்று.

முன் - முனை - முனைவன் = முன்னோன், கடவுள்.

முன்மையைக் குறிக்குஞ் சொற்கள், முன்வாயான உதட்டிற் பிறக்கும் பகர மகர முதலவாயிருப்பது கவனிக்கத் தக்கது.

### (4) முதன்மை

முன்னிடத்தில் வைக்கப்பெறுவது சிறந்த பொருளாதலால், முன்மைக் கருத்தில் முதன்மைக்கருத்துத் தோன்றிற்று.

முகம் = தலைமை. முகம் - முகமை - முகாமை.

முகம் - முகர் - முகரி = தலைமை.

முகம் - முகன் - முகனை = தலைமை.

முகு - முக்கு - முக்கியம் (வ.)

முதல் - முதன்மை. முதன் - முதலி = தலைவன், படைத் தலைவன். படைமுதலி சேனைமுதலி என்பன படைத்தலைவன் பெயர். முதலியார் = படைத்தலைவர் வழியினர்.

### (5) முதுமை

முன் பிறந்தவன் பின் பிறந்தவனை நோக்க முதியவனாதலால், முன்மைக் கருத்தில் முதுமைக் கருத்துத் தோன்றிற்று. து-ப்பு (அனுபவ) மிகுதியால் அறிவு வளர்தலின் முதுமைப் பெயர் அறிவையும் குறிக்கும்.

புரை = பழைமை.

முகம் - முகர் - முகரி = பழைமை, கிழம். முகரி - மூரி = கிழம், கிழவெருது, பழைமை.

முகரிமை = பேரறிவு.

முது - முதுமை. முது - முதார் - முதாரி = முதிய கன்று, முதுமை, முதிர்ச்சி.

முது - முதை = பழங்கொல்லை. முதை - முதையல் = பழங்காடு.

முது - மூ - மூப்பு.

முது - முதுவல் = பழைமையாற் பழுதானது.

முது - முதிர் - முதிர்ச்சி = மூப்பு, முற்றிய விளைவு.

முது = மூப்பினாலுண்டாகும் அறிவு. முது - முதுக்கு = அறிவு. முதுக்குறைதல் = மகளிர் உலகியலறிவடைதல், பூப்படைதல்.

முதுவன் = மூத்தோன், அறிஞன்.

முது - (முத்து) - முற்று. முற்றுதல் = முதிர்தல்.

### (6) முன்னுறுப்பு

உத்தம் = முன்தள்ளிய முந்திரிக்கொட்டை.

உதடு = வாயின் முற்பகுதி. உதடு (உதழ்) - இதழ் = உதடு, உதடுபோன்ற பூவிதழ்.

துதி = யானைக்கு முன்னிருக்குங் கை. துதிக்கை = துதியாகிய கை.

(நுத்தி) - நெத்தி - நெற்றி.

நுதல் = மண்டையின் முற்பாகம்.

முகம் = முகத்தில் முன் நீண்டிருக்கும் மூக்கு, மூக்கும் வாயும் சேர்ந்த மூஞ்சி (muzzle), மூஞ்சியும் கன்னமுஞ் சேர்ந்த முகரை, முகரையும் நெற்றியுஞ் சேர்ந்த முகம் (face), முகம் - முகன்.

குறுக்காக வளரும் அஃறிணை யுயிரிகளுடைய உடலின் முன்புறத்தில் முகமும், முகத்தின் முன்புறத்தில் மூஞ்சியும், மூஞ்சியின் முன்புறத்தில் மூக்கும், இருத்தல் காண்க. பறவையின் மூஞ்சிக்கு மூக்கு அல்லது அலகு என்று பெயர். மக்கள் முகம் தலையின் முன் புறத்திலிருப்பது.

முகம் - முகர் = மூக்கு. முகர் - முகரி = மூக்கின் அடி. (முகம் - முக). முகத்தல் = மூக்கால் மணத்தை நுகர்தல்.

முக - மோ - மோப்பு - மோப்பம்.

முகம் - முகர். முகர்தல் = மணத்தை நுகர்தல்.

முகர் - நுகர். முகர் - மோர்.

முகம் - முகர் - முகரை - மோரை. முகவா- - மோவா-.

முகு - முக்கு - மூக்கு = முகரும் உறுப்பு, பறவையலகு,

மூக்கு - (மூங்கு) - மூங்கா = மூக்கு நீண்ட கீரி.

முதாரி = முன்கை வளையல்.

முந்துரி - முந்திரி = முன்தள்ளிய கொட்டையுள்ள பழம், அப் பழமரம் (அண்டிமா). முந்திரி - முந்திரிகை.

**குறிப்பு:** முகம் என்னுஞ் சொல்லின் அடி 'முகு' என்றும், அதன் முக்கியமான எழுத்து 'மு' என்றும் அதற்கும் உயிர் நாடியானது 'உ' என்னும் உயிர் என்றும், அறிதல் வேண்டும். முகன் என்னுங் கடைப் போலி வடிவத்தை மு+கன் என்று பிரித்து, 'மு' முன்னொட்டு (prefix) என்றும், கன் என்பது தோண்டுதலைக் குறிக்கும் வினைச்சொல் என்றும், முகன் என்பது தோண்டப்பட்டது போன்ற வாயைக் குறிக்கும் பெயர் என்றும், பொருந்தாப் புளுகலாகக் கூறுவர் வட நூலார். முகம் என்னுஞ் சொல் வடமொழியிலும் முகத்தைக் குறிக்கு மென்றும், கன் என்னுஞ் சொல்லும் கல் என்பதன் திரிபே யென்றும் அறிந்து கொள்க. கல்லுதல் தோண்டுதல்.

இத்தகைய மாயை மாறாட்டமெல்லாம் 'வடமொழி வரலாறு' என்னும் நூலில் விளக்கப்பெறும்.

முகம் என்னும் சொல் வடமொழியில் வாயைக் குறித்தற்குக் காரணம், பறவைகட்கு மூக்கும் வாயும் இணைந்திருப்பதும், அவற்றின் வாயான அலகு மூக்கு என்று அழைக்கப்பெறுதலுமே.

### (7) முற்பகுதி

முகம் உடலின் அல்லது தலையின் முற்பகுதியாதலால், முகம் என்னுஞ் சொல் இடம் பொருள்களின் முற்பகுதியையுங் குறிங்கும்.

உரைமுகம் துறைமுகம் நூன்முகம் போர்முகம், முகவுரை முக தலை முகமண்டபம் முதலிய பெயர்களை நோக்குக.

முகம் - முகப்பு = முன் மண்டபம், முனைப்பகுதி.

முகம் - முகன் - முகனை - மோனை = சீர்களின் முதலிடம், அவற்றின் முதலெழுத்துகள் ஒன்றிவரல், முகப்பு.

முகம் - முகர் - முகரி = முன்புறம்.

முந்து - முந்தி = முன்றானை.

முன் - முனை. (போர் முனை - war front)

முன்று - (முன்றம்) - முற்றம். (முன்று + இல் = முன்றில்.)

இனி, குவிந்த அல்லது கூரிய பொருள்களின் முற்பகுதியைக் குறிக்குஞ் சொற்களாவன:

குனை - கொனை = நுனி (வடார்க்காட்டு வழக்கு.)

துள் - தூ- = நுனி.

நுதி - நுனி.

(நுன்) - நுனி, நுனை.

முன் - முனி, முனை.

முள் - முளை = முனை.

## (2) முன்னுறலியல்

### (1) தோன்றுதல்

ஒன்றினின்று இன்னொன்று முன்வருதலே தோன்றுதலாதலின், முன்மைக்கருத்தில் தோன்றுதற் கருத்துப் பிறந்தது. ஒரு பொருள் எத்திசையில் தோன்றினும், அதன் முகத்தை நோக்க அது வருந்திசை அதற்கு முன்மையாதல் காண்க. இதனால், தோன்றுதலை முகஞ் செ-தல் என்று கூறும் வழக்கையும், நோக்குக.

முன்மை என்பது முன்னாகவுள்ள நிலைமையையும், முன்னுறல் என்பது முன்வரும் இயக்கத்தையும், குறிக்குமென வேறுபாடறிக.

***"உண்மை வினைவந் துருத்தலொழி யாதெனும்"*** *(மணிமே. 26:82)*
***உருத்தல் = தோன்றுதல்*** *(உ.வே. சா. உரை.)*

***"ஊழ்வினை யுருத்துவந் தூட்டும்"*** *(சிலப். பதிகம்,. 52)*

உருத்து = வெளிப்பட்டு (அரும்பதவுரை)

உருத்து = உருக்கொண்டு (அடியார்க்கு நல்லாருரை.)

உருத்தல் = தோன்றுதல், முளைத்தல், உருவெடுத்தல்.

உரு = தோற்றம், வடிவம், உடல், படிமை, தெ-வச் சிலை, ஓவியம், ஓவியவேலையான பூத்தொழில், வடிவுள்ள தனிப்பொருள்.

உரு - உருவு - உருவம்.

உருப்படி = ஓர் உருவின் படி (copy)யான பொருள், படியான தனிப்பொருள், தனிப்பொருள் (article).

உருப்படுதல் உருக்குலைதல் என்பன, உடம்பின் வளர்ச்சி தளர்ச்சிகளைக் குறிக்கும் வழக்காறுகள்.

உருப்போடுதல் = மணிமாலையிலுள்ள ஒவ்வோர் உருவிற்கும் ஒவ்வொரு முறையாக ஒரு மந்திரத்தை ஓதுதல், அல்லது ஒரு மந்திரத்தின் ஒலிவடிவைப் பெருக்குதல்; மந்திரம்போல ஒன்றை மனப்பாடஞ் செ-தல். உருவேற்றுதல் என்பதும் இதுவே.

உரு = ஒரு தனியிசை வடிவு. பண், பாட்டு, மெட்டு, தோற்ற வகையைக் குறிக்கும் நிறம் வண்ணம் முதலிய சொற்களும், இசை வகையைக் குறித்தல் காண்க.

உரு - உருவு - உருபு = பெயர் வேற்றுமையின் வடிவான ஈறு, உவமையின் வடிவான சொல்.

அகத்தியத்தை நோக்க வழிநூலும் அதற்கு முந்திய நூல்களை நோக்கச் சார்பு நூலுமான தொல்காப்பியத்தில், உருபு என்பது ஓர் இலக்கணக் குறீயீடாகக் குறிக்கப்பட்டிருப்பதனாலும், அது தமிழிலக் கணந் தோன்றிய தொன்றுதொட்டு வழங்கிவரும் மரபுச்சொல் லாத லாலும், அது தூய தமிழ்ச்சொல் என்பது ஒருதலை. தோன்றுதலைக் குறிக்கும் வேறு பல சொற்களும் உகரத்தையேனும் உகரமோனையை யேனும் உகரத் திரிபையேனும் முதற் கொண்டிருத்தல் காண்க.

உரு - (உரும்பு) - அரும்பு. அரும்புதல் = தோன்றுதல்.

குருத்தல் = தோன்றுதல்.

***"அதனின்று மொருபுருடன் குருத்தான்"*** ***(விநாயகபு. 72: 4)***

(குரு) - கரு = முதற் பொருளில் தோன்றும் பொருள்.

துளிர்த்தல் = தோன்றுதல்.

நுனை - நனை. நனைதல் = தோன்றுதல்.

நுதலுதல் = தோற்றுவித்தல்.

பூத்தல் = தோன்றுதல். பொடித்தல் = தோன்றுதல்.

முகிழ்த்தல் = தோன்றுதல்.

முளைத்தல் = தோன்றுதல்.

முறிதல் = தோன்றுதல்.

இச் சொற்களெல்லாம் முன்வருதல் அல்லது முன்தள்ளுதல் என்பதையே வேர்ப்பொருளாகக் கொண்டவை என்பது, துள் (தள்), முள் (முட்டு) முதலிய சொற்களால் உணரப்படும். துள் என்னும் அடியினின்று பிறந்த துருத்து என்னும் சொல்லும், முள் என்னும் அடியினின்று பிறந்த முட்டு என்னும் சொல்லும். முன் தள்ளுதலைக் குறித்தல் காண்க. தோன்றுதலை (முன் வருதலை)க் குறிக்கும் உருத்தல் என்னும் வினைச்சொல் வடமொழியில் வழங்காமையையும், உருவம் என்னும் பண்புப் பெயரின் திரிபான 'ரூப' என்பது மட்டும் அதில் வழங்குதலையும், நோக்குக.

## (2) இளமை

ஒரு பொருள் தோன்றிய நிலை அதன் இளம்பருவமாதலின், தோன்றற் கருத்தில் இளமைக் கருத்துத் தோன்றிற்று.

### i. இளமை (நிலைத்திணை)

உல்லரி = தளிர். (உலிர்) - இலிர். இலிர்த்தல் = தளிர்த்தல்.

உரு - (உரும்பு) - அரும்பு = மொட்டு. அரும்புதல் = தோன்று தல், முளைத்தல், அரும்பு - அருப்பம் = முளைக்கும் மீசை.

(குள்) - கொழுந்து = தளிர். குள் - கெழு - கெழுமு. கெழுமுதல் = முளைத்தல்.

குரு - குருகு = குருத்து.

குரு - குருத்து - குருந்து = தென்னை, பனை முதலியவற்றின் இளவிலை.

(குருந்து) - கருந்து = மரக்கன்று (கோடைமலை வழக்கு.)

குரு - குரும்பு - குரும்பை = தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு.

(சுலிர்) - சிலிர் = தளிர். சிலிர்த்தல் = தளிர்த்தல்.

துள் - துளிர் - தளிர்.

நுகும்பு = பனையின் இளமடல். நுங்கு = பனையின் இளங்கா-.

நுகு - (நகு) - நாகு = இளமை.

நுள் - நுழு - நுழுந்து = இளம்பாக்கு. நுழா- = இளம்பாக்கு.

நுனை = அரும்பு. நுனை - நனை.

நுரு = தளிர். நொரு = இளம்பிஞ்சு.

நுரு - (நுறு) - நறு - நாறு - நாற்று = இளம்பயிர். நாறுதல் = தோன்றுதல். நாறு = முளை, இளம்பயிர்.

புள் - (பிள்), பீள் = இளங்கதிர், இளமை.

பூட்டை = இளங்கதிர். பூட்டை - பீட்டை.

(புகு) - பூ - போ - போத்து = இளங்கிளை.

போந்து = பனங்குருத்து. போந்து - போந்தை = பனங்குருத்து.

பொகில் = அரும்பு. பொகில் - போகில் = அரும்பு.

புதல் = அரும்பு.

முள் - முளை = முளைக்கும் வேர் தளிர் முதலியன; மரக்கன்று.

முருந்து = இளந்தளிர், இளவெலும்பு. முருந்து - முருந்தம் = கொழுந்து.

முறி = தளிர். முறிதல் = துளிர்த்தல்.

முகுரம் = துளிர்.

முகுள் - முகுளம் = அரும்பு. முகுள் - முகிள் - முகிளம் = அரும்பு. முகிள் - முகிழ் = அரும்பு. முகிழ் - முகிழம். முகை = அரும்பு.

மொக்கு = அரும்பு. மொக்கு - மொக்குள் = அரும்பு.

முட்டு = பிஞ்சு. முட்டுக்கா- = பிஞ்சுக்கா-, முட்டுக் குரும்பை = சிறு குரும்பை.

மூசு = பிஞ்சு (பலா).

முட்டு - மொட்டு = அரும்பு.

முதள் = அரும்பு.

இங்குக் காட்டப்பட்ட சொற்களெல்லாம், முன்வருதல் அல்லது முன்றள்ளுதல் என்னுங் கருத்தை அடிப்படையாகக் கொண்டவை. (shoot, bud முதலிய ஆங்கிலச் சொற்களுடன் இவற்றை ஒப்பு நோக்குக.)

**ii. இளமை (இயங்குதிணை)**

உரு = கரு (embryo).

(குள்) - குழ - குழவு = இளமை, குழந்தை, குட்டி. குழவு- குழவி = குழந்தை, குட்டி.

குழவு - குழகு = இளமை, குழந்தை. குழகு - குழகன் = இளைஞன். குழ - குழந்தை. (குள்) - குட்டி.

கொழுந்து = கொழுந்துபோன்ற மகன் அல்லது மகள். குலக் கொழுந்து என்னும் வழக்கை நோக்குக.

குரு - கரு = சூல், முட்டை, குழவி, குட்டி.

***"காசறைக் கருவும்"*** ***(சிலப். காட்சி. 52)***

கரு - கருப்பு - கருப்பம்.

குரு - குருந்து = குழவி.

குருகு = விலங்கின் குட்டி.

குருளை = குட்டி.

குது - (குதல்) - குதலை = மழலை. குதல் - (கதல்) - கதலி = சிறியது. கதளி - கசறி = கெண்டைக்குஞ்சு. (கதல் - (கசல்) - கச்சல் = பிஞ்சுக்கா-)

புள் - புரு = குழந்தை.

புள் - பிள் = பிள்ளை, பிள்ளைமை யழகு.

***"தன்பிள் ளழியாமே"*** ***(திருவிருத். 14, வியா. ப. 94)***

பிள் - பிள்ளை. பிள் - பீள் = கரு, கருப்பைக் குழவி, இளமை.

***"பீட் பிதுக்கி"*** ***(நாலடி. 20)***

(புது) - புதல்வு - புதல்வன், புதல்வி

முல் - (முன்) - முனி = யானைக்கன்று.

***"முனியுடைக் கவளம் போல"*** ***(நற். 360)***

முள் - முளை = இளமை. முளையன் = சிறுவன். முளையான் = சிறு குழந்தை.

முள் - முட்டு - மொட்டு - மொட்டை. மொட்டைப் பயல் = சிறுபயல்.

முள் - முரு - முருகு = இளமை, இளைஞன், சேயோன். முருகு - முருகன்.

முறி - மறி = சிறியது. விலங்கின் குட்டி, சில விலங்கின் பெண்.

விலங்கினத்தில் பெண்பால் ஆண்பாலினுஞ் சிறிதாயிருப்பதால், மறி நாகு என்னும் இளமைப் பெயர்கள் சில விலங்கின் பெண் பாலையும் உணர்த்தும்.

முகு - மக - மகவு. மக - மகன், மகள்.

முது - (முதல்) - மதல் - மதலை = இளமை, குழவி.

முள் - மள் - மள்ளன் = இளைஞன், வீரன்.

மள் - மழ = இளமை, குழவி.

***"மழவுங் குழவும் இளமைப் பொருள"*** ***(தொல். உரி. 14)***

மழ - மழவு = இளமை, குழவி. மழவு - மழவன் = இளைஞன், வீரன்.

மழ - மழலை = இளமை. மழ - மாழை = இளமை.

முள் - விள் - விளவு = இளமை.

விள் - விளர் = இளமை, முற்றாமை.

விளர் - விளரி = இளமை. விள் - விழை - விழைச்சு = இளமை. விழை - விடை = இளம் பறவை. விடை - விடலை = இளைஞன், வீரன்.

**(3) மடமை**

எவ்வகை யுயிரினத்திலும் இளமையில் அறியாமை மிக்கிருப் பது இயற்கையாதலால், இளமைக் கருத்தில் மடமைக் கருத்துத் தோன்றிற்று.

மழ - மத - மட - மடம் = இளமை, மடமை.

மட - மடப்பு - மடப்பம் = இளமை, மடமை.

மட - மடை - மடைமை.

இரு திணையிலும், பெண்பால் ஆண்பாலினும் மடம் மிக்க தாகக் கருதப்படுவதால் மடவரல் மடந்தை (பேதை, ஏழை) முதலிய பெயர்கள் உயர்திணையிலும், மந்தி மூடு முதலிய பெயர்கள் அஃறிணையிலும், பெண்பாலைக் குறிக்க வெழுந்தன.

இளமையிலேயே அழகும் சிறந்திருப்பதால், முருகு, மதவு, மடம் முதலிய சொற்கள் அழகையும் உணர்த்தின.

**(4) புதுமை**

எதுவுந் தோன்றியவுடன் புதுமையா யிருக்குமாதலால், தோன்றற் கருத்தில் புதுமைக் கருத்துத் தோன்றிற்று. ஒரு மாணவன் ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்த துவக்கத்தில் புதுமாணவன் எனப்படுதலையும், ஒரு கருவி முதன்முதற் கண்டுபிடிக்கப்பட்டவுடன், புதுக்கருவி யெனப்படுதலையும், நோக்குக.

(குது) - கொத்தம் = புதுமை. இச் சொல் இவ் வடிவில் இன்று தெலுங்கில் மட்டும் வழங்கி வருகின்றது.

கொத்த = புதிய. கொத்தகா = புதிதா–.

இன்று தமிழில் வழங்கும் வடிவுகளாவன:

குது - (குடு) - கடு - கடி = புதுமை.

***"கடிமலர்ப் பிண்டி"*** ***(சீவக. 2739)***

(குடு) - (கொடு) - கோடு - கோடகம் = புதுமை.

கோடு - கோடி = புதுமை, புத்தாடை.

நுது என்னும் தமிழ் அடியினின்றே நூதனம் என்னும் வடசொல் திரிந்துளது.

புது - புதுமை. புது - புதுக்கு - புதுக்கம். புதுவல் - புதிதா–த் திருந்திய நிலம். புதிர் = புதுநெல்.

புதுமுதல் = புதியவர்போற் பேசுதல், புதினம் = புதுமை, புதுச்செ–தி.

முள் - (மள்) - மழ - மழலை = இளமை, புதுமை. மழலைத்தேன் = புதுத்தேன்.

மழ - (வழ) - வழை = புதுமை.

***"வழைமது நுகர்பு"*** ***(பரிபா: 11, 66)***

வழை - வழைச்சு = புதுமை.

***"வழைச்சற விளைந்த"* (பெரும்பாண். 280)**

**(5) பசுமை**

புதுமையான முன்பருவத்தில், அதாவது இளம்பருவத்தில், பயிர் பச்சைகள் பசுமையாயிருப்பதால், புதுமைக் கருத்தில் பசுமைக் கருத்துத் தோன்றிற்று. பசுமை செழிப்பைக் குறிக்குமாதலால், புதுமைச் சொல் உடற் செழிப்பையும் உணர்த்தும்.

உடல் செழிம்பாயிருத்தலைப் புதுப்புது வென்றிருத்தல் என்பது மரபு. புது என்னும் சொல் இப் பொருளில் பெரும்பாலும் புசு என்று திரியும். புசுப்புசு வென்றிருத்தல் = மக்கள் உடல் செழிம் பாயிருத்தல். புது - புசு - புசுப்பு = உடற்செழிம்பு.

புசு - பசு - பசுமை = புதுமை, இளமை, மென்மை, பச்சை நிறம், செழிம்பு.

புதுமெழுக்கைப் "பசுமெழுக்கு" என்றார் கடியலூரார் உருத்திரங் கண்ணனார். (பட்டினப். 166)

பசு - பச்சு - பச்சை = பசுமை, பசிய பொருள். பசுமை கண்ணுக் கினிய நிறமாதலால், கண்ணுக்கினிதா யிருத்தலைப் பச்சென்றிருத்தல் என்பர்.

பச்சுடம்பு = இளந்த உடம்பு.

பச்சு - பச்சடி = வேவிக்காமற் பச்சையாகச் செ-யும் கூட்டு. சமைக்காத கா-கறிகள் பெரும்பாலும் பச்சைநிறமா யிருப்பதால், பசுமைச்சொல் சமையாமைப் பொருளைத் தந்தது. பச்சைவெட்டு பச்சூன் பச்சரிசி பச்சை வெண்ணெ- பச்சைத் தண்ணீர் முதலிய வழக்குகள் இக் கருத்துப்பற்றியன. பச்சை என்னுஞ் சொல், உணவின் திருந்தா நிலையைக் குறித்தல்போல், மொழியின் திருந்தா நிலையை யும் குறிக்கும். இடக்கர்ப்பேச்சு பச்சைப்பேச்சு எனப்படும்.

பசு - பச. பசத்தல் = பச்சையாதல், பச - பசள் - பசண்டை = பசமை.

பச - பசல் - பசலை = பசிய பொன்னிறத் தேமல். பசலை - பயலை = தேமல்.

பசு - பாசு - பாசம் (moss). பாசு - பாசி = பாசம், பச்சைப்பயறு.

பாசு - பாசவன் = பச்சூன் விற்பவன்.

பசு - (பசி) - (பயி) - பை. பைமை = பசுமை, இளமை, மென்மை.

***"அகர இகரம் ஐகார மாகும்"*** ***(தொல். 54)***

பை - பைத்து = பசுமை. பை - பையல் = இளைஞன், சிறுவன். பையல் - பையன்.

பையல் - பயல் - பயன் - பசன்.

பை - பைது - பைதல் = பையன், குழவி.

பை - பயிர் = பச்சையான புல்செடிகொடி. பயிர்பச்சை, பைங்கூழ் என்பன வழக்கு.

பை - பயறு = பச்சைப்பயறு, பிறபயறு, பயறு, பயறுபச்சை என்பது வழக்கு. பயறு - பயறி = பயற்றம்மை.

### (6) மென்மை

இளமையில் எவ்வுயிரியும் மென்மையாயிருப்பதால், இளமைக் கருத்தில் மென்மைக் கருத்தும் தோன்றும். குதலை = மென்மை, மென்மொழி.

மழ - மழமழப்பு = மென்மை. மழலை = மென்மை, மென் மொழி.

மழறுதல் = மென்மையாதல்.

மழ - மத - மட - மடம் = மென்மை.

பைமை = பசுமை, இளமை, மென்மை.

பைய = மெல்ல. பையப் பைய - பயப்பய - பைப்பய.

பை - பையா. பையாத்தல் = சிறுமைப்படுதல், துன்பத்தைத் தாங்கமுடியாவாறு மென்மையாதல், துன்புறுதல். பையுள் = துன்பம்.

### (7) முன்தள்ளிவருதல்

தோன்றிய பொருள் முன்னாக நீண்டுவருதல் முன் தள்ளி வருதலாகும்.

துந்து - துந்தி = முன்தள்ளிய வயிறு. துந்தி - தொந்தி.

துருத்துதல் = முன்தள்ளுதல். வயிறு துருத்திக்கொண்டிருக் கிறது என்பது தென்னாட்டு வழக்கு.

(துள்) - தள்.

புடைத்தல் - முன்தள்ளுதல், வீங்குதல்.

முலை = முன்தள்ளிய மார்பு. (மொஞ்சு) - மொஞ்சி = முலை.

### (8) தருதல்

வாழை குலையீனுதலைக் குலைதள்ளுதல் என்றும், தென்னை பனை பாளை விடுதலைப் பாளை தள்ளுதல் என்றும், நெல் புல் கதிர் ஈனுதலைக் கதிர் தள்ளுதல் என்றும் கூறுவர். மரஞ்செடிகொடிகள் கா-கனியோடிருக்கும் போது மக்கள் அவற்றைப் பறித்தல் அவை கொடுக்க அவர் கொள்வதுபோலிருத்தலால்; அவை கா-த்துக் கனி தலைப் பலன் தருதல் அல்லது பலன் கொடுத்தல் என்பர். இதனால், தள்ளுதற் கருத்தில் தருதற் கருத்துப் பிறந்தது.

தள் - தரு - தார் - தா - த. தார்- தர்.

தள் என்னும் வினை தருதற் பொருளில் தரு எனத் திரிந்து, அதன் மேலும், எதிர்மறை வினையில் 'தார்' அல்லது 'தா' என்றும் (தாரான், தரான்), ஏவல்வினையில் தா என்றும், இறந்த கால வினையில் 'த' என்றும் (தந்தான்) திரிந்துள்ளது.

யகரமெ-யீறாகத் திரியாத ளகரமெ-யீற்று இயற்சொற்க ளெல்லாம், பொதுவாக ருகரவீற்றவாகத் திரிகின்றன.

**எ–டு: கள் – கரு – கார் (கருமை).**

இளமையை உணர்த்தும் குரு நுரு முரு முதலிய அடிக ளெல்லாம், குல் நுல் புல் முல் முதலியவற்றின் திரிபான குள் நுள் புள் முள் முதலியவற்றினின்று திரிந்தவையே.

கள் - கரு - கார் என்னும் திரிபு போன்றதே தள் - தரு - தார் என்பதும். முழுத்திரிபு நிலையிலும், தருதல் வினை வருதல் வினையை ஒத்துள்ளது.

வள் - வரு - வார் - வா - வ. வார் - வர்.

இதன் விளக்கம் 'வளைதல்' இயலிற் கூறப்பெறும்.

அரும்பண்டத்தைக் குறிக்கும் தாரம் என்னும் சொல், தார் என்னும் திரிபடியாகப் பிறந்தது. கடல் தரும் பல பொருள் "கடற் பஃறாரம்" (புறம். 30).

உயர்திணையிலும் இயங்குதிணையான அஃறிணையிலும், பிள்ளையை அல்லது குட்டியை ஈனும் தா- குலைதள்ளும் அல்லது காயீனும் மரத்தைப்போ லிருப்பதால், தா-க்குத் தள்ளை என்று பெயர். ஒரு பெண்டு பிள்ளை பெற்றால், அவள் புகுந்தகத்திற்கு அல்லது கணவன் குடிக்கு ஒரு பிள்ளை தந்ததாகக் கருதப்படுவாள். மகப் பெறுதல் தருதல் எனப்படும்.

***"புயங்கமெலாஞ் சுதையென்னு மாது தந்தாள்"***

***(கம்ப. சடாயுகாண். 28)***

பிள்ளை பெறுவதில் தா- தந்தையர் இருவர் வினையுங் கலந்திருத்தலால், அவ் விருவருக்கும் தா என்பது பொதுப் பெயராம். ஆயினும் ஈன்றாளுக்கு ஆ-, தா- (தம் + ஆ-) முதலிய தனிப் பெயர்கள் வழங்குதலாலும், பிள்ளையைத் தோற்றுவிப்பவன் தந்தையே யாதலானும், தா என்பது பெரும்பாலும் தந்தையையே குறிக்கும்.

தாதா - தாத்தா = தந்தையின் தந்தையாகிய பாட்டன். தாதா - தாதை.

புகுந்த குடிக்குப் பிள்ளையைத் தருபவள் தாயென்றும், மனைவிக்குப் பிள்ளையைத் தருபவன் தந்தை யென்றும், வேறு பா டறியப்படும். தந்தை தருவது விந்து நிலை; தா- தருவது பிள்ளை நிலை.

### (9) முற்செலவு

நுதலுதல் = முற்கூறுதல், கூறித் தொடங்குதல்.

நுதலிப்புகுதல் = இன்னது கூறுவேன் என்று கூறப்போகும் பொருளைச் சொல்லித் தொடங்கும் நூலுத்தி.

தூது = முன்விடுக்கும் செ-தி, அச் செ-தி சொல்பவர். தூது - தூதன் - தூதுவன். அரசரும் காதலரும் ஒருவரொருவரிடைச் செல்வதை முன்னறிவித்தற்காக விடுக்கும் செ-தியே, முதன் முதல் தூது எனப்பட்டது. பின்பு அது செ-தி என்னும் பொதுப்பொருளில் வழங்கத் தலைப்பட்டது. கண்ணன் தூது, அங்கதன் தூது முதலிய வற்றை நோக்குக.

## (3) முற்செலவியல்

இயக்கத்தில் முன்னுறலுக்கு அடுத்தது முற்செலவு. முன்னது இடத்து நிகழ்வும் பின்னது இடம் பெயர்வும் ஆகும்.

முற்செலவு தானே செல்லலும் தள்ளப்பட்டுச் செல்லலும் என இருவகைத்து.

### (1) முன்தள்ளல்

**i. காற்றை மூக்காலும் வாயாலும் தள்ளல்**

உ- - உயிர். உயிர்த்தல் = மூச்சுவிடுதல். மூச்சே உயிர்நாடியும் உயிர்நிலைக்கு அடையாளமுமாதலால், ஆவி உயிர் எனப்பட்டது. “உள்ளே போனால் மூச்சு, வெளியே போனால் போச்சு” என்னும் பழமொழியை நோக்குக. உயிரையும் உயிர்ப்பையும் வடநூலார் பிராணன் என்று கூறுதலையுங் காண்க. உ-த்தல் = முன் தள்ளல், செலுத்துதல்.

காற்றை உள்ளிழுப்பதும் வெளிவிடுவதும் ஆகிய இரண்டும் சேர்ந்ததே மூச்சாயினும் மிக வெளிப்படையானதும் ஒலி விளைப் பதும் வெளியிடுவதேயாதலின், மூச்சு உயிர்ப்பெனப்பட்டது. ‘மூச்சு விடுதல்’ என்னும் வழக்கும் இக் காரணம்பற்றியதே.

உந்து - உந்தி = பேசும்போது வா-வழிக் காற்றைத் தள்ளு வதாகக் கருதப்படும் கொப்பூழின் உட்பக்கம், கொப்பூழ்.

***“உந்தி முதலா முந்துவளி தோன்றி”*** ***(பிறப்பியல். 1)***

என்பது தொல்காப்பியம்.

உந்தியிலிருந்து எழுப்பப்படும் காற்றைக் குறிக்கும் உதானன் என்னும் வடசொல், உது என்னும் அடியைக் கொண்டிருப்பது கவனிக் கத்தக்கது.

***“உந்தியில் தோன்றும் உதான வளிப்பிறந்து”*** ***(6)***

என்பது நேமிநாதம்.

தும்முதல் = மூக்கு வழியா-க் காற்றைத் தள்ளுதல்.

துரத்துதல் = வா-வழித் தீய காற்றை வன்மையா-ச் செலுத்துதல் (cough).

முசுமுசுத்தல் = குறட்டை விடுதல்.

முசு-மூசு. மூசுதல்=மூச்சை விடுதல், மோப்பம் பிடித்தல்.

மூசு-மூச்சு. மூசு-மூஞ்சு-மூஞ்சி=மூக்கு, மூக்குள்ள முகப்பகுதி (muzzle).

மூஞ்சுதல் = மூச்சுவிடுதல், மோப்பம் பிடித்தல்.

மூஞ்சு-மூஞ்சுறு-மூஞ்சூறு-மூஞ்சி நீண்ட அல்லது எதையும் மோப்பம் பிடிக்கின்ற எலி. தென்னாட்டார் இதனை மூஞ்செலி என்பர்.

மூஞ்சு-மூஞ்சை = நீண்ட மூக்கு அல்லது முகம்.

ஒருவன் இளைத்துக் களைத்த நிலையில் விரைந்து வலிதா-மூச்சுவிடின், "மூசு மூசென்று இளைக்கிறான்" என்பர். இவ் வொலிக் குறிப்பு ஒப்பொலியும் சுட்டொலியும் கலந்ததாகும்.

முசு-முசி. முசித்தல்= மூச்சிழைத்தல், களைத்தல், இளைத்தல், மெலிதல்.

முசிப்பாறுதல் =இளைப்பாறுதல்.

**ii. காற்றைக் கையால் தள்ளல்**

ஊதுதல் = வாயால் ஊதுதல்போல் கொல்லன் துருத்தியாற் காற்றைத் தள்ளுதல்.

ஊதல்=காற்று நிறைந்தாற்போற் பருத்தல், ஊத்தம் = ஊதல் (பருத்தல்).

துருத்து - துருத்தி = ஊதுலைக் குருகு, துருத்தி போன்ற தோற் பைக்குழல் (bag-pipe). துருத்தி-துத்தி-தித்தி.

**iii. பிற பொருள்களைக் கால் கையால் தள்ளல்**

உதைத்தல் = முற்செலுத்துதல், காலால் முன் தள்ளுதல்.

***"சிலையுதைத்த கோற்கிலக்கம்"*** ***(கம்பரா. கார்முக. 9)***

உந்துதல் = முன் தள்ளுதல், தள்ளுதல்.

உந்து-உஞ்சு-உஞ்சல்=உந்தப்படும் தாப்பிசை.

உஞ்சல்-ஊஞ்சல்-ஊசல்.

உன்னுதல்=உந்துதல்.

(உந்து-உந்தி = தள்ளித் தள்ளிப் பறக்கும் தட்டான்.)

ஊங்குதல் = ஊஞ்சலாடுதல். ஊக்குதல் = ஊஞ்சலாட்டுதல்.

கொழித்தல் = முன் தள்ளுதல், புடைப்பவள் கூலத்தோடு கலந் துள்ள மண்ணையும், நீரலை அடிமண்ணையும் முன் தள்ளுதல் கொழித்தல் எனப்படும்.

சுண்டுதல் = விரலால் முன் தள்ளுதல் அல்லது தெறித்தல்.

(துள்) - தள். தள்ளுதல் என்னும் வினை முதலாவது முன் தள்ளுதலையே குறித்தது.

தூண்டுதல்=விளக்குத் திரியை முன்தள்ளுதல், ஊர்தி விலங்கை முற்செலுத்துதல், ஏவலனை முன் தள்ளுவதுபோல் ஒரு வினைமேல் ஏவுதல்.

தூண்டு-தீண்டு. தூண்டாவிளக்கு தீண்டாவிளக்கு எனப்படுதல் காண்க.

நுந்துதல்=திரியைத் தூண்டுதல். நுந்து-நொந்து. நுந்தாவிளக்கு நொந்தாவிளக்கு எனவும் படும்.

நூங்கு-நூக்கு. நூக்குதல் = முன்தள்ளுதல், தள்ளுதல்.

நூவுதல் = திரியைத் தூண்டுதல், நீரை முன் இறைத்துப் பா-ச்சு தல்.

நூவு-நீவு. "நீவாத தீபம்" (மஸ்தான். 140)

(நூ)-நீ. நீத்தல்=தள்ளுதல், செலுத்துதல்.

நீயான் = கப்பலோட்டி. நீயான்-நீகான்-மீகான்.

நீகான்-நீகாமன்-மீகாமன்.

### (2) நீக்கல்

வேண்டாவென்று தள்ளப்பட்ட பொருள் நீக்கப்பட்டதாதலின், தள்ளற்கருத்து நீக்கற்கருத்தைத் தழுவியதாகும்.

உத்துதல்=கழித்தல், நீக்குதல்.

உத்து-ஒத்து, ஒத்துதல்=தள்ளுதல். ஒத்திவைத்தல்=தள்ளி வைத்தல்.

ஒதுங்குதல்=தானே தள்ளுதல் (த. வி.) ஒதுக்குதல்=ஒரு பொருளைத் தள்ளுதல், ஒரு குறிப்பிட்ட பயனுக்காக ஒன்றைத் தள்ளிவைத்தல். (பி. வி.)

ஒதுங்கவைத்தல் = வழியிலும் அறை நடுவிலும் உள்ளவற்றை ஒருபுறமாகத் தள்ளிவைத்தல்.

ஒதுங்கு-ஒதுக்கு-ஒதுக்கம்.

கொழி-கழி, கழிதல் = நீங்குதல். கழித்தல்=நீக்குதல். ஒரு தொகையி னின்று இன்னொரு தொகையை நீக்குதல்போற் குறைத்தல்.

(துள்)-தள். தள்ளுதல்=நீக்குதல்.

துர-துற, துறத்தல்=நீக்குதல். துற-துறவு-துறவி=பற்று நீக்கியவன்.

துற-துறக்கம்-துறவாற் பெறும் வீடு.

ஒ.நோ: விடு-வீடு, = பற்று விடுகையாற் பெறும் பேரின்பம்.

துறக்கம் என்னும் சொல் முதலாவது வீட்டையே குறித்தது; பின், அதைப்போன்றே விண்ணிலுள்ளதும் இன்பந்து-க்கப் பெறுவதுமான (அல்லது அங்ஙனம் உள்ளதும் பெறுவதுமாகக் கருதப்படுவதான) தேவருலகத்தைக் குறித்தது. ஸ்வர்க்கம் என்னும் வடசொல் சுவர் (உயரத்திலுள்ளது) என்னும் பகுதியடியாகப் பிறந்திருப்பதால், அதை இதனொடு மயக்குவது சரியன்று. மேலேழுலகங்களுள் சுவர்லோகம் என்பதொன்றாகக் கூறப்படுதல் காண்க. சுவர் என்னுஞ் சொல்லின் வேர்ப்பொருளை மேற்செலவியலில் 'உயர்தற்' பகுதியிற் காண்க.

தூர்த்தல் = குப்பை கூளத்தைக் கூட்டித் தள்ளுதல்.

நுதுத்தல் = நீக்குதல், அழித்தல், அவித்தல்.

***“இன்னல் நுதுக்கும் தண்கவிகை வள்ளல்”*** ***(விநாயக பு. 46, 4.)***

***“நெ-யால் எரிநுதுப்பேம் என்றற்றாற் கௌவையால்***
***காமம் நுதுப்பேம் எனல்.”*** ***(குறள். 1148)***

(நூ)-நீ, நீத்தல்=நீக்குதல். நீத்தார்=துறந்தார்.

(நூங்கு)-நீங்கு. நூக்கு-நீக்கு.

### (3) துள்ளுதல்

துள்ளுதலாவது குதித்தல். அது முன்னோக்கித் துள்ளுதலும் மேனோக்கித் துள்ளுதலும் என இருவகைத்து. முன்னது ஈண்டும் பின்னது மேற்செலவியலிலும் கூறப்படும். மேனோக்கும்போது மேற்றிசையும் முன்றிசையாகி விடுதலால், அதுவும் முன்றிசையின் பாற்பட்டதே.

உகளுதல்=தாவுதல். உகளித்தல்=குதித்தல்.

குதித்தல்-தாவுதல், தாண்டுதல், கடத்தல், கூத்தாடுதல்.

குதி-குதிரை = தாவிச் செல்லும் விலங்கு.

***"கூற்றங் குதித்தலுங் கைகூடும்"*** ***(குறள். 269)***

என்பதில், குதித்தல் கடத்தல் (வெல்லுதல்.)

குதி - கூத்து - கூத்தன்.

துள்ளுதல் = குதித்தல். துள்ளல் = கூத்தன்.

துள் - துள்ளி - துளி = துள்ளிவிழும் நீர்த்திவலை, சிற்றளவு. துள் - துள்ளம் = துளி. துளி - துமி.

(தூண்டு) - தாண்டு. தாண்டுதல் = தாவுதல், குதித்தல், கடத்தல்.

"தா- எட்டடி தாண்டினால் குட்டி பதினாறடி தாண்டும்" என்பது பழமொழி.

தாண்டு - தாண்டவம் = கூத்து.

தாண்டு - தாண்டகம் - 24 எழுத்து ஆகிய அளவைத் தாண்டிச் செல்லும் அடிகளைக் கொண்ட செ-யுள்.

துமுக்கு (தெ.) = தாண்டு.

(தூவு) - தாவு. தாவல் = தாண்டுதல்.

## (4) தெளித்தல்

தெளித்தலாவது ஒன்றை அள்ளி முன்னாக எறிதல் அல்லது இடுதல். நீரைத் தெளிக்கும்போது அது துளித் துளியாகத் துள்ளி விழுதலால், துள்ளுதற் கருத்தில் தெளித்தற் கருத்துப் பிறந்தது.

உகுதல் = முன்துள்ளி விழுதல், சிந்துதல், உகுத்தல் (பி. வி.) = சிந்துதல், தூவுதல்.

துளித்தல் = துளி விழுதல் (த.வி.); துளிகளைச் சிந்துதல், தெளித்தல், தெறித்தல், இறைத்தல், சிந்துதல் (பி. வி.).

துளி - தெளி. தெளித்தல் = துளித் துளியா-ச் சிந்துதல்; மலர், அரிசி முதலியவற்றைச் சிற்றளவா-த் தூவுதல்.

தெளி - தெறி. தெறித்தல் = துளி துள்ளி விழுதல், துள்ளுதல், விரலினால் ஒன்றை முன்னோக்கிச் சுண்டுதல் அல்லது துள்ளச் செ-தல்.

துள்ளு நடையைத் தெறிநடை என்பர்.

***“தெறிநடை மரைக்கண மிரிய”*** ***(அகம். 224)***

***“தாவுபு தெறிக்கு மான்”*** ***(புறம். 239)***

தூவுதல் = தெளித்தல், இறைத்தல், சிதறுதல்.

தூவானம் = இறைக்கும் மழை, தெறிக்கும் மழைத்துளி.

தூவல் - துவல். துவலுதல் = துளித்தல், தெளித்தல்.

துவல் - துதலை = துளி, துவலை - திவலை.

துவலை - துவாலை = துளி, சூதகப்பெருக்கு.

துவல் - துவறு. துவறுதல் = மழை தூவுதல் (த. வி.).

துவறு - துவற்று. துவற்றுதல் = தூவுதல் (பி. வி.)

துவறு - தூறு. துவற்று - தூற்று.

தூறுதல் = மழைத்துளி விழுதல். தூறு - தூறல். தூற்று - தூற்றல்.

தூற்றுதல் = பதரையும் மணியையும் பிரித்தற்குக் கூலத்தை முன்னாக வாரியிறைத்தல், மண்ணைவாரி யிறைத்தல், பழிச்சொற் களைப் பரப்புதல். தூறல் = மழைத் துளி, பழிச்சொல்.

தூறு = பழிச்சொல். அவதூறு = பழிப்பு.

துன்னல் = சிறு திவலை.

நீர்த்திவலையைக் குறித்தற்குத் துன்னல் என்றொரு சொல் லுண்மையாலும், தெறிக்கப்படும் ஒருவகைக் கா- தெல் என்று பெயர் பெற்றிருப்பதாலும், துள் துன் என்னும் ஈரடிகட்கும் பொதுவாகத் துல் என்றொரு வேருண்மை ஊகிக்கப்படும்.

பறவைகள் புணர்ச்சி வேளையிற் சிறப்பாகவும், பிற வேளை களிற் பொதுவாகவும், தம் உடம்பினின்று மெல்லிறகுகளைத் தூவுவ தினால், அவற்றிற்குத் தூவு என்னும் பெயருண்டாயிற்று.

தூவு - தூவி.

தூவு - தூவல் = இறகு, இறகினாலான எழுதுகோல். Pen என்னும் ஆங்கிலச் சொல்லும் இக்காரணம் பற்றியதே. L. penna, feather.

உகு துளி தூவு என்னுஞ் சொற்கள், முதலாவது முன் சிந்துதல் என்றே பொருள்பட்டு, பின்பு சிந்துதல் என்னும் பொதுப் பொருளை உணர்த்தி வருகின்றன. நீண்ட காலக் கடப்பினால் அவற்றின் முன்மைக்

கருத்து இன்று மறைந்துவிட்டது. இன்றும் தெளித்தல் வினை முன்னன்றி வேறுபுறத்தில் நிகழாமை காண்க.

### (5) முற்செல்லுதல்

இயற்கையான செலவெல்லாம் முற்செலவே.

துள்ளுதல் என்பது ஒரு முறை முன்னோக்கித் தாவுதல்; முற் செலவு என்பது நெடுகச் செல்லுதல். இது செல்லுதல் செலுத்துதல் ஆகிய இரண்டையுந் தழுவும்.

உ-தல் = முன் செல்லுதல், செல்லுதல்.

உ-த்தல் = செலுத்துதல்.

உ- - ஒ-. ஒ-தல் = செலுத்துதல்.

***"உப்பொ- ஒழுகை"*** *(புறம். 116)*

ஒ- - எ-. எ-தல் = அம்பைச் செலுத்துதல்.

எ- - ஏ - ஏவு. ஏவுதல் = செலுத்துதல், தூண்டுதல்.

ஏவு - ஏவல் - ஏவலன்.

ஏதல் = அம்பைச் செலுத்துதல். ஏ = எ-தல், அம்பு.

ஏவு = அம்பு.

எ- - எயின் = எ-யும் வேடர்குடி. எயின் - எயினன்.

இனி, எ-நன் - எயினன் - எயின் என்றுமாம்.

எ- - எயில் = மறவிருந்து எ-யும் மதில்.

உகைதல் = செல்லுதல். உகைத்தல் = செலுத்துதல்.

உகை - அகை. அகைத்தல் = செலுத்துதல்.

ஓசுதல் = செலுத்துதல். ஓசுநன் = மீகாமன், படகோட்டி, பரவன்.

ஓசு - ஓச்சு. ஓச்சுதல் = செலுத்துதல், தூண்டுதல்.

துரத்தல் = போதல் (த. வி.). செலுத்துதல், .தூண்டுதல், நடத்துதல் (பி. வி.).

துர - துரம் - துரந்தா - துரந்தரன் = செலுத்துவோன், நடத்து வோன், பொறுப்பாளி, தலைவன்.

ஒ.நோ: புர - புரம் - புரந்தா - புரந்தரன் = அரசன் (காவலன்), விண்ணரசன்.

துரம் = பொறுப்பு, தலைமை.

துர - துரை = தலைவன், சிற்றரசன்.

முன் - முன்னுதல் = முற்படுதல், செல்லுதல்.

முள் - (முடு) - விடு. விடுத்தல் = முற் செலுத்துதல், அனுப்புதல். விடு - விடை - விடையில் - விடையிலான்.

விடு - விடுப்பு. விடை = செலவு, செல்ல உத்தரவு.

முள் - (மு-) - (முயம்) - வியம் = முற்செலுத்துதல், செலுத்துதல், ஏவுதல், தூண்டுதல்.

வியங்கொள் - வியங்கோள் = ஏவல், மதிப்பேவல்.

வியங்கொள்ளுதல் = மாடு குதிரை முதலிய விலங்கைத் தூண்டிச் செலுத்துதல், தேரோட்டுதல், தூண்டுதல், ஏவுதல்.

'தேர்வியங்கொண்ட பத்து' என்னும் ஐங்குறுநூற்றுப் பிரிவுப் பெயரை நோக்குக.

## (6) விரைவு (துடுக்கு)

விரைவு அல்லது வேகம் என்பது, ஒப்புநோக்கிச் சொல்லும் உறவுப் பண்பாகும். ஒன்றன் செலவைத் தனிப்பட வேகம் என்று சொல்ல முடியாது. மாட்டு வண்டியைவிடக் குதிரை வண்டியும், குதிரை வண்டியைவிட மிதிவண்டியும், மிதிவண்டியைவிடப் புகைவண்டியும், புகைவண்டியைவிட இயங்கி (motor) வண்டியும், வேகமாகச் செல்லும். ஒரே வண்டியை எடுத்துக்கொள்ளினும், அதன் மென்செல வொடு ஒப்புநோக்கியே அதன் கடுஞ்செலவு வேகம் எனப்படும்.

ஆகவே, இயங்கும் பொருள் ஒன்றாயினும் பலவாயினும், ஒன்றைவிட இன்னொன்றும், ஒரு செலவைவிட இன்னொரு செலவும் முன் செல்வதே வேகம் எனப்படுகின்றது. ஆதலால், முற்செலவு என்பது இயல்பான செலவென்றும், ஒரு செலவினும் இன்னொரு செலவு முற்படுவதே வேகம் என்றும் அறிந்துகொள்க.

விரைவு என்பது ஒரு வினையை முந்தித் தொடங்கி முந்தி முடிப்பதையும், வேகம் என்பது ஒரு வினை செ-தற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய வினை வீதத்தையும் குறிக்கும்.

**i. லகர னகர வெதுகை**

ஒல் - ஒல்லென = விரைவாக.

ஒ- - ஒ-யென = விரைவாக.

துள்ளுதல் = விரைதல். துள் - துண் - துண்டை = துடுக்கானவன்.

துண்ணெனல் = விரைதல்.

துனைதல் = விரைதல்.

துவல் = விரைவு. துவலுதல் = விரைதல்.

பொள் - பொள்ளென = விரைவாக.

முள் - முண்டு - மண்டு. மண்டுதல் = விரைந்து செல்லுதல்.

***"கடற்படை குளிப்ப மண்டி"*** ***(புறம். 6)***

(முள்) = (மு-) - முயல் = வேகமாக ஓடும் சிறு விலங்கு வகை.

(முள்) - (மள்) - மழ - மழமழ (விரைவுக் குறிப்பு).

(முல்) - (மல்) - வல் = விரைவு. வல்லே = விரைவாக.

வல் - வல்லை = விரைவு.

***"ஒன்றின் வல்லே செயிற் செ–க"*** ***(நாலடி. 4)***

**ii. ரகர வெதுகை**

சுரு - சுருக்கு = விரைவு. சுருக்கா- வா என்பது வழக்கு.

சுருசுருப்பு = ஊக்கம். சுரு - சரு - சருக்கு (வி. கு.).

சரு - சரேல் ( வி.கு.). சரு - சர - சரசர ( வி. கு.).

சர - சரட்டு (வி.கு.).

துர - துரை = வேகம். துரத்தல் = ஆணியை முடுக்குதல். துர - துரத்து (பி.வி.). துரத்துதல் = முடுக்குதல், வேகமா- ஓட்டுதல்.

(புரு) - பர - பரபர - பரபரப்பு.

(புரு) - பரு - பரி = வேகம், வேகமான செலவு, வேகமாகச் செல்லுங் குதிரை. பரிதல் = ஓடுதல்.

(புரு) - பொரு - பொருக்கு (வி. கு.). பொருக்கென்றெழுந்தான் என்று கூறுதல் காண்க. பொருக்கு - பொக்கு (கொச்சை வழக்கு). பொருக்க = விரைவாக.

(முரு) - விரு - விருவிரு - விருவிருப்பு = விரைவு. விருவிரு வென்றுபோ என்னும் வழக்கைக் காண்க.

விரு - விருட்டு (வி. கு.).

விரு - விர - விரை - விரைவு. விரை - விரைசி.

**iii. றகர வெதுகை**

குறு - குறுகுறு. குறு குறுத்தல் = வேண்டாததைச் செ-ய விரைதல். குறு - குறும்பு = சேட்டை.

சுறு - சுறுசுறு - சுறுசுறுப்பு. சுறு - சுறுதி = வேகம்.

துறு - துறுதுறு. துறுதுறுத்தவன் = வேண்டாவினை அல்லது குறும்பு செ-துகொண்டே யிருப்பவன்.

(நூறு) - நொறு - நொறில் = விரைவு.

(முறு) - முறுக்கு = வேகம், துடுக்கு.

**iv. டகர வெதுகை**

(உடு) - (ஒடு) - ஓடு. ஓடுதல் = விரைந்து செல்லுதல்.

குடு - குடுகுடு (வி. கு.). குடுகுடுவென்று ஓடுகிறான் என்னும் வழக்கைக் காண்க. குடுகுடுத்தான் = விரைவாளன் (அவசரக்காரன்.)

குடு - கடு. கடுத்தல் = விரைதல், விரைந்தோடுதல். கடும்பா = விரைந்து பாடும் பா. கடுநடை = வேகநடை.

***"காலெனக் கடுக்குங் கவின்பெறு தேரும்"*** ***(மதுரைக். 388)***

கடு - கடுகு - கடுக்கம் = விரைவு.

கடுகுதல் = விரைதல்.

கடு - கடி - கடிது. கடி = விரைவு.

***"எம்மம்பு கடி விடுதும்"*** ***(புறம். 9)***

சுடு - (சுட்டு) < சுட்டி = துடுக்கு, குறும்பு, சுட்டி - சுட்டிக்கை - சூட்டிக்கை = விரைவு.

சுடு - சடு - சடுதி. சடு - சடுத்தம் = விரைவு.

சடு - சட்டு. சட்டென்று செ-, சட்டுச் சட்டென்று செ-, என்று ஏவும் வழக்கைக் காண்க[3]. சட்டு- சட்ட - விரைவாக.

துடு - துடுக்கு = வேகம், துணிவு, குறும்பு. துடு - துடும் (வி.கு.). துடு - திடு - திடும் (வி.கு.). திடு - திடீர் (வி.கு.). துடு - துடி - துடிப்பு + ஒன்றைச் செ-ய விரைதல். துடித்தல் = விரைந்து அடித்துக் கொள்ளுதல்.

3. குதிரை வண்டி மாட்டு வண்டியைவிட வேகமா-ச் செல்வதால், அது சடுக்கா (jutka) வெனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்

(நுடு) - நொடு - நொடுநொடு. நொடுநொடுத்தல் = துடுக்கா யிருத்தல். நொடு - நொடுக்கு (வி.கு.).

(புடு) - பொடு - பொடுக்கு (வி.கு.). பொடுக்கென்று போ- விட்டான் என்னும் வழக்கைக் காண்க. பொடு - பொடு பொடு (வி.கு.).

(புடு) - படு பட - படபட - படபடப்பு.

பட - படக்கு. படக்குப்படக்கெனல் = துடித்தல். அச்சத்தால் நெஞ்சம் துடித்தல்.

முடு - முடுகு - முடுக்கு, முடுகுதல்=விரைதல்.

முடுக்குதல்=வேகமா- ஓட்டுதல்.

முடுகுவண்ணம் = விரைந்து செல்லும் குறிலிணை வண்ணம்.

முடுக்கு-மொடுக்கு (வி. கு.).

முடு-மொடு-மொடுமொடு(வி.கு.).

முடு-(மடு)-மட-மடமட(வி.கு.).

**v. தகர வெதுகை**

குது-குதுகுது-குதுகுதுப்பு=விரைவு.

குது-கது-கதும்(வி.கு).

கது-கதழ்-கதழ்வு=விரைவு.

***"கதழ்வும் துனைவும் விரைவின் பொருள"*** ***(தொல். உரி. 17.)***

கது-கதி. கதித்தல்= விரைதல். கதி = விரைவு, வேகம்.

(புது)-(பது)=பதறு-பதற்றம் = பதட்டம்.

(பது)-பதை-பதைபதை-பதைபதைப்பு.

(முது)-(மது)-மத-மதமத(வி.கு.).

(முது)-விது-விதுவிது-விதுவிதுப்பு = நடுக்கம், விரைவு.

விது-விதும்பு-விதுப்பு. விதும்பல் = விரைதல், விரைந்துகூட விரும்புதல். விதுப்பு = விரைவு, விரைந்த வேட்கை.

'அவர்வயின் விதும்புதல்', 'கண்விதுப்பழிதல்' என்னும் திருக்குறள் அதிகாரப் பெயர்களை நோக்குக.

### vi. சகர வெதுகை

(குசு)-கிசு-கிசுக்கு(வி. கு.).

புசு-புசுக்கு-பொசுக்கு (வி. கு.).

புசு-பொசு-பொசுபொசு.

(முசு)-விசு-விசுவிசு (வி. கு.).

விசு-விசுக்கு (வி. கு.).

பொசுக்கென்று போ-விட்டது, விசுவிசுவென்று பிடித்தெரிகிறது, விசுக்குவிசுக்கென்று நடந்து போகிறான், என்பன வழக்கு.

விசு-விசை = வேகம்.

### (7) (நடுக்கம்) அச்சம்

உடலும் நெஞ்சாங்குலையும் விரைந்து அசைவது அச்சத்தைக் குறிக்குமாதலால், விரைவுக் கருத்தில் அச்சக் கருத்துப் பிறந்தது.

துள்-துண். துண்ணெனல் = திடுக்கிடுதல், அஞ்சுதல்.

துண்-துணுக்கு. துணுக்கிடுதல் = திடுக்கிடுதல்.

துணுக்கு-துணக்கம் = நடுக்கம், அச்சம்.

துண்-திண்-திடு-திடுக்கு.

நுடு-நடு-நடுங்கு-நடுக்கு-நடுக்கம்.

விது-விதிர்-விதிர்ப்பு = நடுக்கம். விதிர்விதிர்ப்பு = நடுநடுக்கம். விது-விதுக்கு. விதுக்கு விதுக்கெனல்=அச்சத்தால் நெஞ்சம் படக்குப் படக்கென்று அடித்துக்கொள்ளுதல். இங்ஙனம் அடித்துக்கொள்ளு தலை வெருக்கு வெருக்கென்றிருக்கின்றது என்பர். விதுக்கு - விருக்கு - வெருக்கு-வெருவு-வெரு=அச்சம். வெருவுதல்= அஞ்சுதல். வெரு-வெருள்-வெருளி-அச்சுறுத்தும் புல்லுரு. வெருள்-விரள்-மிரள். விரள் - விரட்டு. விரட்டுதல்=அச்சுறுத்துதல், அச்சுறுத்தி வேகமாக ஓட்டுதல்.

### (8) வீசுதல்

ஒருவன் வேகமா- நடக்கும்போது, அவன் கை வேகமா-வீசுவதாலும், அங்ஙனம் வீசும்போது அது நீளுவதாலும், வேகமா-நடப்பதைக் குறிக்கும் விசு என்னும் சொல், வேகமா- ஒன்றை வீசுவதையும் நீட்சியையுங் குறிக்கும் சொற்களைப் பிறப்பித்துள்ளது.

விசு - விசிறு - விசிறி - சிவிறி. விசிறுதல் = வேகமா- வீசுதல், வீசி யெறிதல்.

விசு - விசுக்கு. விசுக்குதல் = விரைந்து கைவீசுதல், விசிறுதல். விசுக்கு விசுக்கென்று நடக்கிறான் என்பது வழக்கு.

விசு - வீசு. வீசுதல் = வீசியெறிதல், வாரிக்கொடுத்தல், நீளுதல், மிகுதல், நீளவாசனை வருதல்.

வீசு - வீச்சு = வேகம், வீசுதல், ஊஞ்சலாட்டு, நீளம், மிகுதி.

வீச்சா- நடக்கிறான், கைவீச்சுப் பெரிதாயிருக்கிறது, ஊஞ்சலை ஒரு வீச்சு ஆட்டினான், வீடு வீச்சாயிருக்கிறது, வீச்சா-க் கொடு என்பன, முறையே மேற்குறித்த பொருள்கட் கெடுத்துக்காட்டாம்.

வீச்சு - வீச்சம் = நாற்றம்.

காற்றானது நீண்டு செல்வதால், அதனொடு கலந்த வாசனையும் நீண்டு செல்கின்ற தென்க. வீசுதல் என்னும் சொல் வழக்கில் தீய நாற்றத்தையே குறிக்கும்.

வீசு - வீசை = நீண்டு வளரும் மேலுதட்டு மயிர், தலைமயிரும் தாடியும் நீண்டு வளர்வனவே யாயினும், குறுக்காக நீண்டு வளர்வது மீசையொன்றே யாதலின், அது வீசையெனப்பட்டது.

வீசை - மீசை.

ஒருசில சொற்கட்குக் கற்றோர் வழங்கும் வடிவினும் கல்லார் வழங்கும் வடிவே முந்தினதாயுள்ளது.

### (9) ஊக்குதல்

ஊக்குதல் ஊக்கமுண்டாக்குதல். ஊக்கமாவது முயற்சிக்கேது வான முனைப்பு. ஒருவன் தன் மனத்தாலேனும் பிறனாலேனும் ஒரு வினை செ-யத் தூண்டப்பட்ட விடத்தே, அவனிடத்து அதற்குரிய முயற்சி பிறக்கும். தூண்டுதல் என்பது முற்செலுத்துதல். ஒரு குதிரை முற்செல்லுமாறு அதனை ஊர்பவன் அதைத் தூண்டிவிடுவது போன்றதே, ஒருவன் ஒரு வினை செ-யுமாறு அவனது உள்ளம் அவனைத் தூண்டிவிடுவதும்.

உள் - உள்ளம் = ஊக்கம், உள்ளுதல் = ஊக்குதல்.

***"உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை***
***நில்லாது நீங்கி விடும்"*** *(குறள். 592)*

என்று வள்ளுவனார் 'ஊக்கமுடைமை' யதிகாரத்தில் கூறியிருத்தல் காண்க.*

உள் – (உ–) – (உயல்) – உளுல் – உளுற்று.

உளுற்றுதல் = உள்ளந் தூண்டுதல், முயற்சி செ–தல், வருந்தி யுழைத்தல்.

முன் – முனை. முனைதல் = முற்படுதல், முயற்சிசெ–தல், ஊக்கங் கொள்ளுதல். முனை – முனைப்பு.

முள் – (மு–) – முயல் – முயற்சி. முயல் – முயற்று. முயலுதல் = முனைந்துழைத்தல்.

முசு – முசுமுசு – முசுமுசுப்பு = ஊக்கம்.

## (4) மேற்செலவியல்

திறந்த வெளியில் நிலமட்டத்திலிருந்து உயிரிகள் முற்செல்லக் கூடிய திசைகள், பக்கத்திசை எட்டும் மேற்றிசை ஒன்றுமாக ஒன்பதாம். அவற்றுள், மக்களும் மற்றப் பறவா வுயிரிகளும் முற்செல்லக்கூடிய திசைகள் பக்கத்திசையாகிய எட்டே. பறவை ஒன்றே ஒன்பான் திசையும் முற்செல்லக்கூடியதாகும்.

நிலத்திலும் நீரிலுமிருந்து மேலெழும் பொருள்கட் கெல்லாம் முற்செலவென்பது மேற்செலவே. மேற்செலவு முற்செலவில் ஒரு வகையேயாதலால், முற்செலவைக் குறிக்கும் ஊகாரமே மேற்செல வையும் உணர்த்தும் என்க. மேற்செல்லுதல் அல்லது மேன்மேற் செல்லுதல் என்பது, முற்செலவையும் மிசைச்செலவையும் பொதுப் படக் குறித்தல் காண்க. ஏண் சேண் முதலிய சொற்கள் உயரத்தையும் தொலைவையும் பொதுப்படக் குறித்தலையும் நோக்குக.

### (1) எழுதல்

எழுதலாவது கிளர்தலும் துள்ளுதலும். துள்ளுதல் என்பது முன்னோக்கித் துள்ளுதலும் மேனோக்கித் துள்ளுதலும் என இரு வகைத்து. அவற்றுள் முன்னது முற்செலவியலிற் கூறப்பட்டது; பின்னது இவண் கூறப்படும்.

1. உள்ளம் என்பதைப் பரிமேலழகர் ஆகுபெயராகக் கொண்டது பொருந்தாது. மனத்தைக் குறிக்கும் உள்ளம் என்னும் சொல்லும், ஊக்கத்தைக் குறிக்கும் உள்ளம் என்னும் சொல்லும் வெவ்வேறாம். மனத்தைக் குறிப்பது உள்ளிருப்பது என்றும், ஊக்கத்தைக் குறிப்பது முற்செலுத்துவது என்றும் பொருள்படும்.

உன்னுதல் = உயரவெழுதல்.

உசும்புதல் = உறங்கினவன் மெல்ல உடம்பசைத் தெழுதல். உசும்பு - உசுப்பு (பி.வி.).

உகலுதல் = அலையெழுதல்.

உகளுதல் = குதித்தல். உகைத்தல் = எழுதல், எழுப்புதல், உயரக் குதித்தல்.

உதித்தல் = உயரவெழும்புதல்.

குதித்தல் = உயரவெழும்புதல். குதி - கொதி. கொந்தளித்தல் = கடல்கிளர்ந்தெழுதல்.

துள்ளுதல் = குதித்தல்.

துள் - துளும்பு. துளும்புதல் = மீன் நீர்மட்டத்திற்குமேல் மெல்லத் துள்ளுதல்.

துளும்பு - தளும்பு. தளும்புதல் = கலம் அசைவதால் நீர் சிறிது துள்ளுதல். தளும்பு - ததும்பு. தளும்பு - தளம்பு.

துளும்பு - துடும்பு. துடும்புதல் = ததும்புதல்.

துள் - தள் - தள - தளதள - தளதளி - தத்தளி.

தள -தளை. தளைத்தல் = கொதித்தல்.

பொங்குதல் = எழுதல், கொதித்தல், மிகுதல்.

முள் - முளி. முளிதல் - பொங்குதல்.

முள் - முளு. முளுத்தல் = உலையரிசி மெல்லத் துள்ளுதல்.

முள் - முண்டு. முண்டுதல் = துள்ளுதல், விதை முளை நிலத்துள்ளிருந்து முட்டியெழுதல்.

முசுமுசுத்தல் = நீர் கொதித்தல்.

**(2) புளித்துப் பொங்குதல்**

சூட்டினாற் பொங்குவது போன்று புளிப்பினாலும் சில பொருள் கள் பொங்கி யெழும்.

உகின் - எகின் = புளி. உகின் - உகினம் - எகினம் = புளி.

நுர - நுரை = புளிப்பினால் எழும் சிறு குமிழி, அதன் நிறமான வெண்மை. நுரை வெண்மையாயிருத்தல் காண்க. நுரை - நரை = வெண்மை. நரைத்தல் = வெளுத்தல்.

***“நரையான் புறத்திட்ட சூடு”*** ***(பழ. 48)***

நுதம்பு = கள். நொதித்தல் = புளித்துப் பொங்குதல்;

(புள்) புளி = புளித்துப் பொங்குவது, புளிப்புச்சுவை, புளிப்புப் பழம். புளித்தல் = புளித்துப் பொங்குதல். புளிக்க வைத்த மா எழும்பி யிருத்தலைக்கொண்டே அது புளித்துவிட்டதென்று அறிந்துகொள் ளுதல் காண்க.

புளி - புளிச்சி = புளிச்சை.

(புள்) - (புர) - புரை - பிரை = புளித்த மோர், பாலைப் புளிக்க வைக்கும் மோர்.

பொங்கு - பொங்கல் = கள். பொருணி = கள். பெருகு = தயிர்.

(முள்) - முளி. முளிதல் = பொங்குதல். முளிதயிர் = நன்றா-த் தோ-ந்த தயிர்.

முண்டகம் = கள் (முள்) - முர - முரப்பு. முரத்தல் = புளித்தல். முர = மோர்.

***“முரமுரெனவே புளித்த மோரும்”***

என்று ஔவையார் கூறுதல் காண்க.

முர - முரை = நுரை.

முகினி = புளி.

**(3) உவர்த்துப் பொங்குதல்**

உவர்நிலமும் பொங்கியெழும்.

(உளம்) - உழம். உழமண் = உவர்மண். (உளம்) - அளம் = உப்பு.

உமண் = உப்பு. உமண் - உமணன்.

உப்புதல் = பொங்கியெழுதல். உப்பு = உவர்த்துப் பொங்கியெழும் சத்து, உவர்ப்புக் கல்.

உவர் - உவரி = உவர்நீர்க் கடல்.

(சுவர்) - சவர். சவர்த்தல் = உவர்த்தல்.

பொங்குதல் - நிலம் உவர்த்தெழுதல்.

பொருமுதல் - நிலம் உவர்த்தெழுதல்.

**(4) உயர்ச்சி**

உடம்பால் உயர்தலும் நிலைமையால் உயர்தலும் இடத்தால் உயர்தலும் என உயர்தல் மூவகை.

ஊ - உ - மேல், உயர்ந்த.

**எ-டு: உத்துங்கள்.**

உத்தரி, உத்தரியம், உத்தூளனம் முதலிய பல வடசொற்களில் முன்னொட்டாயிருந்து, உயர்ச்சி அல்லது மேலுறவுக் கருத்தை உணர்த்துவது உகரமே.

உல்லி - மதில்.

உள் = மேன்மை.

உகத்தல் = உயர்தல்.

***"உகப்பே உயர்வு"*** ***(தொல். உரி. 8)***

உகைத்தல் = உயரவெழும்புதல்.

உச்சம் - உயர்ச்சி. உச்சி = உச்சமான இடம். உத்தரம் = உயர்வு, உயரவிருக்கும் விட்டம், உயர்ந்த வடதிசை.

குமரிமலை மூழ்கிப் பனிமலை எழுந்தபின், வடதிசை உயர்ந்தது; தென்றிசை தாழ்ந்தது. இதனால், அவை முறையே உத்தரம் தக்கணம் எனப்பட்டன. உத்தரம் (உ+தரம்) = உயர்வு. தக்கணம் (தக்கு + அணம்) = தாழ்வு.

உப்புதல் = எழுதல், பருத்தல், வீங்குதல். உப்புசம் = வயிற்றுப் பொருமல்.

உம்பர் = மேல், மேலிடம், ஆகாயம், தேவருலகம், தேவர்.

உம்பரான் = உயர்நிலையி லிருப்பவன்.

உம்பரம் = மேலிடம், ஆகாயம், தேவருலகம்.

உம்பல் = உயரமான விலங்காகிய யானை.

உயர் - உயரம், உயர்வு, உயர்ச்சி, உயர்த்தி.

உவணம் = உயரப் பறக்கும் பருந்து. உவணம் - உவணன்.

"உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?" என்பது பழமொழி.

உவணை = தேவருலகம்.

உவச்சன் - ஓச்சன் - ஓசன் = தெ-வத்தை ஏத்துபவன்.

உறை = உயரம்.

உன் = உயர்ந்த, மிகுந்த. எ-டு: உன்மத்தம்

உன்னுதல் = மூச்சடக்கி எழுதல், உயரக் குதித்தல். உன் - உன்னதம்.

உன்னிப்பு = உயரம்.

ஊங்கு = உயர்வு, மிகுதி.

ஊர்தல் = ஏறுதல், ஏறிச் செல்லுதல். ஊர் - ஊர்தி.

ஊர்த்தம் = மேல் > ஊர்த்வம் (urdhva) - வ.

ஒ-யல் = உயர்ச்சி. ஒ-யாரம் = உயர்நிலை.

ஒயில் = ஒ-யாரம், உயரக் குதித்தாடும் கும்மி.

ஓங்கு - ஓங்கல் = யானை, மலை. ஓங்கு - ஓக்கு - ஓக்கம் = உயரம், பெருமை.

ஓச்சுதல் = உயர்த்துதல். ஓச்சு - ஓச்சம் = உயர்வு, கீர்த்தி.

***"கடிதோச்சி மெல்ல வெறிக"*** ***(குறள். 562)***

ஒப்புதல் = உயர்த்துதல்

ஓம்புதல் = உடல் உயருமாறு வளர்த்தல், பேணுதல், காத்தல்.

ஓர்கை = யானை.

ஓவர் = ஏத்தாளர்.

குடம் = உயர்ந்த மேற்கு. கொடுமுடி = உயர்ந்த மலைக் குவடு. கோடு = மலையுச்சி.

குவி = சுவர்.

சுவல் = மேடு. சுவலை = அரச மரம். "அரசுபோ லோங்கி" என்னும் மரபுவமைத் தொடரை நோக்குக.

சுவர் = மதில்.

சுவணம் = கருடன் (உயரப் பறப்பது).

சூளிகை = செ-குன்று.

துங்கம் =உயர்வு. துங்கன் = உயர்ந்தவன்.

தூங்குதல் = உயர்தல், மிகுதல். தூக்குதல் = உயர்த்துதல், எடுத்தல், எடுத்து நிறுத்தல்.

தூக்கு - தூக்கம் = உயரம், நிறை, விலையேற்றம்.

நூங்கு = உயர்வு, பெருமை, மிகுதி. நூங்கர் = தேவர்.

நூக்கம் = உயரம்.

புங்கம் = உயர்வு. புங்கவன் = உயர்ந்தவன்.

புகழ்தல் = உயர்த்துச் சொல்லுதல். புகல் = புகழ்.

***"பொருபுக னல்லேறு"*** ***(கலித். 102)***

புகுதல் = ஏறுதல். புகு - புகவு = மேலேறுகை.

***"புகவரும் பொங்குளைப் புள்ளியன் மாவும்"*** ***(பரிபா. 10:14)***

புகல்வி = விலங்கின் ஆண். ஒ.நோ: ஏறு - ஏற்றை.

***"புழற்கோட் டாமான் புகல்வியும்"*** ***(குறிஞ்சிப். 258)***

புரம் = உயர்ந்த மனை, அஃதுள்ள நகர், குடிநகர், பதி முதலிய பிற சொற்களும் தனியில்லையும் ஊரையுங் குறித்தல் காண்க. உயர்ந்த கட்டடங்களுள் தலைமையானது கோபுரம். ஒ.நோ: கோநா-, அரசமரம், நாயகத்தூக்கம். புரம் - பரம் = மேல். பரம் - பரன், பரை.

பரண் = உயர்ந்த இருக்கை. பரம்- (பரந்து) - பருந்து = உயரத்தில் பறக்கும் பறவை.

பரன் = மேலோன், கடவுள்.

பர - பரவு - பராவு. பரவுதல் = உயர்த்துக் கூறுதல், புகழ்தல்.

பரம் - வரம் - வரன் = மேலானது.

***"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்***
***வரனென்னும் வைப்பிற்கோர் வித்து."*** ***(குறள். 24)***

பரி = உயர்ச்சி (திவா.).

வார்தல் = உயர்தல், வார் = உயர்ச்சி, பர - வர - வார்.

புரவி = மதில் தாண்டும் உயர்ந்த குதிரை. (திருவிளையாடற் புராணம், நரிபரியாக்கிய படலம். 87 - 94).

புரை = உயர்வு. புரையோர் = உயர்ந்தோர்.

***"புரையுயர் வாகும்"*** ***(தொல். உரி. 4)***

புள் = (மேலெழும்) பறவை.

புள் - (பள்) - (பண்) - பணை = பரண், உயரம், மூங்கில் அரசு முதலிய உயர்ந்த மரம்.

பொக்கம் = உயரம், மிகுதி.

பொகுட்டு = மலை.

பொங்கம் = மிகுதி, பொங்கர் = மலை.

பொருப்பு = மலை.

பொற்றை - பொத்தை - பொச்சை = மலை.

பொறை = மலை. பொறையன் = மலைநாடன், சேரன்.

போற்றுதல் = புகழ்தல், வளர்த்தல், காத்தல்.

போற்றி = இறைவனை ஏத்துபவன், பூசாரி.

முகடு = உச்சி, மேலிடம், கூரை. முகடு - மோடு - மேடு - மேடை. மேட்டிமை =செருக்கு.

முகட்டுப்பூச்சி - மூட்டுப்பூச்சி - மூட்டைப்பூச்சி - மூட்டை.

**(5) உச்சி (தலை)**

உச்சமான உறுப்பு உச்சியாகும்.

உளை = தலை, தலைமயிர்.

உக்கம் = தலை. உவ்வீ = தலை.

உச்சி = மேலிடம், தலை.

சுட்டி = மயிர்முடி.

சுடிகை = தலையுச்சி, மயிர்முடி, சூட்டு.

சூளி = உச்சிக்கொண்டை. சூளி - சூழி = உச்சி, உச்சிக் கொண்டை, மேலிடம். சூழியம் = உச்சிக்கொண்டை, மேலிடம்.

சூழியல் = சுவரின் எடுத்துக்கட்டி (cornice).

சூளிகை = நிலாமுற்றம்.

சூளை - சூடை = தலை, குடுமி.

சூட்டு = உச்சிக்கொண்டை, மதிலுச்சியிலுள்ள ஏவறை.

சூடம் = தலையுச்சி. சூடாலம் = தலை.

சூடு = குடுமி, உச்சிக்கொண்டை.

**(6) உச்சி யணி**

உளை = தலையாட்டம்.

உத்தி = திருமகளுருவம் பொறித்த தலையணி.

சுமத்தல் = மேற்கொள்ளுதல், தாங்குதல், சும - சுமை.

சுட்டி = நெற்றியணி.

சுடிகை = மகுடம், நெற்றிச்சுட்டி.

சூளிகை = தலையணிவகை. சூடிகை = மணிமுடி.

சூழி - யானையின் முகபடாம், சேணம்.

சூழியம் = உச்சிக்கொண்டை யணி.

சூளை = முடிமணி (சூளாமணி). சூளை - சூடை = முடிமணி (சூடாமணி), சடைப்பில்லை.

சூடுதல் = தலையில் அல்லது கொண்டையில் அணிதல்.

பொறுத்தல் = சுமத்தல், மேற்கொள்ளுதல், தாங்குதல்.

**(7) தொங்கல்**

தொங்குகிற பொருள்களெல்லாம் நிலமட்டத்திற்கு மேற்பட உயரத்திற் கட்டப்பட்டவை அல்லது அமைந்தவையாதலின், உயர்ச்சிக் கருத்தில் தொங்கற் கருத்துத் தோன்றிற்று. ஒன்றற்கிடமாகும் கனப்பொரு ளெல்லாம் நிலத்தோடொக்கும்.

உறுதல் = உயர்தல். உறி = உயரத்திற் கட்டப்பட்ட தூக்கு.

உக்கம் = கட்டித் தூக்குங் கயிறு.

தூங்குதல் = உயர்தல், தொங்குதல், தொங்கு கட்டிலில் உறங்கு தல். தூங்கு - தூக்கு - தூக்கம்.

தூக்குதல் = உயர்த்துதல், எடுத்தல், எடுத்து நிறுத்தல், தொங்க விடுதல், தொங்கவைத்துக் கொல்லுதல்.

தூக்கு = ஏற்றம், எடுப்பு, நிறுப்பு, ஒரு நிறை, தொங்கவைப்பு, தூக்கு - தூக்கம், தொங்கவிடும் பை.

தூக்கு - தூக்கணம் = கூட்டைத் தொங்கவிடும் ஒருவகைக் குருவி.

தொங்குதல் = அடி ஒன்றிற் படாமல் வானத்து நிற்றல், ஒன்றைப் பற்றிக்கொண்டு தொங்குதல் போல ஒருவனை நெருங்கி வேண்டல்.

தொங்கல் = தொங்கும் அணி, மாலை.

தொங்கல் - தொங்கலம் = தொங்குவதுபோல் ஆடை கீழிறங்குதல்.

தொங்கட்டம் - தொங்கட்டான் = தொங்கும் அணி, தொங்கும் கடிகார எடை.

தொங்கு - தொக்கம் = எலும்பு முதலியன செரியாமல் வயிற்றில் தொங்கிக்கொள்ளுதல்.

தொங்கல் = தொங்கும் பொருளுக்கும் நிலத்திற்கும் இடையீ டிருப்பதுபோல் வரவிற்கும் செலவிற்கும் இடையீடிருத்தல் (deficit). தொங்கல் விழுதல் என்பது வழக்கு.

**(8) உயர்ச்சி குறிக்கும் இகர முதற் சொற்கள்**

முற்கூறிய உயிரினத் திரிபுப்படி, உயர்ச்சி குறிக்கும் உகரமுதற் சொற்கள் இகர முதலவாகத் திரியும். உ - இ - ஈ.

இவர்தல் = ஏறுதல், உயர்தல்.

கிளம்புதல் = எழுதல். கிளம்பு - கிளப்பு. கிளர்தல் = எழுதல். கிளர் - கிளர்ச்சி.

சிமை = உச்சி.

நிவத்தல் = உயர்தல்.

மிகுதல் = மேற்படுதல்.

மிகு - மீ. மிகுதி - மீதி. மீ = உயரம், மேலிடம், ஆகாயம், மேன்மை. மீ - மீது.

மிசை = உயர்ச்சி, மேல், மேலிடம்.

மிடை = பரண்.

மிதத்தல் = மேலெழுதல், நீர்மேற் கிடத்தல்.

மித - மிதப்பு = உயர்ச்சி, மேடு, தெப்பம்.

மித - மிதவை.

மிதித்தல் = பாதத்தை ஒன்றன்மேல் வைத்தல்.

மிலைதல் = மேற்கொள்ளுதல், அணிதல். மிலை - மலை.

### (9) உயர்ச்சி குறிக்கும் எகர முதற் சொற்கள்

உ-இ-எ-ஏ. உ-எ-ஏ

எஃகுதல் - ஏறுதல்.

எக்குதல் = வயிற்றை நிமிர்த்துதல். எக்கர் = மணல்மேடு.

எகிர்தல் = எழுதல், குதித்தல்.

எட்டுதல் = உயர்ந்து அல்லது நீண்டு தொடுதல். எட்டம் = உயரம், தூரம்.

எட்டன் = உயர்ந்தோன்.

எட்டர் = அரசனுக்கு நாழிகைக் கணக்குக் கூறும் ஏத்தாளர்.

எட்டி = உயர்ந்தவன், சிறந்தவன், பண்டைத் தமிழரசர் வணிகர் தலைவனுக்கு வழங்கிய சிறப்புப் பட்டம்.

எட்டி - செட்டி. செட்டி - செட்டு = செட்டியின் தன்மை. எட்டி - ஏட்டி. செட்டி - சேட்டி.

எடுத்தல் = தூக்குதல், நிறுத்தல். எடுப்பு = உயர்வு.

எடை = நிறை.

எண்ணுதல் = மேன்மேற் கருதுதல், மேன்மேற் கணக்கிடுதல்.

எண் = மேன்மேற் செல்லும் தொகை.

எம்புதல் = எழுதல், குதித்தல்.

எவ்வுதல் =எழுதல், குதித்தல்.

எழுதல் = உயர்தல், கிளர்தல். எழு - எழுவு.

எழு - எழும்பு - எழுப்பு, எழு - எழில் = உயர்ச்சி, அழகு. எழால் = எழுகை, இசையெழுகை.

ஏ = உயர்ச்சி, பெருமை.

***"ஏபெற் றாகும்"*** ***(தொல். உரி. 7)***

ஏ = மேனோக்குகை.

***"கார்நினைத் தேத்தரு மயிற்குழாம்"*** ***(சீவக. 87)***

ஏக்கழுத்தம் = கழுத்து நிமிர்ப்பு, தலையெடுப்பு.

ஏடு = மேன்மை.

***"ஏடுடைய மேலுலகோடு"*** ***(தேவா. 539:2)***

ஏடு = விஞ்சையருலகம்.

ஏட்டன் = மேலோன்.

ஏண் = உயர்ச்சி. ஏணி = ஏறுங்கருவி, உயரவெல்லை, தூரவெல்லை, எல்லை.

***"நளியிரு முந்நீர் ஏணியாக"*** ***(புறம். 36)***

ஏணை = ஏந்தும் தொட்டில். ஏணாப்பு = இறுமாப்பு. ஏட்சி = எழுச்சி.

ஏத்துதல் = உயர்த்துதல், புகழ்தல், வழுத்துதல்.

ஏந்துதல் = மேலாகத் தாங்குதல். ஏந்தல் = மேலோன் அல்லது தாங்குவோன்.

ஏர்தல் = எழுதல். ஏர் = பயிரை எழச் செ-யுந் தொழில், அதற்குரிய கருவியாகிய கலப்பை.

ஏர் - ஏரி = ஏர்த்தொழிற்குரிய குளம்.

எருது (ஏர்து) = ஏர்த்தொழிற்குரிய காளை.

ஏற்றல் (ஏல்) = கையேந்தி வாங்குதல், கொள்ளுதல், மேற் கொள்ளுதல், சுமத்தல். ஏல் - ஏல்வை.

ஏல் - ஏனம் = ஏற்குங் கலம்.

ஏறுதல் = உயர்தல், எழுதல்.

ஏற்றம் = ஏறி மிதிக்கும் குத்துலக்கை, ஆளேறும் அல்லது நீரேற்றும் துலா.

ஏறு - பெண்ணின்மேல் ஏறும் ஆண்விலங்கு.

ஏறு - ஏற்றை - ஏட்டை.

சே = (பெண்ணின் மேலேறும்) ஆண்விலங்கு.

சே - சேவு - சேவல் = விலங்கு பறவைகளின் ஆண்.

சேண் = உயரம், சே-மை, மலைமுகடு, ஆகாயம், துறக்கம். சேண = உயர. சேண் - சேணம் = துறக்கம், விலங்கின் மேலிடும் மெத்தை.

சேண் - சேணி = ஏணி, விஞ்சையருலகம்.

சேணியன் = விஞ்சையன், இந்திரன்.

சேணோன் = மலைவாசி, பரணிலிருந்து காப்பவன். சேண் - சேடு = உயரம், பெருமை.

சேடு - சேடன் = பெரியோன், கடவுள். சேடல் = உச்சிச் செலுந்தில் என்னும் மரம். சேடு - சேடி = விஞ்சையருலகம்.

சேடு - சேட்டம் = மேன்மை. சேட்டன் = பெரியோன், மூத்தவன், தமையன். சேட்டி = தமக்கை.

சேட்டை = மூத்தவள், மூதேவி.

ஏண் - சேண். ஒ.நோ: ஏமம் - சேமம்.

சேண் - சேடு - சேட்டம். ஒ.நோ: கோண் - கோ - கோட்டம்.

சேடம் = பெருமை, மிகுதி, மீதி. ஒ.நோ: மிஞ்சுதல் = மிகுதல், மீதல். மிஞ்சு - மிச்சம்.

எஞ்சுதல் = மேற்படுதல், மிகுதல், மீதல். எஞ்சு - எச்சு - எச்சம். மிகுதியா-க் கொடுத்தலை எச்சா-க் கொடுத்தல் என்பது கொங்கு நாட்டு வழக்கு.

எஞ்சுதல் = கடத்தல்.

*"இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்"* *(பதிற். 61:11)*

தெண்டுதல் = நெம்புதல், மேற்கிளப்புதல்.

தெண்டு - தெண்டில் = தலையை அடிக்கடி மேற்கிளப்பும் ஓணான்.

தேங்குதல் = உயர்தல், மிகுதல்.

தேங்கு - தேக்கு - தேக்கம்.

தேக்கு = உயர்ந்த அல்லது உயர்வான மரம்.

தேக்குதல் = அடிவயிற்றிலுள்ள காற்றை எழுப்புதல், ஏப்பம் விடுதல். ஏப்பம் என்னும் சொல்லும் ஒலிக்குறிப்பொடு எழுச்சி குறித்த ஏகாரங் கலந்ததே.

தேர் = உயரமான ஊர்தி.

தேரி = மணற்குன்று.

நெம்புதல் = கிளப்புதல்.

மெச்சுதல் = உயர்த்திப் பேசுதல்.

மெட்டு = மேடு, மண்திட்டு, யாழிசைத் தானக்கட்டை, இசைப் போக்கு, மேன்மை.

மெட்டு - மெட்டி.

மெத்துதல் = மேலிடுதல், பள்ளத்தை நிரப்புதல், மிகுதல், வெல்லுதல்.

மெத்தை = மேல்நிலை, மேல்தளம். மெத்து - மச்சு.

மே = மேல், மேம்பாடு.

***"மேதக மிகப்பொலிந்த"*** ***(மதுரைக். 19)***

மேதுதல் = பள்ளத்தை நிரப்புதல்.

மேதை = மேன்மை, மேலோன், அறிஞன். மேதாள்வி - மேதாவி.

மே-தல் = விலங்கு மேலாகப் புல்லைத் தின்னுதல், கூரையின் மேல் இலை வைக்கோல் முதலியவற்றை இடுதல்.

மே- - வே-. வே-தல் = மேலணிதல், கூரை மே-தல், தலையின்மேல் முடி சூடுதல், உடம்பின்மேல் ஏதேனும் அணிந்து ஆள் அடையாளம் மறைத்தல். இவற்றிற்கு மூலக் கருத்து மேலிடுதல் என்பதாம்.

வே- - வே-ந்தோன் - வேந்தன் = முடி சூடியவன். சேர சோழ பாண்டியர் மூவரும் முடியுடை யரசராதலால் வேந்தர் எனப்பட்டமை காண்க. கொன்றை வே-ந்தோன் என்னும் பெயர் கொன்றைவேந்தன் என மருவியிருத்தலையுங் காண்க.

வே- = ஒற்று. ஒற்றர் மாறுகோலம் பூண்டு பகைவர் மறைகளை அறிபவராதலால், ஒற்று வே- எனப்பட்டது. உடம்பின்மேல் ஒன்றை அணிந்தல்லது கோலம் மாறுதல் இயலாது. வே- - வே-வு - வேவு = ஒற்று.

மேவுதல் = மேலிட்டுக் கொள்ளுதல், வே-தல்.

மேல் - மேலை, மேலும், மேலாக, மேலிட்டு, மேலுக்கு, மேற்கொண்டு, மேற்பட்டு.

மேலாகு, மேலிடு, மேற்கொள், மேற்படு முதலிய வினைகள் மேல் என்னுஞ் சொல்லை முன்னொட்டாகக் கொண்டவை.

மேல் - மேலா - மேலாவு = மேலதிகாரிகள் (High Command).

மேல் - மேன்மை. மேல் - மேன் - மேன்படு - மேம்படு - மேம்பாடு.

மேலோன் - மேனோன். மேலன் - மேனன். மேல - மேன.

மேல் - மேன் - மேனி. உடம்பின் மேற்புறம், உடம்பு. திருமேனி = இறையுருவம், தூயோருடம்பு.

மேல் - மேற்கு - மேக்கு = மலையாலுயர்ந்த திசை அல்லது கதிரவன் செலவின் பிற்பகுதிக்குரிய திசை.

மேல் - மேலை - மேரை = மேலெல்லை, எல்லை, அளவு. மதிப்பு, மதித்தளிக்கும் மானியம்.

மேல் - வேல் - வேலி = எல்லை, எல்லையிலிடும் முள், எல்லைக்குட்பட்ட நிலம், ஒரு நிலஅளவு.

வேலி - வேலிகம் = வேலியில் வைக்கப்படும் கற்றாழை.

வேல் - வேலியில் இடப்படும் முண்மரம், முட்போற் குத்தும் ஆயுதம்.

வேல் - வேலை = எல்லை, நிலவெல்லையான கடல், கால வெல்லை, காலம்.

வேலை - வேளை = காலம்.

இங்குக் காட்டப்பட்ட இகர எகரவடிச் சொற்கள் பலவற்றிற்கு மூலமான உகர வடிச்சொற்கள் இறந்துபட்டன.

## (10) தன்மைப்பெயர்

மாந்தனுக்கு இயல்பாக நான் என்னும் அகங்கார மிருத்தலாலும், அவன் தன்னலத்தையே முன்னலமாகப் பேணுதலாலும், உயர்ச்சி குறிக்கும் ஏகாரத்தி னடியாகத் தன்மைப் பெயரை அமைத்துக் கொண்டான் முன்னைத் தமிழன் என்க.

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| ஏன் | ஏம் (முதல் நிலை) |
| யான் | யாம் (2ஆம் நிலை) |
| நான் | நாம் (3ஆம் நிலை) |

வந்தேன் வந்தேம் என்னும் தன்மை வினைகளில், ஏன் ஏம் என்னும் தன்மைப் பெயர்கள் இன்றும் விகுதியா- வழங்குதல் காண்க. இவை பிற்காலத்தில் பின்வருமாறு திரிந்தன.

ஏன் - என் - அன் - அல். ஏம் - எம்.

ஏம் - ஆம் - ஓம்

எம் - அம் - ஒம்

யாம் நாம் என்னும் பெயர்கள் வேரளவில் ஒன்றேயாயினும், திரிபு வேறுபாடு காரணமாகவும் வசதிநோக்கியும், முறையே தனித் தன்மைப் பன்மையாகவும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகவும் ஆளப்பட்டன.

முன்னிலையில் நீ நீம் (நீர்) நீங்கள் எனவும், படர்க்கையில் அவன் அவர் அவர்கள் எனவும், இழிவொப்புயர்வு ஆகிய முந்நிலை பற்றிய பெயர்கள் ஏற்பட்டுவிட்டமையாலும்; தன்மையிலும், அரசரும் இறைவனும் தம்மை யாம் என்றே சுட்டுவதாகக் கூறுவது மரபாத லாலும்; யாம் நாம் என்னும் ஒற்றைப் பன்மைப் பெயர்களினின்று யாங்கள் நாங்கள் என்னும் இரட்டைப் பன்மைப் பெயர்கள் தோன்றி யுள்ளன (4ஆம் நிலை).

முதலாவது, யாங்கள் என்பது தனித்தன்மைப் பன்மையாகவும், நாங்கள் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகவும் வழங்கின. பின்பு, யாங்கள் என்னுஞ் சொல் வழக்கற்றுப் போ-விட்டமையால், அதற்குப் பதிலாக நாங்கள் என்பது தவறாக வழங்கி வருகின்றது (5ஆம் நிலை).

## வேற்றுமைத் திரிபு

| எழுவா- | வேற்றுமையடி |
|---|---|
| ஏன், யான் | என் |
| ஏம், யாம் | எம் |
| நான் | நன் |
| நாம் | நம் |
| யாங்கள் | எங்கள் |
| நாங்கள் | நங்கள் |

தமிழில், நன் என்பது இருவகை வழக்கிலும், நங்கள் என்பது உலக வழக்கிலும் அற்றன. “நங்கள்கோன் வசுதேவன்” என்று திருமங்கையாழ்வார் கூறுதல் காண்க.

தெலுங்கிலும் கன்னடத்திலும் நன் என்னும் அடி இன்றும் வழங்குகின்றது.

**(11) வினாச்சொல்**

ஒருவனை எவன் என்று வினாவுவது, ஓர் இடத்திலுள்ள பல பொருள்களுள் ஒன்றை உயர எடுத்துக்காட்டி இதுவா என்று கேட்பது போலிருத்தலால், வினாச் சொல்லும் எழுச்சி அல்லது உயர்ச்சி குறித்த ஏகாரச் சொல்லடியாகப் பிறந்துள்ளது.

ஏ? = எது? எவை? எவன்? எவள்? எவர்? (முதல்நிலை).

ஏ - யா = எவை? (2ஆம் நிலை).

ஏ-ஏ (3ஆம் நிலை). ஏவூர்? (பண்டைத்தமிழ்); எவ்வூர்? (இற்றைத் தமிழ்). எவன் = எது? எவை? (4ஆம் நிலை). எவன் - என்.

ஏ-யா-ஆ. ஏவர் - யாவர் - யார் - ஆர்.

ஏ-ஆ-ஓ. வந்தானா? வந்தானோ? (5ஆம் நிலை).

பெயர்: ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை.

எவன், எவள், எவர், எந்து, எது, என்னது, எவ், எவை, என்ன.

யாவன், யாவள், யாவர், யாது, யா, யாவை; யாவர் - யார், யாவது - யாது.

பெயரெச்சம்: எ, எந்த, என்ன, எனை.

| | | |
|---|---|---|
| வினையெச்சம்: | என்று | (காலம்) |
| | எங்கு, எவண், யாங்கு, யாண்டு | (இடம்) |
| | ஏன் | (காரணம்) |

ஏ எ யா என்னும் மூன்றே வினாவடிகளா- அமைவதையும், ஆ ஓ என்னும் இரண்டும் ஈறாகவன்றி வேறாக வராமையையும், நோக்குக. எ 'ஏ'யின் குறுக்கம்; யா அதன் திரிபு. ஆதலால் மூல வினாவடி ஏ என்னும் ஒன்றே.

**(12) உயர்ச்சி குறிக்கும் அகர முதற் சொற்கள்**

உ-அ-ஆ.

(உகைத்தல் = உயரவெழும்புதல். உகை - அகை.) அகைத்தல் = உயர்த்துதல்.

(உள் = மேன்மை. உள் - (உண்) - அண்.)

அண் = மேல், மேலிடம், மேல்வா-.

அண்பல் = மேல்வா-ப்பல்.

அண் - அண்ணம் = மேல்வா-; அண் - அணல் = மேல்வா-.

அண்ணல் = உயர்வு, உயர்ந்தோன், அரசன், கடவுள்.

அண்ணன் = பெரியோன், மூத்தோன், தமையன்.

அண்ணி = அண்ணன் மனைவி.

அண்ணாத்தல் = மேனோக்குதல்.

அணத்தல் = தலையெடுத்து நிமிர்தல்.

அணர்தல் = மேனோக்குதல். அணரி = மேல்வா-.

அத்தாசம் = அந்தரம். அத்தாசமா-த் தூக்கிக்கொண்டு போகி றான் என்பது தென்னாட்டு வழக்கு.

அந்தரம் = ஆகாயம், தேவருலகம்.

அந்தரக்கோல் = மேலிசை நரம்பு, மேலிசை.

அம்பரம் = மேலிடம், ஆகாயம், தேவருலகம்.

(உம்பரம் - அம்பரம்)

(குதி - கதி.) கதித்தல் = எழுதல்.

### (13) குரவர் பெயர்

ஒருவனுக்கு உயர்ந்தோரான ஐங்குரவருள்ளும் இரு முதுகுரவர் மிகச் சிறந்தவராதலின், அவரைக் குறித்தற்கு உயர்வு குறித்த உகரச் சுட்டின் திரிபான அகரத்தை அடியாகக் கொண்ட பல சொற்கள் கிளைத்துள்ளன.

| **தந்தை** | **தா -** |
|---|---|
| ------ | அக்கை |
| அச்சன் | அச்சி |
| அத்தன் | அத்தி |
| அப்பன் | அம்மை(அவ்வை) |
| ------ | அன்னி, அனி (அணி) |
| ------ | அன்னை (அஞ்ஞை), அனை |
| ஆஞன் | |
| ------ | ஆத்தை |
| ------ | ஆ - |

**குறிப்பு:-** (1) கோடிட்ட இடத்திற்குரிய சொற்கள் வழக்கற்றன போலும்.

(2) தாயைக் குறிக்கும் சில சொற்கள் அன் ஈறு பெற்றும் வழங்குகின்றன.

எ–டு: **அக்கை – அக்கன்**
**அம்மை – அம்மன்**

இவற்றிலுள்ள 'அன்' ஈறு ஒருகால் மறங்குறிக்க வந்திருக்கலாம்.

(3) தாயைக் குறிக்கும் பல சொற்கள் முன்னொட்டுப் பெற்றும் பெறாதும் தமக்கையையும் குறிக்கின்றன.

| எ–டு: **தா–** | **தமக்கை** |
|---|---|
| அக்கை | அக்கை |
| | தமக்கை |
| அச்சி | அச்சி |
| அவ்வை | தவ்வை (தமவ்வை) |

தந்தை பெயரும் இங்ஙனம் தமையனைக் குறிக்கும்.

எ–டு: **ஐயன் –தமையன்.**

(4) குரவர் பெயர்கள் சில விகுதி மாறி அவர்களின் உடன் பிறந்தாரைக் குறிக்கின்றன.

எ–டு: **அத்தன் – அத்தை (தந்தையோ டுடன்பிறந்தவள்)**
**அம்மை – அம்மான் (தாயோ டுடன்பிறந்தவன்)**

(5) தந்தை தா- பெயர் முன்னொட்டுப் பெற்றும் வரும்.

தம்+அப்பன் = தமப்பன் - தகப்பன்.

(தம்+ஆ- = தா-)

(6) குரவர் பெயர்களுட் சில பிறவற்றின் திரிபாகத் தெரிகின்றன.

எ–டு: **அத்தன் – அச்சன்**
**அம்மை – அவ்வை**
**அன்னை – அஞ்ஞை**

(7) ஆண்பால் குறிக்கும் அன்னீறும் பெண்பால் குறிக்கும் இகர வைகார வீறுகளும், முதற்காலத்தில் குரவர் பெயர்களொடு சேர்ந்திருந்ததாகத் தெரியவில்லை.

எ–டு: **அப்பன் – அப்பு**
**அம்மை – அம்மு**

(8) குரவர் பெயர்கள் பாட்டன் பாட்டியரைக் குறித்தற்குப் பால் மயங்காது மீமிசையாக அடுக்கிவருவதுண்டு.

**எ-டு: அப்பச்சு (அப்பச்சி) = பாட்டன்**
**அம்மாச்சி = பாட்டி.**

தா- பெயர்கள் இங்ஙனம் தொடர்ந்து தாயையே குறிப்பது முண்டு.

**எ-டு: அம்மணி (அம்மண்ணி), அம்மனை.**

தா-பெயர் பாட்டியைக் குறிப்பதுமுண்டு.

**எ-டு: அவ்வை = தா-, பாட்டி.**

(9) அம்மை அப்பன் என்னும் பெயர்கள், தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலக மெங்கணும் அவ்வந் நாட்டிற்கேற்பத் திரிந்து வழங்குகின்றன.

(10) மேற்காட்டிய இருமுதுகுரவர் முறைப்பெயர்களை, விதப்பாக அம்மை அப்பன் என்பவற்றை, குழவி வளர்ப்பொலிகளின்பாற் படுத்துவர் மேலை மொழிநூல் வல்லார். ஆயின், அண்ணன் என்னும் பெயர் உயர்ந்தோனுக்கும் தமையனுக்கும் பொதுவாயிருத்தலாலும், ஐயன் என்னும் பெயர் முதலாவது பெரியோனைக் குறித்துப் பின்பு திரிந்தும் திரியாதும் ஐங்குரவரையும் பொதுப்படச் சுட்டுவதாலும், அம்மை அப்பன் முதலிய பெயர்கள் மூப்பும் அருமையும்பற்றிப் பிறருக்கும் பால் தவாறது வழங்குதலாலும், உயர்ச்சி குறிக்கும் உகர வடியின் திரிபான அகரவடியும் உயர்ச்சி குறித்தலாலும், அவற்றைச் சுட்டொலிகளின் பாற்படுத்துவதே சாலச் சிறப்புடைத்தாம்.

ஆரிய மொழிகளெல்லாம் திரிபுடை மொழிக ளாதலின், அவற்றைத் தா-மொழியாகக்கொண்ட மேனாட்டார் அம்மை அப்பன் என்னும் சொற்களை முறையே **மா பா** என்னும் குழவியொலிகளி னின்று திரிந்தவையாகக் கொள்வது வியப்பன்று.

### (14) பின்மை

குறுக்காக வளரும் விலங்கு பறவைகட்கு உடம்பின் உச்சமான இடம் அல்லது மேற்புறம் முதுகாதலின், உகரச்சுட்டிற்குப் பின்மைக் கருத்தும் சிறுபான்மை உரித்தாம்.

மேலும், காலமுன் இடமுன் என முன்மை இருவகைப்பட்டு முன்மைக் கருத்தில் பின்மைக் கருத்தும் பின்னை கருத்தில் முன்மைக் கருத்தும் மயங்குதலால், அதனாலும் முன்மைச் சுட்டு பின்மைக்

கருத்தைத் தழுவுவதாம். இனி, மேல் என்னுஞ் சொல் உச்சம், முன்மை பின்மைகளை உணர்த்துவதையுங் காண்க.

எ–டு: **மேல் = உச்சத்தில். மேனாள் = முன்னாள்; மேல் = பின்பு, அதன்மேல் = அதன் பின்பு.**

உப் பக்கம் = பின்பக்கம்.

உத்தரம் = பின்சொல்லும் மறுமொழி.

உத்தரம் - உத்தரவு = வேண்டுகோளின் பின்தரும் ஆணை அல்லது விடை.

உம்மை = பிற்காலம் (எதிர்காலம்).

***"........................................உம்மை***
***எரிவா– நிரயத்து வீழ்வர்கொல் என்று***
***பரிவதூஉம் சான்றோர் கடன்"*** ***(நாலடி. 58)***

என்பது நாலடியார்.

## (5) நெருங்கலியல்

### (1) அணுகல்

முன்னோக்கிச் செல்லும் உயிரிகள் தாம் அடையக் கருதிய இடத்தை முதலாவது அணுகும். கருத்திலாது நீண்டு செல்லும் ஒரு மரக்கிளையும்கூட அண்மையிலுள்ள ஒரு பொருளை இயற்கையாக அடுக்கும்.

நெருங்கல் என்பது தொட்டு நெருங்கலும் தொடாது நெருங் கலும் என இருதிறத்ததாதலால், இவ் வியல் முற்செலவியலையும் தொடுதலியலையும் அரிமா நோக்காகத் தழுவும்.

(உள்) - அள். அள்ளுதல் = நெருங்குதல்.

அள் - அண் - அணுகு - அணுக்கம்.

அண் - அண்டு - அண்டை. அண் - அண்மு.

அண் - அடு.

அள் - அரு - அருகு.

உறுதல் = நெருங்குதல்.

குள் - குழு - கெழு - கெழுமு. கெழுமுதல் = கிட்டுதல்.

(குட்டு) - கிட்டு. கிட்டுதல் = நெருங்குதல்.

கிட்டு - கிட்டம் = அண்மை. கிட்ட= நெருங்க.

துன்னுதல் = நெருங்குதல். துன்றுதல் = நெருங்குதல்.

துறுதல் = நெருங்குதல்.

தூர்தல் = நெருங்குதல்.

(நுள்) - நள் - நண் - நணுகு.

(நுள்) - (நெள்) - நெரு - நெருங்கு.

முட்டுதல் = நெருங்குதல். கிட்டமுட்ட என்னும் வழக்கை நோக்குக. முட்டடி = அண்மை.

முண்டுதல் = நெருங்குதல். முண்டு - மண்டு.

மண்டுதல் = நெருங்குதல்.

**(2) செறிதல்**

இருபொருள் ஒன்றையொன் றணுகுதல் நெருங்கலும், பல பொருள் ஒன்றையொன்றணுகுதல் செறிதலும் ஆகும். நெருங்கலினும் செறிவு மிக அணுக்கமாகும்.

(உள்) - அள் = செறிவு.

உறு - உற - உறப்பு = செறிவு.

(சுறு) - செறு. செறுத்தல் = செறிதல்.

***“செறுத்த செ–யுள்”*** ***(புறம். 53)***

செறு - செறி - செறிவு.

துன்னுதல் = செறிதல்.

துதைதல் = செறிதல். துதை - ததை.

துவன்றுதல் = செறிதல்.

துறுதல் = செறிதல். துறு - துறுவு - துறுமு - துறும்பு. துறுமுதல் = செறிதல். துறும்புதல் = செறிதல்.

நுள் - நள் - நளி = செறிவு. நள்ளுதல் = செறிதல்.

***“நளியென் கிளவி செறிவும் ஆகும்”*** ***(தொல். உரி. 25)***

பொதுளுதல் = செறிதல். முள் - முண்டு - மண்டு. மண்டு = நெருங்குதல், செறிதல். முறு - விறு - வெறு. வெறுத்தல் = செறிதல்.

விறு - விற - விறப்பு = செறிவு.

***“விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே”*** ***(தொல். உரி. 49)***

முடை - மிடை. மிடைதல் = செறிதல்.

மொ-த்தல் = செறிதல்.

### (3) ஒடுங்கல்

ஒடுங்கலாவது நெருக்கமாதல். இரு அல்லது பல பொருள்கள் ஒன்றையொன்று நெருங்கும்போது நெருக்கம் உண்டாகும். அதனால் ஒடுக்கம் ஏற்படும். ஒடுக்கம் இடைவெளி யொடுக்கமும், பொரு ளொடுக்கமும், ஒழுக்க வொடுக்கமும் என மூவகை.

உல் - உல்லி = ஒடுங்கிய ஆள். உல் - உல்லாடி = உல்லி. உல்லி - ஒல்லி. உல் - ஒல் - ஒல்லட்டை = ஒல்லி.

உல் - உல்கு - (உற்கு) - உற்கம் - உக்கம் = ஒடுங்கிய இடை.

உல் - ஒல் - ஒல்கு. ஒல்குதல் - சுருங்குதல்.

ஒல்கு - ஒற்கம் = ஒடுக்கம், சுருக்கம், தளர்ச்சி. உல் - அல் - அல்கு - அல்குல் = சுருங்கிய இடை. அல்குதல் = சுருக்குதல். அல்கு - அஃகு. அஃகுதல் = சுருங்குதல்.

உள் - ஒள் - ஒரு - ஒருகு - ஒருக்கு. ஒருக்குதல் = ஒடுக்குதல். ஒருக்கு - எருக்கு.

உள் - உடு - உடுகு - உடுக்கு = இடையிலொடுங்கிய கோடங்கி.

உடுக்கு - உடுக்கை.

உடுகு - இடுகு. இடுகுதல் = நெருங்குதல்.

உடுக்கு - இடுக்கு - இடுக்கம் = நெருக்கம்.

இடுக்கு = சிறு சந்து. இடுக்கு - இடுக்கல்.

இடுக்குதல் = நெருக்குதல், நெருக்கிப் பிடித்தல் அல்லது ஏந்துதல். பிள்ளையை இடுப்பில் இடுக்குதல் என்னும் வழக்கைக் காண்க.

இடுக்கு - இடுக்கி = நெருக்கிப் பிடிக்குங் கருவி.

உடு - இடு - இடை = ஒடுங்கிய மருங்குல். இடு - இடுப்பு.

இடு - இடுக்கண் = ஒடுக்கி அல்லது நெருக்கி வருத்தும் துன்பம்.

இடு - இடர். இடர்ப்படுதல் = துன்பத்தால் அல்லது வறுமையால் நெருக்குண்ணுதல்.

இடு - இடங்கு - இடங்கர் - சிறு வழி.

உள் - இள் - இண்டு = சிறிய இடுக்கு. இண்டும் இடுக்கும் என்பது வழக்கு.

இள் - இட்டு - இட்டிது = ஒடுங்கினது, சிறியது. இட்டிடை = சிறிய இடைவெளி. இட்டேறி = ஏற்றமான சிறிய வண்டிப்பாதை.

இட்டிகை = சிறு செங்கல்.

உடு - ஒடு - ஒடுங்கு - ஒடுக்கு - ஒடுக்கம்.

ஒடுங்கு - அடங்கு - அடக்கு - அடக்கம்.

அடங்குதல் = ஒடுங்கியமைதல். அடக்க வொடுக்கம் என்னும் வழக்கைக் காண்க.

உற - உறங்கு - உறக்கு - உறக்கம். உறங்குதல் = ஒடுங்கித் தூங்குதல். ஊரடங்குதல் என்னும் வழக்கை நோக்குக.

(குட்டு) - கிட்டு - கிட்டி = கெண்டைக்காலை நெருக்குங் கருவி.

குள் - குட்கு - குக்கு. குக்குதல் = ஒடுங்குதல்.

குள் - குடு - கொடு - கொடுகு. கொடுகுதல் = ஒடுங்குதல்.

கொடு - (கோடு) - கோடங்கி - கோடாங்கி = உடுக்கு.

சுள் - செள் - செறி. செறித்தல் = நெரித்தல், அடக்குதல்.

நுள் - நெள் - நெரு - நெருங்கு - நெருக்கு - நெருக்கம். நெரு - நெரி, நெரித்தல் = நெருங்குதல்.

முள் - முடு - முடுகு - முடுக்கு = சிறு சந்து.

முடுக்கு - முடுக்கர்.

முள் - (மள்) - வள் = நெருக்கம்.

## (6) தொடுதலியல்

நெருங்கலுக்கு அடுத்து நிகழக்கூடிய தொடர்பு தொடுதல். முற் செல்லும் உயிரிகள் தாம் அடையக் கருதிய பொருள்களை அடுத்த பின் அவற்றைத் தொடும்; தற்செயலாக எதிர்ப்பட்ட பொருள்களையும் தொடலாம். இங்குத் தொடுதல் என்பது கையினால் தொடுவதைமட்டு மன்று, உடம்பாலும் குணத்தாலும் தொடுவதையும் குறிக்கும்.

## (1) தொடுதல் துறை

### மெலிதா-த் தொடுதல்

(உள்) - அள் - அளவு - அளாவு. அளவுதல் = தொடுதல்.

உறுதல் = தோலால் தொடுதல். உறு - ஊறு = தொட்டறிவு.

உல் - ஒல் - ஒற்று - ஒத்து.

ஒத்துதல் = மென்பொருளால் தொடுதல்.

ஒத்து - ஒத்தடம். ஒத்து - ஒற்று - ஒற்றி.

துவளுதல் = தொடுதல். துவளை = ஒத்தடம்.

துவ - துவை - துவைதல் = சாயந்தொடுதல்.

(தூண்டு) - தீண்டு - தீட்டு. தீண்டுதல் = தொடுதல்.

தொடுதல் = உறுதல்.

தோ-தல் = நீரையும் நிலத்தையுந் தொடுதல்.

***"கால்நிலந் தோயாக் கடவுளை"*** ***(நாலடி. கட. வா.)***

பொருதல் = பொருந்தித் தொடுதல், பொருங் கதவு, பொருமுக வெழினி முதலிய பெயர்களை நோக்குக.

முத்துதல் = முகத்தால் தொடுதல்.

### i. தொடும் உறுப்பு (புறணி)

உரி = தோல், மரப்பட்டை. (உல் - உர் - உறு. உர் - உரி)

(தொல்) - தொலி - தோல் - தோடு - ஓடு.

(தொன்) - தோள் = தொடும் உறுப்பான கை, அல்லது சுவலைத் தொடும் புயம்.

துவ - துவக்கு = தோல்.

### ii. தொடங்கல்

ஒரு கருவியைத் தொடுதலே அதைக்கொண்டு செ-யும் வினையைத் தொடங்கலாகும். ஒரு வினையைத் தொடங்கல் அதைத் தொடு தல் போலாம்.

உறுதல் = தொடங்கல்.

எ-டு: **உரைக்கலுற்றான் = சொல்லத் தொடங்கினான்.**

(துடு) - துடங்கு - துடக்கம். துடு - தொடு.

தொடு - தொடங்கு - தொடக்கம்.

தொடுதல் = தொடங்குதல். அன்றுதொட்டு = அன்றுதொடங்கி.

(துவ) - துவங்கு - துவக்கம்.

தொன்றுதொட்டு, அன்றுதொடுத்து, தொட்டகுறை (தொடங்கி விட்ட வினைக்குறை) முதலிய மரபுத் தொடர்களை நோக்குக.

**iii. தொடுப்பு**

தொடுப்பாவது இருபொருட் குண்டான தொடர்பு. அது ஒன்றை யொன்று தொட்டபின் நிகழ்வது.

(துடு) - துடை. தொடு - தொடை.

தொடுத்தல் = இணைத்தல்.

தொடு - தொடுக்கு. தொடுக்குதல் = தொட்டால் விழும் நிலையா-த் தொடுத்துவைத்தல்.

தொடு - தொடுப்பு = இணைப்பு, தகாப் புணர்ச்சியுறவு.

தொடுக்கு - தொசுக்கு = காப்புணர்ச்சி.

தொடு - தொடுசு = வைப்பு. தொடுசு - தொடிசு.

தொடு - தொடுவு = வீட்டைத் தொடர்ந்த கொல்லை.

தொடு - தொடுவை = தொடுத்திருப்பது, புதிய யானையைப் பயிற்றும்படி தொடுத்துவிட்ட யானை, பாங்கன், வைப்பு.

தொடு - தொடர் - தொடர்பு.

(தொல்) - தொற்று - தொத்து.

**iv. துடக்கு**

துடக்காவது தொடுப்பா லுண்டாகுங் கட்டு.

(துடு) - துடக்கு = கட்டு. தொடு - தொடக்கு = கட்டு.

துவ - துவக்கு = கட்டு. துய - துயக்கு = கட்டு.

தொடு - தொடர் - தொடர்பு = கட்டு, கட்டப்பட்ட செ-யுள்.

**v. தொடர்ச்சி**

பல பொருள்கள் முறையே ஒன்றோடொன்று தொடுக்கப்படு வதால் தொடர்ச்சியுண்டாகும்.

தொடு - தொடர் = வரிசை.

அள் - அண் - அணி = வரிசை.

அணி - அணில் = முதுகில் மூவரிசை அல்லது வரியுள்ள அணில்.

அண் - அடு - அடுக்கு - அடுக்கம் - அடுக்கல்.

தொடர் = தொடரி. தொடர் = தொடர்ச்சி. தொடர் = தொடர்வு = தொடர்பு.

தொடு - தொடக்கு - தொடக்கி - தொடரி. (சங்கிலி, கொடி).

தொடு = தொடல் - தொடலை = மாலை.

தொடு = தொடவு - தொடவல் = மாலை.

தொடு - தொடை = மாலை. தொடை - தொடையல் = மாலை.

## (2) முட்டல் துறை

### i. வலிதா-த் தொடுதல்

வலிய பொருள்கள் ஒன்றையொன்று வேகமாகத் தாக்குவது வலிதா-த் தொடுதல்.

உதைத்தல் = தாக்குதல், எற்றுதல்.

ஒட்டுதல் = தாக்குதல்.

***"மாந்த ருறைநிலத்தோ டொட்ட லரிது"*** ***(குறள். 499)***

குட்டுதல் = முட்டியால் தலையைத் தாக்குதல்.

குட்டு - கொட்டு. கொட்டுதல் = முட்டியால் ஒன்றைத் தாக்குதல், குச்சால் பறையை அடித்தல், சுத்தியலால் ஒன்றைத் தட்டுதல். கொட்டுப்பிடி, செம்புகொட்டி முதலிய பெயர்களை நோக்குக.

சொட்டுதல் = தலையிற் குட்டுதல், பறவை ஒன்றைக் கொத்துதல்.

(துட்டு) - தட்டு. தட்டுதல் = கையாலுங் கருவியாலும் கொட்டுதல். தட்டு - தட்டான்.

நொட்டை (யிடுதல்) = சுவை மிகுதியால் அண்ணத்தில் நாவைச் சேர்த்துக் கொட்டுதல்.

பொட்டு - பட்டு. பட்டுதல் என்பது தட்டுதல் என்னும் பொருளில் வழங்கின பண்டை வினைச்சொல்; இன்று வழக்கற்றது. பட்டுதற்கு அடையாக வைத்துக்கொள்ளும் கல் பட்டடை என்றும், பட்டும்

அறை பட்டறை என்றும், பட்டும் சாலை பட்டசாலை என்றும் வழங்குதல் காண்க.

முட்டுதல் = தலையாலும் முகத்தாலும் தாக்குதல். முகம் என்றது ஒரு பொருளின் முனை அல்லது முற்பகுதி. முட்டு = முட்டியில் வாங்கும் குண்டடி.

முட்டு - மொட்டு = தலையில் வாங்கும் குட்டு. மொட்டுமொட் டென்று தலையிற் குட்டினான் என்பது வழக்கு. கொங்கு நாட்டார் குட்டை மொட்டுக்கா- என்பர்.

இங்குக் காட்டிய சொற்கள் வல்லோசை மிகுமாறு டகரம் இரட்டியவை யாதலின், அவை பெரும்பாலும் கடினமான பொருள் களை வன்மையாகத் தொடுவதையே குறிக்கும். தகரவொலி டகர வொலியினும் மெல்லியதாதலின், தகரமிரட்டிய சொற்கள் சற்று மென்மையாகத் தாக்குவதைக் குறிக்கும். தகரம் தனித்து வருவனவும். டகரம் தனித்தும் மெலியோடு கூடியும் வருவனவும், மெலி தனித்தும் இரட்டியும் வருவனவும், இங்ஙனமே.

குத்துதல் = கையால் உடம்பிற் குத்துதல், உலக்கையாற் கூலத்தைத் துவைத்தல்.

குத்து - குற்று.

கும்முதல் = குத்துதல். குமைத்தல் = குத்துதல்.

முண்டுதல் = மெல்ல முட்டுதல்.

மொத்துதல் = உடம்பிற் கையாலும் கருவியாலும் அடித்தல்.

மோதுதல் = முட்டுவதினும் சற்று மெலிதா-த் தாக்குதல்.

கையாலும் உலக்கையாலும் குத்துதல்போல் தொடுதலளவான குத்துதல்களே இங்குக் குறிக்கப்பட்டவை. உள்ளிறங்குமாறு கத்தியாற் குத்துவது போன்றது துளைத்தலியலிற் கூறப்படும்.

**ii. முட்டுக் கொடுத்தல்**

முட்டுக் கொடுத்தலாவது ஒன்று இன்னொன்றை முட்டித் தாங்கும்படி செ-தல்.

உள் - அள் - அண் - அண்டு. அண்டுதல் = நெருங்குதல், பொருந்துதல், முட்டுதல்.

அண்டு - அண்டை = முட்டு.

அண்டை (அண்டக்) கொடுத்தல் = முட்டுக் கொடுத்தல்.

பொது - ஒப்பு, பொருத்தம். பொது - (போது) - போதிகை = தூண்மேல் வைக்குந் தாங்கு கட்டை.

முள் - முட்டு.

முள் - முண்டு - மண்டு. மண்டுதல் = தாங்குதல்.

மண்டுகால் = முட்டுக்கால்.

### iii. ஒலித்தல்

உயிரிகளின் வாயொலிகளல்லாத மற்ற வொலிகளெல்லாம், பொருள்கள் ஒன்றையொன்று தொடுவதினாலேயே அல்லது தாக்குவ தினாலேயே உண்டாகின்றன வென்று முன்னைத் தமிழர் அறிந்து, தொடுவதையும் தாக்குவதையும் குறிக்குஞ் சொற்களினின்று ஒலி பற்றிய சொற்களை அமைத்துக்கொண்டனர்.

உயிரிகளின் வாயொலிகளும், எழுத்தொலிகளாயின், அவற்றின் உடம்புள்ளிருந் தெழுப்பப்படும் காற்றானது, மிடறும்மூக்கும் போன்ற உறுப்பிடங்களையும், அண்ணமும் பல்லும் போன்ற உறுப்புகளையும், தாக்குவதினாலேயே உண்டாகின்றனவென் றறிந்திருந்தனர் என்பது;

***"உந்தி முதலா முந்துவளி தோன்றித்***
***தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்***
***பல்லும் இதழும் நாவும் மூக்கும்***
***அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்***
***உறுப்புற் றமைய நெறிப்பட நாடி***
***எல்லா எழுத்துஞ் சொல்லுங் காலை"*** ***(83)***

என்னுந் தொல்காப்பிய நூற்பாவால் ஊகிக்கப்படும்.

உல் - உலம்பு. உலம்புதல் = அலப்புதல்.

உலம்பு - அலம்பு. அலம்புதல் = ஒலித்தல்.

உல் - ஒல் (ஒல்லெனல்) =ஒலிக்குறிப்பு.

ஒல் - ஒலி. ஒல் - ஓல் = ஒலி, தாலாட்டு. ஓலாட்டு= தாலாட்டு.

ஓல் - ஓலம் = ஒலி, ஓசை, கூவிளி.

குல் - குலை - குரை = ஒலி, ஆரவாரம்.

***"நுரைத்தலைக் குரைப்புனல்"*** ***(பொருந. 240)***

***"குவவுக்குரை யிருக்கை"*** ***(பதிற். 84:20)***

குல் - கொல் (கொல்லெனல்) = ஒலிக்குறிப்பு.

குல் - கல்.

***"கல்லென் பேரூர்"*** ***(சிலப். 12:12)***

கல் - கலி. கலித்தல் = ஒலித்தல்.

சுல் - சில் (சில்லெனல்) = ஒலிக்குறிப்பு. சில் - சிலம்பு. சிலம்புதல் = ஒலித்தல்.

சில் - சிலை. சிலைத்தல் = ஒலித்தல்.

சுல் - சொல் = ஒலி, மொழி. சொல்லுதல் = உரைத்தல்.

சொல் ஒலி வடிவாயிருத்தலால், ஒலி பற்றிய பல சொற்கள் சொல்லையும் உணர்த்துகின்றன.

| | | |
|---|---|---|
| எ-டு: | **அறைதல்** | **= ஒலித்தல், சொல்லுதல்.** |
| | **இசைத்தல்** | **= ஒலித்தல், சொல்லுதல்.** |
| | **இயம்பல்** | **= ஒலித்தல், சொல்லுதல்.** |
| | **கரைதல்** | **= ஒலித்தல், சொல்லுதல்.** |

துழனி = ஒலி. தொனித்தல் = ஒலித்தல், சொல்லுதல். தொனுப்புதல் = அலப்புதல்.

துணதுணத்தல், தொனுதொனுத்தல், தொணதொணத்தல் என்பன, அலப்புதலையும் விடாது பேசுதலையுங் குறிக்கும்.

நுள் - நள் (நள்ளெனல்) = ஓர் ஒலிக்குறிப்பு.

நுள் - (நொள்) - நொடி = ஒலி, சொல்.

புல் - புலம்பு. புலம்புதல் = ஒலித்தல்.

ஒருவன் தனியாயிருந்து தன்னொடு தானே பேசுவது ஒலித்த லளவாயிருப்பதால், அது புலம்புதல் எனப்படும். அதனால் புலம்பு என்னும் சொல் தனிமையைக் குறிக்கும்.

***"புலம்பே தனிமை"*** ***(தொல். உரி. 33)***

இனி, தாக்கும் அல்லது தாக்கப்படும் பொருள்களின் திண்மைக் கும் ஒலிக்குந் தன்மைக்கும் ஏற்பப் பல்வேறு வகையான ஓசைகள் பிறத்தலால், அவற்றைக் குறித்தற்கு வெவ்வேறெழுத் தொலிகள் பயன்படுத்தப் பெறும் என்றறிக.

| | | | | |
|---|---|---|---|---|
| எ–டு: | கட்டு | கெத்து கப்பு | | கண் |
| | சொட்டு | சொத்து சப்பு | சக்கு | சிங்கு கிண் |
| | திட்டு | தொப்பு | திக்கு | தங்கு திண் |
| | நொட்டு | | நொக்கு | நொங்கு, நங்கு |
| | பொட்டு, பட்டு | | | |
| | பொத்து, | | பொக்கு, பக்கு | |
| | மொட்டு, மட்டு | | மொக்கு, மக்கு | |
| | மொத்து | | மொங்கு, மங்கு | |

**குறிப்பு:**–(1)மேற்காட்டிய ஒலிக்குறிப்புச் சொற்கள், ஒலியின் ஒருமை குறிக்கத் தனித்தும் பன்மை குறிக்க இருமுறை அடுக்கியும் வரும்.

எ–டு: பழம் சொத்தென்று விழுந்தது.
பழங்கள் சொத்துச் சொத்தென்று விழுந்தன.

(2) இன்று அகரமுதலவாகவும் இகரமுதலவாகவும் வழங்கும் தாக்கொலிக் குறிப்புச் சொற்கள். முதற்காலத்தில் உகரமுதலவாகவும் பின்பு உகரமோனையுயிர் முதலவாகவும் வழங்கியிருத்தல் வேண்டும்.

(3) தாக்கொலிக் குறிப்புச் சொற்களிலெல்லாம் ஒலிக்குறிப்பும் சுட்டுக் குறிப்பும் நுண்ணிதா-க் கலந்திருக்கும்.

(4)ஒலிக்குறிப்புச் சொற்களும் விரைவுக் குறிப்புச் சொற்களும் ஒன்றுபோல் தோன்றினும் வேறுபட்டவை

| | | |
|---|---|---|
| எ–டு: | ஒலிக் குறிப்பு | விரைவுக் குறிப்பு. |
| | பறவை படபடவென்று சிறகடிக்கிறது. | படபடத்துப் பேசினான் |
| | திடீரென்று விழுந்தது. | திடீரென்று வந்து விட்டான். |

(5) ஒலிகளின் வேகத்திற்கும் நீட்டத்திற்கும் தக்கவாறு ஒலிக்குறிப்புகள் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| எ–டு: | குப்பென்று | புகை வந்தது. | (ஒருமை) |
| | குப்புக்குப்பென்று | புகை வந்தது. | (பன்மை) |
| | குபுகுபுவென்று | புகை வந்தது. | (வேகம்) |

(6) ஆல், ஆர்: ஈல், ஈர்; ஏர், ஏல்; ஓல், ஓர்; முதலிய சொல்லீற்றசைகள் ஒலி நெடுமை குறிக்க வரும்.

எ-டு: தடால், தடார்
குபீல், குபீர்
மொலோர், சளார்

**iv. தட்டல்(தடை)**

ஒரு பொருள் இன்னொரு பொருளை முட்டினவுடன், முன்னதன் முற்செலவு தடுக்கப்படுவதால், முட்டற்கருத்தில் தடைக்கருத்துக் தோன்றிற்று.

ஒட்டு-அட்டு-அட்டி = தடை.

அட்டு-அட்டம் = குறுக்கு.

குறுக்கு நிற்பது எதுவும் தடையாகும். முட்டப்படும் சுவர் முதலியவும் குறுக்கு நின்றுதான் தடுக்கும். ஆதலால், குறுக்கு நிற்றல் எனினும் தடுத்தல் எனினும் ஒன்றே.

அட்டங்கால் = குறுக்காக மடக்கி வைக்குங் கால்.

அட்டு - அட்டணம். அட்டணக்கால் (அட்டணங்கால்) = குறுக் காக மடக்கிவைக்குங் கால்.

அட்டப் பல்லக்கு = குறுக்காகக் காவும் பல்லக்கு.

அட்டம் பாரித்தல் = குறுக்காக (பக்கவாட்டில்) வளர்தல்.

குள் - குறு - குறுகு - குறுக்கு = வழியின் பக்கவாட்டு, வழித்தடை, முதுகின் குறுக்குப் பகுதி.

குள் - (குட்டு) - கட்டு. கட்டுதல் = தடுத்தல், வழியிற் குறுக்காகச் செல்லுதல்.

"காடை கட்டினால் பாடைகட்டும்" என்பது பழமொழி.

துள் - தள் - தட்டு. தட்டுதல் = தடுத்தல். நீருள் மூழ்கினவனுக்குத் தரை தட்டுதலும், முற்செல்பவனுக்குச் சுவர் தட்டுதலும் தடையாகும்.

தட்டு - தட்டி = அறையை அல்லது வழியைத் தடுக்கும் மூங்கிற்பா- அல்லது தென்னங்கிடுகு.

தள் - தளை = தடுக்கும் கட்டு அல்லது விலங்கு, கட்டு அல்லது பிணிப்பு, செ-யுட்சீரின் ஓசைப் பிணிப்பு.

தளைதல் = தடுத்தல், பிணித்தல்.

தள் - தடு - தடை. தடு - தடுப்பு. தடு - தடுக்கு = சிறு தட்டி போன்ற பா-.

தடு - தடக்கு - தடங்கு - தடங்கல்.

தட்டுத் தடையின்றி, தட்டுத் தடங்கலின்றி என்பன மரபுத் தொடர்மொழிகள்.

தள் - (தழு) - (தகு) - தகை. தகைத்தல் = தடுத்தல்.

முள் - முட்டு = முட்டுப்பாடு, தடை.

தீயதைக் காண்டலும் கேட்டலும் நல்வினைக்குத் தடையாகக் கருதுதலின், அவற்றை முறையே. கண்டுமுட்டு கேட்டுமுட்டு என்பர் சமணர்.

முள் - (முடு) - முடை = நெருக்கடி, முடை - முடைஞ்சல்.

முட்டு - (முட்டம்) - விட்டம் = முகட்டின் குறுக்குத் தரம்.

முள் - (முறு) - மறு - மறுக்கு = குறுக்கு. மறுக்காட்டுதல் = குறுக்காக நின்று இடம் வலம் செல்லாதபடி தடுத்தல். குறுக்கும் மறுக்கும் என்பது வழக்கு.

முல் - வில் - விலகு - விலங்கு = குறுக்கு. குறுக்காக வளர்வது, தடுக்குங் கட்டு (தளை).

***"விலங்கூ டறுத்தது"*** ***(சிலப். 16:213)***

வில் - வில்லடை = தடை. விலங்கு - விலங்கம் - வில்லங்கம் = தடை.

விலங்கு - விலங்கல் = நாட்டின் குறுக்கே நின்று ஒன்றன் செலவைத் தடுக்கும் மலை.

"குன்று முட்டிய குரீஇப் போல" என்னும் உவமையை நோக்குக.

ஒருவன் ஓர் அறியாத நாட்டில் சென்றுகொண்டிருக்கும்போது, வழியில் மலையிருப்பின், தடையுண்டு சுற்றிச் செல்வது அல்லது மீள்வது இயற்கை. கரிகால் வளவனின் வடதிசைப் படையெடுப்பு பனிமலையால் தடையுண்டது.

### V. கடை

ஒன்று இன்னொன்றை முட்டும் முனை அதன் கடையாதலால், முட்டற்கருத்தில் கடைமைக் கருத்துத் தோன்றிற்று.

பக்கம் நோக்கியதும் மேனோக்கியதும் எனக் கடை இருவகை. பக்கம் நோக்கியது முனை அல்லது கடை; மேனோக்கியது உச்சி. தலை என்பது இவ் விரண்டிற்கும் பொது.

முன்பு மேற்செலவியலிற் கூறப்பட்ட உச்சிமைக் கருத்தும், இங்குக் கூறப்பட்ட கடைமைக் கருத்தும் ஒன்றே. ஆயினும், 'ஒப்பின் முடித்தல்' என்னும் உத்திபற்றி, மேனோக்கிய உயர்ச்சி குறித்த சொற்களுடன் மேனோக்கிய உச்சி குறித்த சொற்களும் கூறப்பட்டன. எனினும், நட்டுக்கு நிற்கும் நிலைத்திணைப் பொருள்களின் உச்சிப் பெயர்கள் உயர்தற் கருத்தையும் படுக்கையா-க் கிடக்கும் நிலைத் திணைப் பொருள்களின் கடைப்பெயர்கள் முட்டற்கருத்தையும், இருநிலையும் அடையக்கூடிய இயங்குதிணைப் பொருள்களின் உச்சிப் பெயர்கள் அவ் இரு கருத்தையும், அடிப்படையா-க் கொண் டவை யென்றறிக.

படுக்கையா-க் கிடக்கும் ஒரு தூணின் முனை, அது நட்டுக்கு நிற்கும்போது உச்சியா- மாறுதல் காண்க.

குடு - குடுமி = முடி, முடிபு (தீர்மானமான கொள்கை).

***"கொண்ட குடுமித்தித் தண்பணை நாடே"*** ***(புறம். 32)***

குடு - (கடு) - கடை - கடைசி. கடையன் = நாற்பால் வரிசையில் இறுதியில் கூறப்படும் உழவன். கடைச்சி - கடைசி = உழத்தி.

குடு - கொடு - கோடி = கடைசி.

துல் - (தல்) தலை = கடை, உச்சி, மேலுறுப்பு.

இருதலை மணியன், இருதலைக் கொள்ளி, இருதலைக் காமம் முதலிய தொடர்களில், தலை என்பது முனையை அல்லது கடையைக் குறித்தல் காண்க.

***"நடுவண தெ—த இருதலையும் எ—தும்"***

என்பதிலும் அஃதே.

மூண்டு = தலை. முடி = தலை, உச்சி, உச்சிக் கொண்டை, தலைமயிர்.

முள் - முழு - முகு - முகுடம் = முடி. முகுடம் - மகுடம் = முடி, முடிக்கலம், பாட்டின் இறுதித் தொடர்.

முச்சி = தலையுச்சி. மோசிகை = உச்சிமுடி.

முஞ்சம் = உச்சியணி.

**vi. எல்லை**

முட்டுங்கடை ஒரு பொருளின் முடிவிடமா- அல்லது எல்லையா யிருப்பதால், முட்டற்கருத்தில் எல்லைக் கருத்துத் தோன்றிற்று.

உல் - உல, உலப்பு = முடிவு, அளவு, எல்லை.

உல் - ஒல் = எல்லை, முடிவு.

ஒல் - எல் - எல்லை. எல் - எல்கை.

எல் - ஏல் - ஏல்வை = காலவெல்லை.

ஓர் - ஓரம் = முடியும் பக்கம், பக்கம்.

ஓரஞ்சொல்லுதல் = ஒருபாற் கோடிச் சொல்லுதல்.

குடு - கொடு - கோடி = கடைசி, எல்லை. கடைகோடி, தெருக் கோடி என்னும் வழக்குகளைக் காண்க.

துகு - (திகு) - திகை = முடிவு, எல்லை. திகைதல் = முடிதல், தீர்தல், தீர்மானமாதல். 'மாதம் திகைந்த சூலி,' 'அதன் விலை இன்னும் திகையவில்லை', என்பது தென்னாட்டு வழக்கு.

திகை - திசை = முடிவு, எல்லை, பக்கம். (துக்கு) - திக்கு.

திசைச்சொல் = பல திசைகளில் வழங்கும் கொடுந்தமிழ்ச்சொல்.

திசைச்சொல் என்பது தொன்றுதொட்டு வழங்கி வரும் தமிழிலக்கணக் குறியீடாதலாலும், மயங்குதலைக் குறிக்கும் திகை என்னும் சொல்லும் திசை என்று திரிதலாலும், எல்லையைக் குறிக்கும் திசை என்னும் சொல் தென்சொல்லேயாம்.

***"நீ திசைத்ததுண்டோ"*** ***(கம்பரா. கைகேசி சூழ். 18)***

***"இவன் சிந்தைதுழா—த் திசைக்கின்றதே"*** ***(திவ். திருவா—. 4: 6: 1)***

***"திசைப்புறுதலுஞ் சீவர்க்கு"*** ***(வேதா. சூடா. 110)***

என்னுந் தொடர்களில், மயங்குதலைக் குறிக்கும் திகை என்னுஞ் சொல் திசை என்று திரிந்திருத்தல் காண்க. திசை என்னுஞ் சொல்லின் மூலவடிவான திகை என்பது வடமொழியில் வழங்காமையையும் நோக்குக.

திசை - (தேசு) - தேசம் - தேயம் - தேம் - திசை = தேசம், பக்கம், இடம்.

***"அவன்மறை தேஎ நோக்கி"*** ***(அகம். 48)***

***"தெவ்வர் தேஎத்து"*** ***(புறம். 6)***

திசை, தேசம் என்னும் சொற்கள் பக்கம் என்னும் பொருளில் வருதலை, 'அந்தத் திசைக்கே போகமாட்டேன்' என்னும் தமிழ் வழக்காலும், 'ஏகதேசம்' என்னும் வடமொழி வழக்காலும் அறிய லாம். ஏகதேசம் = ஒருபக்கம், ஒரு பகுதி.

தேசம் என்னும் சொல் முதலாவது எல்லையைக் குறித்து, பின்பு ஓர் எல்லையில் அல்லது பக்கத்தில் உள்ள நாட்டைக் குறித்தது. ஒ.நோ: சீமை = எல்லை, நாடு.

'திக்குத் திக்கென்று அடித்துக் கொள்ளுகிறது' என்னும் வழக்குண்மையாலும், நாத்தட்டுதல் திக்குதல் எனப்படுதலாலும், திகை என்னுஞ் சொல் ககரவொலி கொண்டிருத்தலாலும், திக்கு என்னும் சொல்லும் தென்சொல்லே யென்க.

முள் - முளி - விளி - விளிம்பு = ஓரம். விளிம்பு - (விளிம்பு) - வடிம்பு.

முட்டு - மட்டு = அளவு. மட்டு - மட்டம் = அளவு, சரியான அளவு, தாழ்ந்த அளவு, தாழ்வு.

கடல்மட்டம், மட்டப்பலகை, மட்டக்குதிரை, மட்டத்துணி முதலிய வழக்குகளை நோக்குக.

**vii. முடிதல்**

உலத்தல் = முடிதல்.

உறுதல் = தொடுதல், முட்டுதல். உறு - இறு - ஈறு. இறு - இறுதி. இறுதல் = முடிதல்.

இறு - இற - இறப்பு = சாவு.

இறுத்தல் = கடமையைத் தீர்த்தல், வரி செலுத்துதல். இறு - இறை = கடமை (வரி).

இறுத்தல் = வழிச்செலவை விட்டிருத்தல், தங்குதல். இறு - இறை - இறைவன் = எங்குந் தங்கியிருப்பவன்.

உறு - அறு - அறுதி = முடிவு.

அறு - அறவு = நீக்கம்.

துவலுதல் = சாதல்.

துல் – (தில்) – (திர்) – தீர். தீர்தல் = முடிதல், நீங்குதல். தீர்மானம் = முடிவு, முடிபு. தீர் – தீர்வை.

பொல் – பொன்று. பொன்றுதல் = இறத்தல், முடிதல்.

முல் – முற்று. முற்றுதல் = முடிதல், இறத்தல்.

முள் – முளி – விளி. விளிதல் = முடிதல், இறத்தல். முளிதல் = முற்றுதல், கெடுதல். விளி – வீ. வீதல் = முடிதல், சாதல். முள் – விள் – விழு – விகு – விகுதி = இறுதி, ஈறு.

முளி – (முழி) – முடி – முடிவு. முடி – மடி. மடிதல் = இறத்தல்.

முடி – முசி. ஒ.நோ. ஒடி – ஒசி. முசிதல் – முடிதல் = இறத்தல்.

"மூங்கில்போற் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்" என்னும் திருமண வாழ்த்து மரபுரையைக் காண்க.

முட்டுதல் = முடிதல்.

முஞ்சுதல் = முடிதல், சாதல். மூசுதல் = முடிதல், சாதல். முச்சுதல் = முடித்தல். மூழ்த்தல் = முதிர்தல். மூழ் – மூ-. மூ-த்தல் = முடித்தல்.

**viii. மழுங்கல்**

ஒன்றோடொன்று முட்டும் பொருள்களுள், மெலியது ஒரே முறையிலும் வலியது பல முறை பின்னும் முனை மழுங்கி மொட்டை யாகின்றன. கூராகச் சீவின் எழுதுகோல் தே-வது, எழுதப்படும் கருவியில் அது பலமுறை முட்டுவதனாலேயே.

(நுள்) – (நுழு) – நழு – நழுங்கு. நழுங்குதல் = மழுங்குதல். நழுங்கு – நழுக்கு – நழுக்கம் = மழுக்கம், மழுங்கல்.

பொட்டு – பொட்டை = கண்ணொளி மழுக்கம்.

முள் – (மள்) – மழு – மழுகு – மழுங்கு – மழுக்கு – மழுக்கம்.
மழுக்கு – மழுக்கை. மழுங்கு – மழுங்கல்.

முள் – முட்டு – மொட்டை – மட்டை. மழுமொட்டை – மழுமட்டை.

முள் – (மொள்) – மொழுக்கு – மொழுக்கட்டை – மொக்கட்டை = மழுக்கமானது.

மொழுக்கு – மொக்கு – மொக்கை = கூரின்மை.

(மொள்) - மொண் - மொண்ணை = மழுக்கம், கூரின்மை.

மொண்ணை - மண்ணை = மழுக்கம்.

மண்ணை - மணை = மழுக்கல், மழுங்கலா-தம்.

மணை - மணையன் = மழுங்கலா-தம்.

**ix. மதிமுட்டு**

மதியானது கூரிய கண்போன்றிருத்தலால், மடமை அதன் மழுக்கமாகக் கூறப்படும். கூரிய மதிக்குக் கூர் என்றே பெயர்.

கூழை = குட்டையானது, மதிக்குறைவு.

*"கூழை மாந்தர்தஞ் செல்கதி"* *(தேவா. 462: 9)*

முட்டு - முட்டாள். முட்டு - முட்டன் = மூடன்.

முட்டு - (முட்டி) - மட்டி. முட்டு - மொட்டை - மட்டை = மூடன். முண்டு = மடமை. முண்டம் = அறிவில்லாதவன்.

**x. மதிமழுக்கம்**

மொண்ணை = கூரின்மை. மொண்ணையன் = அறிவு மழுங்கியவன்.

மொண்ணை - மண்ணை = மழுக்கம், மடமை. மணையன் = மதிக்கூர்மையற்றவன்.

மழுக்கு - மக்கு = மதியற்றவன். மழுக்கட்டை - வழுக்கட்டை = மதிமழுக்கம், மூடத்தனம்.

முண்டு - மண்டு = மதியற்றவன்.

**xi. மொட்டையாதல்**

முனைமழுங்கியது மொட்டையாகும்.

மொட்டையாதல், உண்மையா- மொட்டையாதலும், அணி வகையில் மொட்டையாதலும் என இருவகை.

உடம்பிற்குத் தலையின்மையும், தலைக்குப் பாகை மகுட மின்மையும், மண்டைக்கு மயிரின்மையும், உறுப்பிற்கு அணியின்மை யும், மேலுக்கு ஆடையின்மையும், நிலத்திற்குப் பயிரின்மையும், முடங்கலுக்குக் கையெழுத்தின்மையும், மரத்திற்குக் கிளையின்மை யும், கொம்புள்ள விலங்கிற்குக் கொம்பின்மையும், வாலுள்ள உயிரிக்கு வாலின்மையும், வாலிற்கு அதன் நுனியின்மையும், இவை போல்வன பிறவும், மொட்டைமையாகக் கருதப்படும்.

குட்டு - கட்டு. கட்டாந்தரை = வெறுநிலம்.

குள் - (கூள்) - கூழை = மொட்டைவால், வாலற்றது. அளவடியின் இறுதிச் சீரில் மோனை முதலியன வில்லாத தொடை.

சொட்டு - சொட்டை = வழுக்கை, வழுக்கைத்தலை.

பொட்டு - பொட்டல் = பாழ்நிலம், வெறுநிலம், தலைவழுக்கை.

போடு = மொட்டை.

மூளி = உறுப்புக்குறை, அணியற்றது. மூளிக்குடம் (வாயறுந்த குடம்), மூளிக்காது முதலிய வழக்குகளை நோக்குக. மூளி - மூழி = மூளிக்காதி.

முண்டு - மொட்டையானது, கிளைதறித்த கட்டை.

முண்டு - முண்டம் = தலையில்லாதது, மொட்டையானது, கிளைதறித்த கட்டை, உறுப்புக்குறை, ஆடையில்லா வுடம்பு.

ஆடையில்லா வுடம்பை முண்டக்கட்டை யென்றும் மொட்டைக் கட்டை யென்றும் கூறுவர்.

முட்டு - மொட்டை. மொட்டைத்தலை = பாகையற்ற தலை, மயிர் வெட்டின தலை. மொட்டைமண்டை = மழித்த தலை.

முள் - (மள்) - மண். மண்ணுதல் = மழித்தல். இந்தக் கத்தி மண்ணாது என்பது தென்னாட்டு வழக்கு.

மள் - மழி - வழி. மழித்தல் = மொட்டையடித்தல் (தலை வறண்டுதல்).

***"மழித்தலும் நீட்டலும் வேண்டா"*** ***(குறள். 280)***

முள் - முண்டு - முண்டம் = மழித்த தலை. முண்டன் = மழித்த தலையன், சமணன், மழிக்கும் முடிவினைஞன். முண்டை = மழித்த தலைச்சி, கைம்பெண். முண்டை - முண்டைச்சி. முண்டு - முண்டி. ஒ.நோ: துண்டு - துண்டி.

முண்டித்தல் = தலை மழித்தல். முண்டி = மழித்த தலையன், மழிவினைஞன். முண்டி+அனம் = முண்டனம். ஒ.நோ: கண்டி + அனம் = கண்டனம்.

முண்டி + இதம் = முண்டிதம்.

அனம், இதம் என்பன தொழிற் பெயர் விகுதிகள்.

எ-டு: வஞ்சி - வஞ்சனம், தப்பு - தப்பிதம்.

மொழுக்கு - மொழுக்கன் = வேலைப்பாடில்லாத அணி. மழுங்கு - மழுங்கன் = வேலைப்பாடில்லாத அணி.

(மொழு) - மோழை = மொட்டை, கொம்பில்லா மாடு, மர அடி முண்டம்.

"ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்" என்பது பழமொழி. மோழைமுகம் = (மொட்டை முகமுள்ள) பன்றி, மோழல் = பன்றி.

மொண்டு = மொட்டைக்கை, கைக்குறை. மொண்டு - மொண்டி = கை குறைந்தவன். மொண்டிமுடம் என்பது வழக்கு.

நொண்டுதல் = குறைந்த காலொடு நடத்தல், ஒரு காலால் நடத்தல் அல்லது தாவிச் செல்லுதல்.

நொண்டு - நொண்டி = நொண்டுதல், நொண்டுபவன், ஓரடி குறுகிய ஈரடிச்சிந்து.

முடம் என்பது வளைவு என்றும், மொண்டி என்பது குறை என்றும் வேறுபாடறிக.

**xii. மங்கல்**

மங்கல் என்பது உளி மழுங்கல்.

மழுங்கு - மங்கு - மங்கல்.

மங்கல் நிறம் = மஞ்சள் நிறம். வெள்ளையுமன்றிப் பச்சையு மன்றி இடைநிகர்த்தா- மங்கிய நிறமாகவிருத்தலின். மஞ்சள் நிறம் முதலாவது மங்கல் எனப்பட்டது. மங்கல் - மஞ்சல் - மஞ்சள். ஒ.நோ: கழங்கு - கழஞ்சு.

இலங்கு - இலஞ்சு - இலஞ்சி.

மஞ்சல் = மஞ்சள் நிறமுள்ள சரக்கு.

தமிழ்நாட்டில் கணவனோடு கூடி வாழும் பெண்டிர் அழகிற்கும் உடல்நலத்திற்கும் மணத்திற்கும் மஞ்சள் தே-த்துக் குளிப்பது வழக்கமாதலின், மஞ்சட்கும் மஞ்சள் நிறத்திற்கும் மங்கலத்தன்மை ஏற்பட்டுவிட்டது. திருமண வரிசையில் வைக்கப்படும் பொருள் களுள் மஞ்சளும் ஒன்றாகும்.

மங்கல் - மங்கலம் = மஞ்சட்பூச்சாற் குறிக்கப்பெறும் மகளிர் வாழ்க்கை நலம், மஞ்சளாலும் மஞ்சள் நிறத்தாலும் குறிக்கப்பெறும்

நற்செ-தி, மகளிர் வாழ்க்கை நலத்தின் அடையாளமான அணி (தாலி).

மங்கலம் - மங்கலை = கணவனொடு கூடி வாழ்பவள், கணவனை இழவாதவள்.

மங்கலம் - மங்கலி = மங்கலை.

மங்கை = மங்கலமாகிய மணப்பருவத்தாள்.

மணத்திற்குரியவர் பதினாறாட்டைப் பருவத்தானும் பன்னீ ராட்டைப் பருவத்தாளும் என்று அகப்பொருளிலக்கணமும்,

***"மாகவா னிகர்வண்கை மாநா—கன் குலக்கொம்பர்***
***ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள்"***

***(சிலப். 1 : 2—4)***

என்று இளங்கோவடிகளும் கூறுதலையும், பன்னீராட்டைப் பருவத் தார் மங்கையெனப்படுதலையும், நோக்குக.

மங்கு - மக்கு - மக்கல் = ஒளிமழுங்கல்.

**xiii. வழித்தல்**

மழி - வழி. தலை வழித்தல் முகம் வழித்தல் என்னும் வழக்குக்களைக் காண்க. தலைவழித்தலைத் தலை வறண்டுதல் என்றுங் கூறுவர். வழித்தல் என்பது முண்டித்தல் என்றுமட்டும் பொருள்படும். வறண்டுதல் என்பது தலைமயிரைச் சுறண்டியெடுத்தல்போல் வலிதா- வழித்தலைக் குறிக்கும். அது பின்னர்க் கூறப்படும்.

மயிர் பெயர்வது போன்றே தோல் பெயர்வதும் ஒருவகை முண்டனம் அல்லது மொட்டையாதலால், தோலைப் பெயர்ப்பதும் வழித்தல் எனப்படும். மரமுஞ் சுவரும் போன்ற கரடுமுரடான பொருள் உடம்போடு உரசித் தோலைப் பெயர்த்துவிட்டால், 'மரம் வழித்து விட்டது. 'சுவர் வழித்துவிட்டது' என்பர். கத்தி வழித்தலும் கரடுமுரடான பொருள் வழித்தலும் வினைவடிவில் ஒத்திருத்தலுங் காண்க. வழிதல் என்பது தோல் பெயர்தலாகிய தன்வினையைக் குறிக்கும். வழி - வழல். வழலுதல் = நெருப்பினால் வெந்து தோலுரிதல். வழல் - வழற்று - வழட்டு. வறற்றுதல் = நெருப்பில் வாட்டித் தோலுரித்தல், அல்லது மயிர் நீக்குதல்.

ஒலையால் நாக்கிலுள்ள அசட்டை நீக்குதலும், சீப்பால் தலை மயிரைச் சீவுதலும், மண்வெட்டியால் வா-க்காலிலுள்ள சேற்றை

இழுத்தெறிதலும், சிறங்கையால் ஒரு பொருளை இழுத்துத் தள்ளு தலும், இவை போல்வன பிறவும், வினையிலும் விளைவிலும் கத்தி வழித்தலை ஒத்திருத்தலால், அவையும் வழித்தல் எனப்படும்.

வடித்தல் = நாவழித்தல், நாவைத் திருத்துதல்.

***"வடியா நாவின் வல்லாங்குப் பாடி"*** ***(புறம். 47)***

வழி - வடி - வார். வடித்தல் = தலைமயிரை வாருதல்.

***"வடிக்கொள் கூழை"*** ***(நற். 23)***

வார்தல் = உரிதல் (அகம். 69), வழித்தள்ளுதல், கூட்டுதல், தலைமயிரைச் சீவுதல். வாரி = சீப்பு, குப்பைவாரி முதலிய வாருங் கருவி. சிக்குவாரி சிணுக்குவாரி என்பன தலைமயிர் வாருங் கருவிகள். வார்கோல் - விளக்குமாறு. வாரியன் = களத்தில் நெல்லைக் கூட்டிக் குவிப்பவன், அங்ஙனம் குவித்தலை மேற்பார்க்கும் அலுவலாளன் பள்ளர் ஊராண்மையில் ஆள்களைக் கூட்டுபவன். வாரியம் - வாரியன் = தொழில் மேற்பார்வை, மேற்பார்வைக் குழு.

கும்ப அளந்த படியின் மேலுள்ள கூம்பிய பகுதியைக் கையால் தட்டுதலும் வழித்தலை ஒத்திருத்தலால், தலைதட்டி யளத்தலைத் தலைவழித்தல் என்பர். அளக்கப்படும் பொருள் நீர்ப்பொருளாயின் படிமட்டத்திற்குமேல் கூம்பா தொழுகுமாதலின், அது வழிதல் என்னுந் தன்வினையாற் கூறப்படும். கொள்கலங்களிலும் ஏரி குளம் போன்ற கொள்ளிடங்களிலும் நீர் நிரம்பி யோடுதலை வழிந்தோடுதல் என்பது, இம் முறைபற்றியே.

**xiv. வடித்தல்**

வழி - வடி. சோறு வெந்தபின் நீரை வழியச்செ-தல் வடித்தல் எனப்படும். தானா- வழிந்தோடாத நீரைக் கலத்தைச் சா-த்து வழியச் செ-வது வழித்தலினும் வேறுபட்டதாதலின், வடித்தல் எனப்பட்டது. பொருள் வேறுபாட்டைச் சொல் வேறுபாடு குறித்தது. ஏரி குளங்களில் நீர் நிரம்பித் தானா- வழியாது மடை அல்லது கலிங்கு வழியா-ப் பாயுமாயின், அதுவும் வடிதல் எனப்படும். அங்ஙனம் பா-ச்சுதல் வடித்தல் எனப்படும். கூழுங் கஞ்சியும் போன்ற நெகிழ்பொருள் தானா- வழிதலையும் வடிதல் என்பர்.

வடி-வார். ஒரு கலத்தினின்று நீரை ஊற்றுதலும் ஓர் உலோ கத்தைக் கா-ச்சி யூற்றுதலும் வடித்தல் அல்லது வார்த்தல் எனப்படும். கண்ணீர்போலத் தானா- வடிதல் வார்தல் எனப்படும்.

வார் - வார்ப்பு - வார்ப்படம் = கா-ச்சியுருக்கி வார்த்துச் செ-தது.

***"வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே."*** ***(புறம். 812)***

ஒரு கலத்திலுள்ள நீரை ஊற்றும்போது அதிலுள்ள மண்டியைத் தடுத்தற்குக் கலத்தின் வாயில் துணிகட்டுவது, வடிகட்டுதல் எனப்படும். இதை வடார்க்காட்டார் வேடு கட்டுதல் என்பர். வெயிலுக்குத் தலையில் துணிகட்டுவதையும் ஒப்புமைபற்றி வேடுகட்டுதல் என்பதுண்டு.

**xv. வார்தல் (நீளல்)**

வடியும் நீர்ப்பொருள் நீண்டு நேராக விழுமாதலின், வடிதற் கருத்தில் நீட்சிக் கருத்தும் நேர்புக் கருத்தும் தோன்றின. காதை நீட்டி வளர்த்தலைக் காது வடித்தல் என்பர்.

***"குழைவிரவு வடிகாதா"*** ***(தேவா. 1091:1)***

வடி - வரி - வரிசை. வரி - வரிச்சு - வரிச்சல் = நீண்ட குச்சு. வடி - வார். வார்தல் = நீளுதல், நேராதல், நீளக்கிழித்தல்.

***"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்***
***நேர்பும் நெடுமையுஞ் செ-யும் பொருள"*** ***(தொல். உரி. 19)***

வார் - வாரி = நீண்ட பெருங்கம்பு. வார் - வாரை = நீண்ட பெருங்கம்பு. வாரைவதி = ஆற்றின் குறுக்காக வாரையால் அமைக்கப்பட்ட வழி, பாலம். வாரைவதி - வாராவதி.

வார் = நீண்ட தோல்துண்டு.

வார் - வால் = நீண்ட வுறுப்பு. வால் - வாலம் = வால், நீட்வால முகம் = நீண்டமுகம்.

வாள் = நீண்ட கத்தி. வாளம் = நீண்ட வார், கம்பி. வாள் - வள் - வள்பு = வார்.

வார் - வாரம் = சொல்லொழுக்கமும் இசையொழுக்கமு முள்ள பாடல்.

**xvi. வழுக்கை**

மொட்டையான பொருள்கள், சிறப்பாக மழித்த தலை, வழுக்கையா யிருப்பதால், மழுக்கைக் கருத்தினின்று வழுக்கைக் கருத்துப் பிறந்தது.

உள் - (இள்) - இழு - இழும். இழுமெனல் = வழுவழுப்பு.

முழு - மொழு - மொழுக்கை - மழுக்கை - வழுக்கை. மொழு - மழு.

மழு - மழ - மழமழ - மழமழப்பு = வழவழப்பு. மழு - வழு. மழ - வழ.

வழு - வழுக்கு - வழுக்கல் = வழுவழுப்பு, வழுக்கைத் தேங்கா-.

வழு = வழுக்கை. வழுக்கா- = வழுக்கைத் தேங்கா-.

வழு - வளுக்கை = வழுவழுப்பான இளந்தேங்கா- உள்ளீடு.

வழுதலை = வழவழப்பான கத்தரிக்கா-.

வழுதுணை = கத்தரிக்கா-.

வழுவல் = தேங்கா- வழுக்கை.

வழுவழுப்பு = வழவழப்பு, மென்மை.

வழு - வழுகு. வழுகுதல் = வழுவழுப்பாயிருத்தல்.

வழு - வாழை = வழுவழுப்பான மரம். "மரம் வழுகும்" என்பது விடுகதை.

வழ - வழகு = வழவழப்பு, மென்மை.

**xvii. வழுக்கல்**

வழுக்கையான இடமும் பொருளும் வழுக்கும்.

(உழு) - இழு - இழுக்கல் = வழுக்கல்.

(நுழு) - நழு - நழுங்கு - நழுங்குதல் = வழுவுதல், சறுக்குதல்.

வழு - வழுகு - வழுக்கு - வழுக்கல் = சறுக்கல், சறுக்குநிலம்.

வழுக்குமரம் = சறுக்குமரம்.

வழுவழுத்தல் = வழுக்குதல். வழு - வழுவு. வழுவுதல் = சறுக்குதல்.

வழாஅல் = வழுக்குகை.

***"வழூஉ மருங்குடைய வழாஅ லோம்பி"*** *(மலைபடு. 21)*

**xviii. நழுவல்**

வழுவழுப்பான பொருள் கையைவிட்டு நழுவும்.

முழு - மழு - வழு. முழு - மொழு - மொழுப்பு. மொழுப்புதல் = மழுப்புதல்.

மொழுப்பு - மழுப்பு. மழுப்புதல் = வலக்காரமா-ப் பேசிக் கடமையினின்று நழுவுதல்.

வழு - வழுவு - வழுவல் = நழுவல். வழுவாடி = காரியத்தை நழுவவிடுபவன்.

வழு - வழுக்கு. வழுக்குதல் = தப்புதல்.

(நுழு) - நழு - நழுவு - நழுவல்.

நழுவு - நழுவி = பிடிகொடாதவன்.

நழு - நழுப்பு. நழுப்புதல் = மழுப்புதல்.

### வழுவல்

நெறியினின்று வழுக்கலும் வழுவலும் தவறுதலாதலின், வழுக் கற் கருத்து வழுவற் கருத்தைத் தழுவிற்று.

(உழு) - இழு - இழுக்கு - இழுக்கம் = தவறு, தீயொழுக்கம். இழுக்கு = தவறு.

முழு - மழு - வழு = தவறு. வழு - வழுக்கு - வழுக்கம் = தவறு. வழுக்குதல் = தவறுதல். வழுக்கு = தவறு.

வழு - வழூஉ. வழு - வழால் - வழாஅல் = தவறுகை.

வழு - வழுவு - வழுவல் = தவறு, கேடு.

வழு - வழும்பு = குற்றம்.

### வழவழப்பு

வழுக்கும் பொருள்கள் சில ஒட்டுந்தன்மையனவா யிருத்தலின், வழுக்கலைக் குறிக்கும் சொற்களினின்று பிசின்போல் ஒட்டுகின்ற அல்லது நெ-ப்பசையுள்ள சில பொருள்களின் பெயர்கள் தோன்றி யுள்ளன.

உழு - உழுந்து = வழவழப்பான பயறு.

கொழு - கொழுப்பு.

(நுழு) - (நிழும்) - நிணம். ஒ.நோ: தழல் - தணல்.

(முழு) - மழு - வழு - வழும்பு = நிணம்.

வழு - (வழல்) - வழலை = சவர்க்காரம் (soap).

முள் - (மள) - வள் - வண்டை = வழவழப்பான கா-. வண்டை - வெண்டை.

### xix. குட்டையாதல் (சிறுத்தல்)

முனை மழுங்கின பொருளும் மேன்மேலும் முனை தேயும் பொருளும், குட்டையாகும். குறைதலும் குட்டையாதலே.

குள் - குள்ளம். குள் - குள்ளை. குள் - குள்ளல்.

குள் - குட்டை - கட்டை.

குள் - கூள் - கூளி = குள்ளம், குள்ளமானது.

கூள் - கூழை = குள்ளம், குட்டை, குள்ளமானது, குட்டையானது. கூழை - கூழையன்.

குள் - (குண்) - குணில் = குறுந்தடி.

குல் - கு (குறுமை முன்னொட்டு - diminutive prefix).

எ—டு: குக்கிராமம் (வ.)

ஒ.நோ. நல் - ந. நப்பின்னை, நக்கீரன்.

### xx. தட்டையாதல்

மிகக் குட்டையான பொருள் தட்டையாகும். உயரமான பொருள் களெல்லாம் சற்றுக் குறுகின் குட்டையும், மிகக் குறுகின் தட்டையும் ஆம்.

## சட்டு

சட்டு என்பது தட்டுதலைக் குறித்த ஒரு பழந்தமிழ் வினைச் சொல். சட்டுச் சட்டென்று தட்டுகிறான் என்பது வழக்கு. தட்டும் பொருளும் தட்டப்படும் பொருளும் தட்டையாகும். தட்டுதலும் ஒருவகை முட்டுதலே. முட்டுதல், வினைமுதல் முட்டுதலும் கருவி முட்டுதலும் என இருவகை. சினைவினை வினைமுதல் வினை யொக்கும்.

(சுத்துதல்) = தட்டுதல். சுத்து - சுத்தி - சுத்தியல் = தட்டுங்கருவி. சுத்து - சுட்டு.

(சுட்டு) சட்டு - சடை. சடைதல் = அடிக்கப்படும் ஆணி முனை மழுங்கித் தட்டையாதல்.

சட்டு - சட்டம் = தட்டையான மரப்பட்டி.

சட்டகப்பை = தட்டகப்பை.

சட்டு - சட்டுவம் - சட்டுகம் = சட்டகப்பை.

சட்டுவம் = சட்டகப்பை, தட்டையான பானை.

சட்டுவம் - சருவம்.

சட்டம் = தட்டையான பனையோலை. சட்டம் வாருதல் = ஓலையின் அருகுகளை அரிந்து எழுதுவதற்கு ஏற்றதாக்குதல்.

சட்டம் - சட்டன் = ஓலைச்சுவடி பயிலும் மாணவன்.

சட்டன் + நம்பி = சட்டநம்பி = மாணவர் தலைவனாகிய ஆசிரியன், தலைமை மாணவன். சட்டநம்பி - சட்டம்பி.

சட்டநம்பிப்பிள்ளை - சட்டம்பிப்பிள்ளை - சட்டாம்பிள்ளை.

சட்டம் = மரச்சட்டம், கோடிழுக்கும் சட்டப்பலகை, நேர்மை, செப்பம், முறைமை, நீதியொழுங்கு, வரம்பு, விதி.

மாணவர் பார்த்து ஒழுங்காக எழுதுவதற்கு மேல்வரியில் வரையப்பட்டிருப்பது மேல்வரிச் சட்டம் எனப்படும்.

ஓர் அமைப்பகத்தின் கரும நடப்பிற்குரிய விதியொழுங்கு முழுவதும் சட்டதிட்டம் எனப்படும்.

சட்டம் = விதி, விதிக்கும் அதிகாரம், அதிகாரத்தாற் பெற்ற வுரிமை.

***"இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த காளைதினம் இருபோ ருண்ணும்***
***சட்டமுடன் கொள்ளுண்ணும்.........."***

***(வேதநாயகம்பிள்ளை தனிப்பாடல்)***

சட்டம் - சடங்கு = மதவிதிப்படி அல்லது ஒழுக்க விதிப்படி நடைபெறும் கரணம்.

சட்டம் = படம் கண்ணாடி முதலியவற்றின் நாற்புறமுங் கோக்கப்படும் மரச்சட்டம். சட்டக் கட்டில், சட்டக் கதவு, சட்டப் பரம்பு, சட்ட வாள் முதலியன நாற்புறமுஞ் சட்டங் கோத்தவை.

சப்பரம், முகடு முதலியவற்றிற்குச் சட்டங்கட்டுதல் ஆயத்த வினையாயிருத்தலின், சட்டங் கட்டுதல் என்பது ஆயத்தஞ் செ-தல் என்று பொருள்படும்.

உடம்பு உயிருக்குச் சட்டம்போன்றிருப்பதால், அதுவும் சட்டம் எனப்படும்.

சட்டம் - சட்டகம் (frame, outline).

சட்டம் - சட்டை = உடம்பு, உடம்பின் மீந்தோல், அதுபோன்ற மெ-ப்பை.

மீந்தோல் பெயர அடிபட்டவனை நோக்கி அவன் உடம்பு சட்டை சட்டையா-க் கழன்றுவிட்டது என்றும், பாம்பு மீந்தோல் கழித்தலைச் ‘சட்டை கழற்றுதல்’ என்றும் கூறுதல் காண்க.

சட்டம் - சடம் = உடம்பு. ஒ.நோ: பட்டம் - படம்.

சடம் = (சடல்) - சடலம் = உடம்பு.

ஒ.நோ: படம் - படல் - படலம் (பரப்பு).

சடலம் என்னும் வடிவு வடமொழியிலில்லை. சத்தியும் சடலமும் என்பது உலக வழக்கு.

### சப்பு

சப்பு என்பது, ஒரு நெகிழ்பொருள் ஏதேனும் ஒன்றை முட்டலைக் குறிக்குஞ் சொல். சாணமும் களிமண்ணும் பழச்சதையும் போற் குழைந்த பொருள்களை, நிலத்திற் போடும்போதும் சுவரில் எறியும்போதும், சப்பு என்ற ஒலி கேட்கும். அதனால் ‘சப்பென்று விழுந்தது’ என்பர். அவ் வொலி யெழப் போடப்படும் குழை பொருள்கள் தட்டையான வடிவங் கொள்ளும். அதனால், சப்பு என்னும் ஒலிக்குறிப்பினின்று தட்டையாதற் கருத்துணர்த்தும் பல சொற்கள் பிறக்கும்.

(சுப்பு) - சப்பு - சப்பை = தட்டை, தட்டையானது, தட்டையான தொடைப் பகுதி.

சப்பைக் கா-, சப்பைக் கால், சப்பைத் திருக்கை, சப்பை மூக்கு, சப்பை வா-, சப்பை யெலும்பு முதலிய வழக்குகளைக் காண்க.

சப்பு - சப்பட்டை = தட்டையானது, சிறகு. சப்பட்டையரம் = தட்டையரம்.

சப்பு - சப்பல் = சப்பட்டை. சப்பல் - சம்பல் = விலைத் தாழ்வு.

சப்பு - சப்படி = சப்பட்டை.

சப்பை = தட்டையான பதர். பதர்போற் பயனற்றவன் (பதடி).

சப்பு - சப்பன் = பயனற்றவன்.

சப்பு - சப்பரை = மூடன். சப்பட்டை = மடையன்.

சப்பு - சப்பங்கி = மந்தன்.

சப்பு - சப்பரம் = மொட்டையான எடுப்புத் தேர்.

சப்பு - சப்பளி. சப்பளிதல் = சப்பையாதல்.

சப்பளித்தல் = அடியிற் சப்பையாக உட்கார்தல்.

சப்பளி - சப்பளம் - சப்பணம் = சம்மணம்.

சப்பணங் கூட்டுதல், சம்மணங் கூட்டுதல் என்பன வழக்கு.

சப்பளக்கட்டை = சப்பையான தாளக்கட்டை (சப்பளாக் கட்டை).

சப்பு - சப்பத்தி = தட்டையான முத்து.

சப்பு - சப்பாத்து = (தட்டையான) செருப்பு.

சப்பாத்து - சப்பாத்தி = தட்டையான அல்லது செருப்புப் போன்ற இலையுடைய கள்ளிவகை.

வடவர் தட்டையான அப்ப (ரொட்டி) வகையைச் சப்பாத்தி என்பது கவனிக்கத்தக்கது.

சப்பு - (சப்பாளி) - சப்பாணி. ஒ.நோ: களவாளி - களவாணி.

சப்பாணி = நிலத்திற் சப்பையாயிருக்கும் முடவன், அவனைப் போல் குழந்தை அமர்ந்திருந்து கைதட்டும் நிலை.

தட்டை என்பது உயரத்திற்கு மாறான தன்மையாதலால், அதை யுணர்த்தும் சப்பையென்னும் சொல் பொதுவாகத் தாழ்வான நிலை யையே குறிக்கும்.

சப்பை = தட்டையானது, தாழ்ந்தது, பயனற்றது, சுவையற்றது, கெட்டது.

சப்பைத்துணி = மட்டமான துணி. சப்பை நிலம் = பயனற்ற நிலம், சப்பை வாக்கு (சப்பட்டை வாக்கு) = பயனற்ற சொல்.

சுவையற்றதைச் சப்பென்றிருக்கிறது என்பது உலக வழக்காத லால், சப்பு என்பதே சப்பை யென்று திரிந்திருத்தல் உணரப்படும்.

சொட்டுச் சொட்டென்று சொட்டுகிறது, சொத்தென்று விழுந்தது என்னும் வழக்குண்மையாலும், தட்டுங் கருவி யொன்று சுத்தி எனப்படுதலாலும், சட்டு சப்பு முதலிய சொற்களும் தொடக்கத்தில் உகர முதலாகவே யிருந்திருத்தல் வேண்டும்.

## தட்டு

(துட்டு) - தட்டு.

தட்டுதல் = கையால் அல்லது கருவியால் கொட்டுதல்; அஃதாவது ஒன்று இன்னொன்றை வலிதா- முட்டச் செ-தல்.

தட்டு - (தடை) - தறை. தறைதல் = சடைதல்.

தட்டு = தட்டையானது.

துலைத்துட்டு, தேர்த்தட்டு, பூத்தட்டு, வெற்றிலைத் தட்டு முதலியவற்றை நோக்குக. பாத்தி வரிசையான நிலப்பகுதியும் தட்டு எனப்படும்.

தட்டுக் கூடை = தட்டையான கூடை.

தட்டு - தட்டம் = தட்டையான கிண்ணம்.

தட்டு - தட்டை = தட்டையானது, அறிவிலி,

(துட்டு) - திட்டு (ஒ.கு.). திட்டுதிட்டென்று கேட்கிறது என்பது உலக வழக்கு.

தட்டை - தடை. வாழைப்பட்டையை வாழைத்தடை என்பர்.

## தொப்பு

தொப்பு (ஒ.கு.). ஒருவன் துணி துவைப்பதைக் குறிக்கும்போது, தொப்புத் தொப்பென்று துணியை அடிக்கிறான் என்பது உலக வழக்கு.

தொப்பு - தப்பு - தப்புதல் = துணி துவைத்தல்.

தப்பு - தப்பை = அடி (தெ.). தட்டையானது, மூங்கிற்பற்றை. தப்பை வைத்துக் கட்டுதல் என்னும் வழக்கைக் காண்க.

தப்பு - தப்பளம் = பற்று.

தொப்பு - துவை. துவைத்தல் = துணியடித்தல், சம்மட்டியா லடித்துத் தட்டையாக்குதல்.

## பொட்டு - பட்டு

பட்டுதல் என்பது தட்டுதலைக் குறித்த ஒரு பண்டை வினைச்சொல். பட்டடை என்னுஞ் சொல்லை நோக்குக.

பட்டு - பட்டம் = பட்டையான தகடு. ஒரு தலைவனுடைய சிறப்பைப் பொறித்து அவனது நெற்றியிற் கட்டும் தகடு, அத் தகட்டிற் பொறிக்கப்படும் சிறப்புப் பெயர், ஒருவனுக்கு மக்கள் புகழ்ச்சி

யாகவோ இகழ்ச்சியாகவோ வழங்கும் சிறப்புப் பெயர், தட்டையான காற்றாடி, மரப்பட்டை, சீரை (மரவுரி), சீரைபோன்ற துணி.

பட்டங் கட்டுதல், பட்டஞ் சூட்டுதல், பட்டமளித்தல், பட்டப் பெயர் முதலிய வழக்குகளை நோக்குக.

பட்டம் - படம் = துணி, துணியில் எழுதப்படும் ஓவியம்.

படம் - பணம் = தகடான காசு.

படம் - படாம் = துணி, துணிக்கச்சு, யானையின் முகபடாம்.

படம் - படகம் = திரைச்சீலை, படமாடம்.

படம் - படங்கு = ஆடை, திரை, படமாடம், துப்பாக்கியின் அடி, பாதத்தின் முற்பகுதி.

படங்கு -படங்கம் = படமாடம்.

படம் - படவு - படகு = பா- கட்டிய தோணி.

படம் - படல் = தட்டிபோன்ற அடைப்பு.

படல் - படலம் = மேற்கட்டி.

படல் - படலிகை = பூந்தட்டு.

பட்டு -பட்டா = பட்டைவாள், வண்டிப் பட்டை, ஆவண ஏடு, ஆவணம்.

பட்டு - பட்டி = சீலை, தகடு, ஏடு, ஏட்டிலெழுதப்படும் அட்டவணை, மூங்கிற் பிளாச்சு, தட்டி, தட்டியாலமைத்த கால்நடைத் தொழு, கால்நடைப் பட்டியுள்ள சிற்றூர், பக்கத்துக் கொல்லைகளிற் போ- மேயும் பட்டிமாடுபோற் கட்டுக்காவலின்றித் திரிபவன்.

பட்டி - பட்டியல் = பொருள்விலை யட்டவணை, தட்டையான வரிச்சல்.

பட்டி - பட்டிகை = ஏடு, பட்டயம், சீலை, அரைக்கச்சை, மேகலை, யோகப்பட்டை.

பட்டு - பட்டை = தட்டையான பொருள்.

மரப்பட்டை, வண்டிப்பட்டை, வாழைப்பட்டை, பொடிப்பட்டை, தோட்பட்டை, யோகப்பட்டை முதலிய பெயர்களையும், பட்டை யடித்தல், பட்டைதீர்த்தல் முதலிய வழக்குகளையும் பட்டையரம், பட்டைப்புழு முதலியவற்றையும் நோக்குக.

பட்டை - பட்டையம் - பட்டயம் = பட்டைவாள், ஏடு, தகடு, செப்பேட்டாவணம்.

பட்டை - பற்றை - பத்தை = தட்டையானது.

மூங்கிற்பற்றை தேங்கா-ப்பற்றை முதலியவற்றை நோக்குக.

பட்டம் - பாட்டம். பாட்டரம் = தட்டையரம்

### முட்டு

முட்டு - மட்டு - மட்டை = பட்டை.

வாழைப்பட்டையை வாழைமட்டையென்றும் பொடிப்பட்டையைப் பொடிமட்டை என்றும் கூறுதல் காண்க.

மட்டை = தட்டையான ஓலைக்காம்பு, தட்டையான அடிகருவி (bat).

பனைமட்டை பந்தடிமட்டை முதலிய வழக்குகளைக் காண்க.

மடல் = மட்டை, இதழ். மடல் - மடலி - வடலி = மட்டை வெட்டப்படாத இளம்பனை.

(மடை) - மணை = தட்டுப் பலகை, தட்டையான கட்டை.

அடிமணை அரிவாள்மணை முதலியவற்றை நோக்குக.

**xxi. படர்தல்**

தட்டையாகும் பொருள் படர்ந்து பரவும்.

பட்டு = சிற்றூர்.

பட்டு - பற்று = நிலம், சிற்றூர், மேகப்படை, தப்பளம்.

படம் = பட்டையாக அகலும் பாம்பின் கழுத்து.

படம் - பணம் - பணி = படத்தையுடைய நல்ல பாம்பு, பாம்பு.

படங்கு - படங்கான் = அகன்ற பூரான்.

படல் - படலம் = பரப்பு, இயலினும் பரந்த நூற்பகுதி, திரை போற் கண்ணிற் படரும் சதை.

படல் - படலை = படர்கை, பரந்த இடம், வாயகன்ற பறை.

படலை - பதலை = வாயகன்ற பறை.

படல் - படர் = பரவும் மேகப்பற்று.

படர்தல் = பரவுதல், அகலுதல், செல்லுதல்.

பட்டை - படை = பரப்பு, கூட்டம், சேனைப்பரப்பு, சேனைப் பகுதி, மேகப்பற்று.

படாகை = அகன்ற கொடி, நாட்டின் உட்பிரிவு, கூட்டம்.

படாகை - பதாகை = பெருங்கொடி, ஐந்து விரலும் நெருங்கிப் பரந்த கை.

பாடவரை = வாளவரை.

(பட) - பர - பரவு. பர - பரப்பு. பர - பரத்து (பி.வி.).

பர - பரவை = பரந்த கடல். பர - பரம்பு.

பரம்படித்தல் = உழுத நிலத்திற் கட்டியடித்துப் பரவச் செ-தல்.

பரத்தை = பரந்து ஒழுகுபவள். பராகம் = பரவும் பூத்தூள்.

பர - பார் = பரப்பு, தேர்த்தட்டு, பாறை, நிலப்பகுதி, ஞாலம்.

***"பார்முதிர் பனிக்கடல்"*** ***(திருமுருகு. 45)***

பார் - பாறை.

பார் - பாரி. பாரித்தல் = பரவுதல், பருத்தல், விரித்தல்.

பர - பா - பாவு. பா - பா- = பரந்த தடுக்கு. பா-தல் = பரத்தல்.

பலகை = அகன்ற பாளம். பலாசினை = பரக்க நடுதல்.

பாள் = இருப்புச் சட்டம். பாளம் = பலகை. பாளை = விரியும் மடல்.

பாழி = அகலம், பெருமை, நகர் (பேரூர்).

அகைத்தல் = அடித்தல். அகலுதல் = படர்தல், நீங்குதல், செல்லுதல். அகலம் = மார்பு.

அகல் = அகன்ற மண்தட்டம்.

அகல் - ஆல் = படருமரம். "ஆல்போற் படர்ந்து" என்னும் உவமை மரபை நோக்குக. ஆல் - ஆலம்.

ஆலி = பெரும்பூதம்.

அடித்தல் = தட்டுதல். அடர்தல் = தட்டியுருவாக்குதல்.

***"ஐதடர்ந்த நூற்பெ-து"*** ***(புறம். 29)***

அடர் = தகடு; பூவிதழ்.

அதள் = தோள்.

அவைத்தல் = குற்றுதல். அவல் = குற்றுதலால் தட்டையான அரிசி.

அவிழ்தல் = விரிதல், விரிந்து கட்டுவிடுதல்.

அலைத்தல் - அடித்தல். அலகு = அகலம், கத்தியலகு.

அலகு பாக்கு = தட்டையான பாக்கு.

அலசுதல் = இழையகலுதல். அலசல் = இழையகன்ற துணி.

அலர்தல் = மலர்தல்.

அலவை = பரத்தைமை.

கலத்தல் = பரத்தல். கலக்க நடுதல் என்னும் வழக்கைக் காண்க.

***"கட்டுரை கலந்த காலை"*** ***(கம்பரா. கர. 68)***

கல - கலவு - கலவம் - கலாவம் = அரைப்பட்டிகை, மயிற்பீலி.

கலை = ஆடை.

சல்லா = அலசல் துணி, சல்லாரி = அலசற் சீலை.

சல்லவட்டம் = கேடகவகை.

துவைத்தல் = குற்றுதல். துகில் = துணி. துகிலிகை = துணிக் கொடி. தகழி = அகல்.

தகண் = புற்பற்றை. தகண் - தகடு.

(துட்டு) - தட்டு - தட்டம் - தடம் = அகலம், பெருமை, அகன்ற குளம். தடம் - தடாகம்.

தளம் = தட்டு, பரப்பு, படை இதழ். தாளம் = சாலர்.

தாலம் = தட்டு, யானைக்காது.

நல் - (நால்) - நாலம் - ஞாலம் = பரந்த உலகம்.

பருமையும் அகலமும் ஒன்றே. பெரிய இலை, பெரிய தாள், பெரிய தட்டு, பெரிய துணி, பெருவழி என்று அகன்ற பொருள்களைக் கூறுதல் காண்க.

நனம் = அகலம். நனம் - நனவு = அகலம்.

மலர்தல் = விரிதல்.

இங்குக் காட்டப்பட்ட சொற்கள் பலவற்றிற்கு நேர் மூலம் அகரமுதலாயினும், அடிமூலம் உகரமுதல என்பது ஒருதலை. இது இப் படலம் முழுமைக்கும் ஒக்கும்.

### xxii. அமுங்குதல்

அமுங்குதலாவது ஒரு பொருள் அழுந்த முட்டுதல்.

உறு - உறுத்து. (உள்) - (அள்) - அழு - அழுந்து - அழுத்து - அழுத்தம்.

(உம்) - அம் - அமுங்கு - அமுக்கு - அமுக்கம்.

(நும்) - நெம் - (நெமுங்கு) - நெமுங்குதல் = அமுங்குதல்.

(நுள்) - (நெள்) - நெரு - நெருங்கு - நெருக்கு - நெருக்கம்.

## (3) குத்தல் முறை

குத்தல் என்பது, மொட்டைக் கருவி குத்துதலும் கூர்ங்கருவி குத்துதலும் என இருவகை. இவற்றுள் முன்னது முட்டல் துறையில் கூறப்பட்டுள்ளமையின், பின்னதே ஈண்டுக் கூறப்படும்.

**i. குத்துதல்**

குள் - கிள். குள்ளுதல் = நகத்தாற் கிள்ளுதல்.

குத்து - குந்து.

குத்து - கொத்து - கொட்டு.

சுள் - சுள்சுள் என்று குத்துகிறது என்பது வழக்கு.

சுள் - சுர் - சுருக்கு - சுறுக்கு (குத்தற்குறிப்பு).

தூண்டுதல் - குத்துதல்.

துள் - தெள் - தெறு. தெறுதல் - கொட்டுதல்.

துள் - தள் - (த-) - தை. தைத்தல் = குத்துதல். முள் தைக்கும் என்னும் வழக்கைக் காண்க.

நுள்.

முள். முசுமுசுத்தல் = தினவெடுத்தல்.

**ii. குந்துதல்**

குந்துதலாவது நிலத்திற் குத்துவதுபோல் உட்கார்தல். குண்டி குத்துதல் என்பது நாகை வழக்கு. குத்த வைத்தல் என்பது பாண்டி நாட்டு வழக்கு.

குத்து - குந்து. குந்துதல் = உட்கார்தல்.

குத்து - குத்தி - குதி. குதிங்கால் = நிலத்திற் குத்தும் அடிப்பாதம்.

குதை = நிலத்திற் குத்தும் விற்கோலடி

குதிர்தல் = காரியம் குந்துவதுபோல் ஏற்பாடாதல். ஒ.நோ: sit - settle.

குந்து - குந்தனம் = மணிக்கல்லைக் குந்தவைத்தாற்போற் பதிக்குந் தகடு. குத்துக்கல், குத்துவிளக்கு முதலிய பெயர்களும் குந்தியிருத்தல்பற்றி ஏற்பட்டவையே.

முள் - (முள்கு) - முள்கா. முள்காத்தல் = குந்தியிருத்தல்.

*"மூசுப்போல முள்காந் திருப்பர்"* *(நன். விருத்தி. 96)*

முள்கா - (உள்கா) - உள்கார் - உட்கார்.

இன்றும் கல்லா மக்கள் உளுக்கார்தல் என்றே கூறுவர்.

**iii. நேராதல்**

குத்துக்கல்லும் பிற குத்தும் பொருள்களும் பொதுவாக நேராகக் குத்துவதால், குத்தற்கருத்தில் நேர்புக் கருத்துத் தோன்றிற்று. இங்கு நேர்பு என்றது வளையாமையை; சாயாமையை அன்று.

செங்குத்து நட்டுக்குத்து முதலிய வழக்குகளை நோக்குக.

குத்துதல் = நேராதல். குத்து - குத்தி - (கத்தி) - கதி.

கதித்தல் = நேராதல். நேர்கிழக்காகச் செல்லுதலைக் கிழக்கே கதிக்கச் செல்லுதல் என்பர் நெல்லை நாட்டார்.

கதி - கதிர் = வளையாமற் செல்லும் ஒளியிழை.

கதிர் - கதிரவன்.

**iv. குத்தும் பொருள்கள்**

உல் = தேங்காயுரிக்குங் கருவி.

உள் - அள் = நீர்முள்ளி.

உள் - உளி. உளி - உசி - ஊசி.

உளித்தலைக்கோல் = நுனியிற் கூரான கோல்.

உளியம் = உளிபோன்ற கூரிய நகமுள்ள கரடி.

உறு - உறும்பு = குத்தும் சிறு கரம்பைக்கட்டி.

உகிர் = நகம்.

உள் - அள் - (அ-) - அயில் = வேல்.

குத்து - குத்தி = பற்குத்தி போன்ற கருவி.

குள் - கள் - கள்ளி = ஒருவகை முட்செடி.

கள் - கண்டு = கண்டங்கத்தரி.

கண்டு - கண்டம் = கண்டங்கத்தரி, கள்ளி, எழுத்தாணி.

கண்டு - கண்டல் = முள்ளி, நீர்முள்ளி, தாழை. கண்டல் - கண்டலம் = முள்ளி.

கண்டு - கண்டகம் = முள், நீர்முள்ளி, வாள்.

கண்டகம் - கண்டகி = இலந்தை, தாழை, மூங்கில், முதுகெலும்பு.

கள் - கழு. கள் - கடு = முள், முள்ளி.

குள் - கிள் - கிள்ளி - கிளி. கிள் - கிள்ளை = கூரிய மூக்கினாற் கிள்ளுவது.

குள் - கெள் - கெளிறு = முள்ளாற் கொட்டும் மீன்.

சுல் - சூல் - சூலம். சூல் = சூலம்.

***"குலிசங் கதைசூல்"*** ***(சேதுபு. தேவிபுர. 27)***

சுள்ளெறும்பு = முட்குத்துவதுபோற் கடிக்கும் எறும்பு.

சுள் - சுணை = சிறுமுள், முட்போற் குத்தும் மானவுணர்ச்சி.

சுள் - சுர் - சுரி - சுரணை = குத்தல். குத்தும் மானவுணர்ச்சி.

சுரணைமரணை என்னும் தொடரில் நிலைமொழி தென் சொல்லும் வருமொழி வடசொல்லுமாகும்.

சுரியூசி = பனையேட்டில் துளையிடுங் கருவி.

சுரி - சுரிகை. சுரி - சூரி.

சுர் - சூர் - சூரை = ஒருவகை முட்செடி.

சுர் - சுறு - சுறுக்கு = மானவுணர்ச்சி.

சுறு - சுற - சுறா - சுறவு - சுறவம் = கூரிய செதிளால் வெட்டும் மீன்.

சுர் - சுர - சுரசுரப்பு = முட்குத்துவதுபோற் கரடுமுரடாயிருப்பது.

சுனை = சுரசுரப்பு.

துல் - துலம் = நீர்முள்ளி.

துள் - (தெள்) - தேள் = குத்தும் நச்சுயிரி வகை.

தேள் - தேளி = தேள்போற் கொட்டும் மீன்.

தூண்டு - தூண்டி - தூண்டில் = மீனைக் குத்தும் முள்.

தெள் - தெறு. தெறுக்கால் = தேள்.

நுள் - நுள்ளான் = கடிக்கும் சிற்றெறும்பு.

நுள் - நுள்ளி - நள்ளி = நண்டு.

நள்ளி - நளி = தேள். நளிர் = நண்டு.

நுள் - நெள் - நெரி - நெரிஞ்சி - நெருஞ்சி - நெருஞ்சில்.

முள் - முள்ளி. முளி = செம்முள்ளி.

முளரி = முட்செடி, முட்சுள்ளி.

முளா - முளவு = முள்ளம்பன்றி.

முண்டு - முண்டகம் = முள், நீர்முள்ளி, தாழை, முட்புதர், கருக்கு வா-ச்சி.

முசு - முசிறு - முசிடு = சுள்ளென்று கடிக்கும் செவ்வெறும்பு.

முசுக்கட்டை = கம்பளிப்பூச்சி.

முசுக்கை = முசுமுசுக்கை.

மூசு மல்லிகை = ஊசி மல்லிகை.

(குத்து) - குத்தி.

(குந்து) - குந்தம், குந்தாலம், குந்தாலி, கூந்தாலம்.

(கொத்து) - கொத்து - கொட்டு.

களைக்கொத்து, களைக்கொட்டு, கொட்டு, மண்வெட்டி முதலிய பெயர்களைக் காண்க.

ஊசி என்னும் சொல் தமிழ்ச்சொல் என்பது, அதன் பொருட் காரணத்தால் மட்டுமன்றி, ஊசிக்கண் (சிறுகண்), ஊசிக்களா (முள்ளுக் களா), ஊசிக்காது (நுனித்துக் கேட்குஞ் செவி), ஊசிக்கா-, ஊசிக்கார், ஊசிச் சம்பா, ஊசித் தூற்றல், ஊசிப்பாலை, ஊசிப்புழு, ஊசிமல்லிகை, ஊசி மிளகா-, ஊசிமுல்லை, ஊசிவேர், குத்தூசி, துன்னூசி, தையலூசி முதலிய பெயர் வழக்குகளாலும் அறியப்படும்.

மேலும், வடமொழியிலுள்ள சூசி என்னுஞ்சொல் siv (to sew) என்னும் வேரினின்று பிறந்ததாகக் காட்டப்படுவது. ஊசி என்னும் தென்சொல்லோ குத்துவது என்று பொருள்படும் உள் என்னும் வேரினின்று உள் - உளி - உசி - ஊசி என ஒழுங்காகத் திரிந்திருப்பது.

**v. குறண்டும் பொருள்கள்**

குறண்டுதல் என்பது முட்கருவிகளால் வலிதா- வழித்தல்.

குறண்டுதல் = வறண்டுதல். குறண்டி = ஒருவகை முட்செடி.

குறண்டு - கறண்டு. குறண்டி - கறண்டி = குறண்டுங் கருவி. பாதாள கறண்டி (பாதாள வறண்டி) என்னுங் கருவியை நோக்குக.

கறண்டு - கறட்டு (ஒ.கு.).

கரண்டு - கரண்டி (trowel).

சுறண்டு - சுறண்டி. சுரண்டு - சுரண்டி.

சுறு - சொறி. சொறிதல் = நகத்தால் வறண்டுதல்.

(புறண்டு) - பறண்டு - பிறாண்டு.

பறண்டு - பறட்டு (ஒ.கு.).

பறண்டு - வறண்டு. வறண்டு - வறண்டி.

வறண்டு-வறட்டு (ஒ.கு.).

கறட்டுக்கறட்டென்று புல்லைச் செதுக்குகிறான். பறட்டுப் பறட்டென்று சொறிகிறான், வறட்டுவறட்டென்று பானையைச் சுறண்டு கிறான் என்பன வழக்கு.

**vi. சுரசுரப்பு**

செறிந்த பல நுண்முட்கள் ஒருங்கே குத்துவது சுரசுரத்தல்.

குர்-(குர)-கர-கரகர-கரகரப்பு = தொண்டையில் சுரசுரத்தல் போன்ற உணர்ச்சி.

கர-கார்-காறு. காறுதல் = கரகரத்தல்.

கர-கரண்-கரணை = சுரசுரப்பான கிழங்கு.

கரண்-கரடு-கரடா = சுரசுரப்பான தாள்.

கரடு = கரடான திரடு.

கரடு-கரட்டை = கரட்டுத்தோலுள்ள ஓணான்.

சுர்-சுர-சுரசுர-சுரசுரப்பு.

சுர்-சர்-சரு-சருசரு-சருச்சரை.

சர்-சரள் = கரட்டுமண்.

சுர்-(சுரடு) - (சுரட்டை) - சிரட்டை = கரடான கொட்டாங்கச்சி.

சுரடு-சுறடு-சுறட்டைத்தலை = வறண்ட தலை.

சுற-சொறி-சொறியன் = சொறித்தவளை.

(புர்)-பர்பர-பரபர (உடம்பை அரித்தற் குறிப்பு).

பர-பரடு-பரட்டை-பறட்டை=சீவாத் தலை.

பர-(பார்)-பாறு. பாறுமயிர்=பறட்டை முடி.

பர-பரல் = பருக்கைக்கல். பர்-பரு-பருக்கை = குத்தும் கரட்டுக்கல்.

முர்-முர-முரமுர-முரமுரப்பு = சுரசுரப்பு.

முர-முரம்ப = சரள்.

முர-முரண்-முரடு.

சுரசுரப்பானதைக் கரடுமுரடானதென்று கூறுதல் காண்க.

**vii. குத்தும் பொருள்களின் கூர்மை**

உள்-உளி-உசி = கூர்மை. உசி-ஊசி = கூர்மை.

உள்-அள் = கூர்மை.

அள்-(அ-)-அயில் = கூர்மை,

குள்-குர்-கூர். (குர்-குரு-குருக்கு-ஒருவகை முட்செடி.)

குள்-கள்-கரு-கருக்கு = கூர்மை.

கள்-கடு-கடி = கூர்மை.

குனை-கொனை = கூர்.

சுள்-சுணை=கூர்மை.

துள்-து- = கூர்மை.

நுல்-நுன்-நுனை = கூர்மை.

நுள்-நுட்பு-நுட்பம் = கூர்மை.

முள்-முளை = கூர்மை.

***"முள்ளுறழ் முளையெயிற்று"*** ***(கலித். 4)***

முன்-முனை = கூர்மை.

முள்-(மள்)-வள் = கூர்மை.

வள்-(வ-)-வை = கூர்மை.

வள்-வடி = கூர்மை.

முள்-வெள் = கூர்மை.

**viii. குத்துவதால் உண்டாகும் புள்ளி**

ஒத்து = ஒற்று = புள்ளி, புள்ளியுள்ள மெ-யெழுத்து.

குத்து = புள்ளி.

புள் - புள்ளி = குத்து, மெ-யெழுத்து.

புகு-புகர் = புள்ளி. புகர்-போர் = புள்ளி.

புட்டு-புட்டா = புள்ளி.

புள்-பொள்-பொறி = புள்ளி.

புட்டு-பொட்டு = புள்ளி.

புள்ளுதல் புட்டுதல் பொள்ளுதல் பொட்டுதல் முதலிய வினைகள் வழக்கற்றன.

### ix. நுண்மை

கூரிய முனை நுட்பமா யிருத்தலால், கூர்மை நுண்மையைக் குறிக்கும்.

உள்-அள்-அரு-அரி = நுண்மை.

அள்-(அ-)-ஐ = நுண்மை.

***"அரியே ஐம்மை"*** ***(தொல். உரி. 58)***

துள்-து- = பஞ்சின் நுனி.

நுள்-நுண்-நுண்மை.

நுள்-நொள்-நொ--நொ-ம்மை = நுண்மை.

நொ- = நுண்மை.

முள்-முளரி = நுண்மை.

### x. நுண்வினைகள்

நுண்மைபற்றி நுள் (நுல்) என்னும் அடியினின்று பிறந்த வினைச்சொற்கள் வருமாறு:

நுல்-(நுற்பு)-நொற்பு-நொறபம் = நுட்பம்.

நுள்-நுழ-நுழை. (1) நுழைதல் = நுண்மையாதல்,

***"நுழைநூற் கலிங்கம்"*** ***(மலைபடு. 561)***

(2) கூரிதாதல்.

***"நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞரும்"*** ***(மதுரைக். 517)***

நுழை = நுண்மை. நுழைபுலம் - நுண்ணிய அறிவு.

நுழ-நிழ. நிழத்தல் = நுணுகுதல்.

நுனி = நுண்மை. நுனித்தல் = கூராக்குதல், கூர்ந்து நோக்குதல்.

நுனிப்பு = கூர்ந்தறிகை.

***"நூனெறி வழாஅ நுனிப்பொழுக் குண்மையின்"***

***(பெருங். வத்தவ. 7,34)***

நுண்-நுண்பு-நுட்பு-நுட்பம்.

***"பாலியேங் கண்காண் பரிய நுண்புடையீர்"***

***(திவ். இயற். பெரிய திரு. 8)***

நுண் - நுண்ணிமை = நுண்மை.

நுணங்குதல் = நுட்பமாதல். நுணங்கு-நுணக்கம் = கூர்மை. நுணங்கு = நுண்மை.

நுணாவுதல் = விரல் நுனியால் அல்லது நாநுனியால் தடவி யறிதல்.

நுணாசுதல் = நுணாவுதல்.

நுணித்தல் = கூர்மையாக்குதல், நுணுகி ஆரா-தல்.

நுணுகுதல் = கூர்மையாதல், நுட்பமாதல்.

நுணுகு-நுணுக்கு-நுணுக்கம்.

நுணுக்குதல் = கூர்மையாக்குதல், மதியைக் கூர்மை யாக்குதல், நுண்மையாக்குதல், பொடிசெ-தல், சிறிதா யெழுதுதல், நுண்ணிதாக வேலை செ-தல்.

நுணுக்கு - நுண்மை, நுட்பமானது. நுணுக்கம் = கூர்மை, கூரறிவு, நுண்மை, நுட்பம், வேலைத்திறம்.

நுணுங்குதல் = நுணுகுதல், பொடியாதல்.

நுணுங்கு - நணுங்கு. நணுங்குதல் = சிறுத்தல், வளராமை. நுணைத்தல் = நுணாசுதல்.

நுள்-நுறு=நுறுங்கு-நொறுங்கு = நுண்மை.

நுள்-நுசு-நொசு-நொசி. நொசிதல் = நுண்மையாதல்.

நொசி = நுண்மை. நொசி-நொசிவு = நுண்மை.

***"நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை"*** ***(தொல். உரி. 76)***

நுள்-(நொள்)-நொ--நொ-வு-நொ-ம்மை.

நொ-ய = நுட்பமான.

நுள் = (நு) - நுவ் - நுவல். நுவலுதல் = நுட்பமாகச் சொல்லுதல், நூலுரைத்தல்.

நுவல் = சொல். நுவல் - நூல்.

நுவல் - (நுவள்)- நுவண் - நுவணை = நுட்பம், கல்வி நூல்.

நுவண் - நுவணம் = கல்விநூல்.

**xi. நுண்பொருள்கள்**

உல் - (அல்) - அன் - அனு = நுண்ணியது, நுண்ணளவு.

உள் - (அள்) - அண் - அணு = நுண்ணியது, நுண்ணளவு.

நுள் - (நொள்) - நொ-.

நுள் - நுறு - நுறுங்கு = நொ-. நுறுங்குதல் = பொடியாதல்.

நுறு - நூறு = பொடி. நூறு - நீறு = பொடி, சாம்பல், சுண்ணம். நீறு- நீற்று. நீற்றுதல் = சுண்ணமாக்குதல்.

நூறுதல் = பொடியாக்குதல்போல் அழித்தல்.

நுறுங்கு - நொறுங்கு = நொ-, தூள்.

நொறுங்கு - நொறுக்கு. நொறுங்கு - நறுங்கு.

நறுங்குதல் = சிறுத்தல். நொறுக்கு-நறுக்கு. நறுக்குதல் = துண்டாக்குதல்.

நுள்-நுசு-நுசுப்பு = நுணுகிய மகளிரிடை.

நுவ்வு = எள் (தெ.). நுவ்வு-நூ. நூநெ- (நூனெ)= நல்லெண்ணெ- (தெ.).

நுவல்-(நோல்)-நோலை = எள்ளுருண்டை.

நுவணை = இடித்த மா.

***"மென்றினை நுவணை யுண்டு"*** ***(ஐங். 285)***

நுவணை-நுணவை = மா, எள்ளுருண்டை.

நுவணம் = இடித்த மா.

சுள்-சுண்-சுண்ணம் = பொடி, நீறு. சுண்ணித்தல் = நீறாக்குதல்.

சுண்ணம் - சுணம் = பொடி, பூந்தாதுபோற் படரும் தேமல். சுணம் - சுணங்கு = பூந்தாது, பூந்தாதுபோற் படரும் தேமல்.

சுண்ணம் - சுண்ணக்கம் = பொடி.

சுண்ணம் - சுண்ணம்பு - சுண்ணாம்பு = காரக்கல் நீறு.

புள் - பூள் - (பூழ்) - பூழி = தூள், புழுதி.

பூழ் - பூழ்தி = புழுதி. பூழ்தி - புழுதி.

புள் - (பொள்) - பொடி. பொடித்தல் = தூளாக்குதல்.

### xii. குறும்பொருள்கள்

நுண்மைக்கு இனமானது குறுமையாதலின், நுண்மைக்கருத்து குறுமை அல்லது சிறுமைக் கருத்தைத் தழுவும்.

(உள்) - இள் - இட்டு. இட்டிது = சிறிது. இட்டு - இட்டிகை = சிறு செங்கல்.

(உள்) - எள் = சிறிய கூல வகை. எட்டுணை = சிற்றளவு.

உள் - (அள்) - அரு - அரி = சிறியது, சிறிய பருப்பு, அரிசி.

***"அரியே ஐம்மை"*** ***(தொல். உரி. 53)***

அரிநெல்லி = சிறுநெல்லி. அரி - அரிசி = சிறியது, சிறிய பருப்பு.

அரிசிக்களா, அரிசிச் சோளம், அரிசிப்பல் முதலிய புணர்ப் பெயர்களில், அரிசி என்பது சிறுமையை உணர்த்தும்.

அருநெல்லி = சிறுநெல்லி.

குன் - குன்னி = மிகச் சிறியது.

குள் - குரு - குருவி = சிறு பறவை.

குருமகன் - குருமான் = சிறுமகன், குட்டி. குருமான் - குருமன்.

குரு - குறு. குறுமகன் (-குறுமான்-குறுமன்), குறுங்கட்டில், குறுநொ-, குறுமணல் முதலிய புணர்ப்பெயர்களில் குறு என்பது சிறுமையுணர்த்தும்.

குறு - குறுவை = குறுகிய காலத்தில் விளையும் நெல். குறுவை - குறுகை.

குறு - குறள் - குறளி - குட்டிப்பே-. குறள் - குறளன். குறள் = குறுகிய வெண்பா.

குறள் - கறள் - கறளை = வளராது குறுகிய வுயிரி.

குறு - குறில்.

குறு - குறுகு - குறுக்கு - குறுக்கம் - குறுக்கன் = குறுநரி.

குறுக்கன் - குக்கன் - குக்கல் = குறுநா-.

குள் - (கள்) - கண் = சிறியது. கண் விறகு = சிறு விறகு (தஞ்சை வழக்கு).

கண்ணறை = சிற்றறை. கண்ணாறு = சிற்றாறு.

கண்வா-க்கால் = சிறு வா-க்கால்

கண் - கண்டு = துண்டு. கண்டறைவாள் = துண்டறுக்கும் வாள். கண்டு - கண்டம் = துண்டம், சிறுநிலம், நிலப்பகுதி.

கண்டங் கண்டமா- நறுக்கவேண்டும் என்பது வழக்கு.

கா-ந்த கறித்துண்டு உப்புக் கண்டம் எனப்படும்.

கண்டம் - காண்டம் = நூற்பகுதி.

கண்டு - கண்டி. கண்டித்தல் = துண்டித்தல், பகிர்தல், துண்டித்தல் போற் பேசுதல். கண்டி - கடி. கடிதல் = கண்டித்தல். கண்டி - கண்டனம்.

குள் - குட்டம் = சிறுமை, குறுமை, சீர் குறைந்த அடி.

குட்டான் = சிறிய ஓலைப்பெட்டி, சிறு படப்பு.

குள் - குண் - குணில் = குறுந்தடி.

குள் - கு = குறிய, சிறிய. **ஒ.நோ:** நல் - ந.

சுள் - சிறுமை. சுள்ளாணி = சிறிய ஆணி.

சுள் - சுண்டு = சிறியது, சிறிய முகவைக் கருவி (வீசம்படி).

சுண்டு - சுண்டான் = சிறு மொந்தை.

சுண்டெலி சுண்டுவிரல் முதலிய புணர்ப்பெயர்களில், சுண்டு என்பது சிறுமையைக் குறிக்கும்.

சுண்டு - சுண்டை = சிறிய கா-வகை.

சுண்டு - சிண்டு = சிறிய குடுமி.

சுள் = (சுட்டு) - சிட்டு = சிறியது, சிறு குருவி.

சிட்டு - சீட்டு = ஓலை நறுக்கு.

சிட்டு - சிட்டி = சிறுகலம்.

சுல் - சல் - சல்லி = சிறியது, சிறு காசு.

ஓட்டாஞ்சல்லி, சல்லிக்கல், சல்லிப்பயல், சல்லிக்கட்டு முதலிய புணர்ப்பெயர்களில், சல்லி என்பது சிறுமை குறிக்கும்.

சுல் - சில் = சிறியது, துண்டு, சிற்றளவு. சில்லுக் கருப்புக்கட்டி = சிறு கருப்புக்கட்டி. சின்னீர் = கொஞ்ச நீர்.

சில் - சில்லான் = குட்டி ஓணான்.

சில் - சின் - சின்னான் = சிறியவன்.

சில் - சிறு - சிறுகு. சிறு - சிறுக்கன் - சக்கன் (ம.).

சிறு - சிறான் = சிறுவன்.

சிறு - சிறுத்தை = சிறுபுலிவகை.

சிறு - சிறா-.

சில் - சிலும்பு - சிலாம்பு - சினாம்பு - சிறாம்பு = மரத்திலும் மீனிலுமுள்ள நுண்பட்டை.

சிலு - செலு = சிறுசெதிள். செலு - செலும்பு = சிறு துண்டு, பாக்குச்சீவல். செலு - செது - செதிள்.

சிலும்பு - செறும்பு = சிறாம்பு.

சில் - சின்மை. சில் - சில. அளவுச் சிறுமை குறித்த சொல் தொகைச் சிறுமையும் குறித்தது.

துல் - (தில்) - தின் - தினை. தினைத்துணை = சிறிய அளவு.

துள் - துட்டு = சிறியது, உலோகத் துண்டு, காசு.

துட்டுத்தடி= குறுந்தடி.

துள் -துண்டு = சிறியது, சிறுபகுதி, சிறுவேட்டி. சிறுநிலம்.

துள் - துண் - துணி = துண்டு, ஆடைத் துண்டு, ஆடை. துணித்தல் = துண்டாக்குதல். துணி - துணிக்கை = சிறுபகுதி. துண்டு துணியும், துண்டுதுணுக்கு, துண்டு துணிக்கை என்பன வழக்கு.

துண் - துணுக்கு = சிறுபகுதி.

துண்டு - துண்டம், துண்டு - துண்டி. துண்டித்தல் = துண்டாக்குதல்.

நுல் - (நல்) - நன் - நன்னி = மிகச் சிறியது. நன்னியுங் குன்னியும் என்பது வழக்கு. நன் - நன்னன் = சிறியவன்.

நுள் - நுள்ளல் = சிறுகொசுகு. நுள்ளல் - நொள்ளல்.

நுள் - நுளம்பு = சிறுகொசுகு.

புல் - (பில்) - பின் - பின்னி = மிகச் சிறியது. நன்னி பின்னி என்பது தஞ்சை வழக்கு.

பில் - பில்லை = துண்டு. சடைப்பில்லை, சந்தனப்பில்லை, தேங்கா-ப்பில்லை முதலிய வழக்குகளைக் காண்க.

பில்லை - வில்லை.

புள் - புரு - பிரு - பிருக்கு = சிறியது, சிறு துண்டு. பிஞ்சும் பிருக்கும் என்பது வழக்கு.

பிள்ளைக்கற்றாழை, பிள்ளைக்கிணறு, பிள்ளைக் கோட்டை, பிள்ளைத்தக்காளி, பிள்ளைப்பிறை பிள்ளைப்பெட்டி, பிள்ளை விளாத்தி (குட்டிவிளா) முதலிய புணர்ப்பெயர்களில், பிள்ளை என்பது சிறுமையைக் குறிக்குமேனும், அது இளமைப்பெயரின் ஆட்சி விரிவே என்றறிதல் வேண்டும். குட்டித் தொல்காப்பியம் என்பதில் குட்டி என்பதும் அதுவே.

பிள் - பிட்டு = சிறியது. பிட்டுக்கருப்புக்கட்டி = சிறுகருப்புக்கட்டி.

பிள் - பிசு - பிசுக்கு = சிறு துண்டு. பிசுக்கு - பிசுக்கி = சிறுபயல்.

பிசு - பிசுகு. பிசுகுதல் = சிறுதுண்டு கேட்டல்.

பிசுக்கு - விசுக்கு - விசுக்குணி (விசுக்காணி) = சிறியது, சிறுதுண்டு.

புள் - பொள் - பொட்டு = சிறியது, சிற்றளவு.

பொள் - பொடி.

முள் - முட்டு = சிறியது. முட்டுகள் = சிறுபொருள்கள்.

முள் - (மள்) - மண் - மணி = சிறியது.

மணிக்கயிறு, மணிக்காடை, மணிக்குடல், மணிக்கை, மணித்தக்காளி, மணிச்சம்பா, மணிச்சுறா, மணிப்பயறு, மணிப்புறா முதலிய புணர்ப்பெயர்களில், மணி என்னுஞ் சொல் சிறுமையைக் குறித்தல் காண்க.

மண் - மாண் = குறள், குறளன், சிறுவன், இளைஞன், மணமிலி (பிரமசாரி).

***"குறுமா ணொருவன் தற்குறியாகக் கொண்டாடும்"***

***(தேவா. 164 :5)***

***"மாணாகி வைய மளந்ததுவும்"*** ***(திவ். பெரியதிரு. 8:10: 8)***

மாண் - மாணி = சிறியது, சிறுவன், மணவாதான், மாணவன்.

***"கருமாணியா யிரந்த கள்வனே"*** ***(திவ். இயற்பா, 2:61)***

மாண் - மாணவன் = சிறுவன், கற்குஞ் சிறுவன்.

மாணவன் - மாணவகன் - மாணவகம் = கல்வி.

மாணவகன் - மாணாக்கன்.

மாணவனைக் குறிக்கும் வேறு சில பெயர்களும் சிறுவன் சிறுமியைக் குறிப்பனவாகவே யுள்ளன.

ஒ.நோ: பிள்ளை = மாணவன், மாணவி. பள்ளிப் பிள்ளை என்னும் வழக்கைக் காண்க.

E. pupil, from L. pubillus, pupilla, dims of pupas, a boy; pupa. a girl.

E.pedant, from Gr. pais, paidos, a child.

மாணாக்கன் மாணாக்கி என்னும் வடிவங்களும், மாணவன் என்னும் சொல்லுக்கு நேர் மூலமான மாண் என்னும் வடிவமும், அதன் திரிபான மாணி என்பதும், இவற்றுக்கு அடிவழியான கொடி வழிச் சொற்களும், வடமொழியி லில்லை.

## (4) உறைத்தல் துறை

உறைத்தல் என்பது அழுத்தித் தாக்குதல். ஆலங்கட்டியும் பெருமழைத்துளியும் நிலத்தில் வல்வேகமா- விழுவதையும், ஒரு பேரொலி காதில் அழுத்தமா-ப் படுவதையும், வெப்பம் காரம் புளிப்பு முதலியவை உடலையோ நாவையோ தாக்குவதையும், உறைத்தல் என்பர். இவற்றுள், முதலது பருமைத் தாக்கும் ஏனைய நுண்மைத் தாக்கும் ஆகும். இவையெல்லாம் தொடுதலின் வகைகளே. தொடுத லென்பது ஒன்று இன்னொன்றின் மேற்படுதல். பண்பி படுதலும் பண்பு படுதலும் எனப்படுதல் இருவகை. அழுத்தமா-ப் படுதலே உறைத்தல்.

### i. சுடுதல்

சுள்ளென்று குத்துகிறது என்பது போன்றே, சுள்ளென்று வெயி லடிக்கிறது என்பதும் வழக்கு. கூர்ங்கருவியாற் குத்துவது போன்றது வெம்மைத்தாக்கு.

உறைத்தல் = வெயில் உடம்பைத் தாக்குதல்.

சுள் - சுள்ளாப்பு = கடுவெயில்.

சுள் - சுள்ளை - சூளை = செங்கல் சுடுமிடம்.

சுள் - (சுட்கு) - (சுட்கான்) - சுக்கான் = அளவிறந்து சுடப்பட்ட செங்கல்.

சுள் - சுர் - சுரம் = சுடும்பாலை. சுர் - சுரன் - சூரன் = கதிரவன்.

சுர் - சுறு - சுறுக்கு (சுடுதற் குறிப்பு).

சுறு - சுறீர் (சு.கு.).

சுள் - சுடு - சுடல் - சுடலை. சுடு - சூடு.

சுடு - சுடர் - சுடரோன்.

துள் - தெள் - தெறு. தெறுதல் = சுடுதல்.

***"நீங்கிற் றெறூஉம்"*** ***(குறள். 1104)***

**ii. எரிதல்**

சுடுவது நெருப்பு. நெருப்பின் இயல்பு எரிதல்.

உல் - உரு. உருத்தல் = அழலுதல். உரு - உருப்பு - உருப்பம் = வெப்பம்.

உரு - உருமம் = வெப்பம், நண்பகல். உருமகாலம் = கோடைக் காலம்.

உரு - உரும் - உருமி. உருமித்தல் = புழுங்குதல்.

உல் - எல் - எரி.

உள் - உண் - உண்ணம் = வெப்பம்.

குள் - கொளு - கொளுந்து - கொளுத்து ( பி. வி.). கொளுந்துதல் = எரிதல்.

குள் - (கள்) - காள் - கா-. கா-தல் = எரிதல். கா- - கா-ச்சல். கா- - (கா-ந்து) - காந்து.

ஒ.நோ: வே-ந்து - வேந்து.

காள் - காளம் - காளவா- = சுண்ணாம்புக்கல் சுடுமிடம்.

(கள்) = கண் - கண - கணப்பு = நெருப்பு.

(கண்) - கணை = உடம்பிலுள்ள சூடு.

(கண்) - கண்டு = அக்கி.

கும்புதல் = எரிதல்.

சுல் - சுல்லி = அடுப்பு, அடுக்களை, மடைப்பள்ளி.

சுள் - சுளுந்து = தீப்பந்தம்.

சுள் - சுண்டு - சுண்டான் = தீப்பந்தம்.

புள் - புழுங்கு. புழுங்குதல் = எரிதல். புகைதல் = எரிதல்.

பொள் - பொசு - பொசுங்கு - பொசுக்கு (பி.வி.). பொசுங்குதல் = எரிதல்.

முள் - முளி. முளிதல் = எரிதல்.

முள் - வெள் - வெட்டை = உடம்பிலுள்ள சூட்டுவகை.

வெள் - (வெட்கை) - வெக்கை.

வெள் - வெ- - வெ-யில் - வெயில்.

வெ- - வெ-யோன்.

வெ- - வெயர் - வெயர்வை. வெயர் - வேர் - வேர்வை.

வெயர் - வியர் - வியர்வை.

வெ- - வே - வேகு. வேகு - வேகம் = கடுமை. வே - வெந்தை.

வே - வேன் - வேனல் - வேனில்.

வே - வேம் - வேம்பு = சூட்டை யுண்டாக்கும் பழமரம் அல்லது வேனிலில் தழைக்கும் மரம்.

வேம் - வேங்கை = வேகும் இடம்போல் தோன்றும் விலங்கு.

வெ-ம்மை - வெம்மை.

வெம் - வெம்பு - வெப்பு - வெப்பம்.

வெம்பு - வெம்பல்.

வெள் - வெது - வெதும்பு - வெதுப்பு.

இனி, உ-அ திரிவுப்படி **உல்** அடியினின்று பிறந்த அன்று அனல் அழல் முதலிய சொற்களும், **குல்** அடியினின்று பிறந்த கன்று கனல் முதலிய சொற்களும், **துல்** அடியினின்று பிறந்த தழல் (தணல்) என்னும் சொல்லும் உளவென அறிக.

### iii. விளங்குதல்

எரிவது விளங்கும். எரியாத பொருள்களின் விளக்கமும் ஒருபுடை யொப்புமைபற்றி விளக்கமெனவே படும்.

உல் - (இல்) - இலகு - இலங்கு - இலக்கு - இலக்கம் = விளக்கம்.

(இல்) - எல் = ஒளி.

***"எல்லே யிலக்கம்"*** ***(தொல். இடை. 21)***

உள் - ஒள் - ஒளி - ஒளிர் - ஒளிறு.

உள் - உடு.

உவி - அவி - அவிர். அவிர்தல் = விளங்குதல்.

குல் - (குல) - குலவு - குலாவு. குலவுதல் = விளங்குதல்.

குல் - குரு = ஒளி, நிறம்.

குள் - (கள்) - களை = அழகு. கள் - (கடு) - கடி = விளக்கம்.

***"அருங்கடிப் பெருங்காலை"*** ***(புறம். 166)***

குள் - கெழு = ஒளி, நிறம். கெழு - கேழ் = ஒளி, நிறம். கேழ் - கேழல் = நிறம்.

***"குறுவுங் கெழுவு நிறனா கும்மே"*** ***(தொல். உரி. 5)***

கள் - காள் - கா- - கா-தல் = விளங்குதல். நிலாக் கா-கிறது என்னும் வழக்கை நோக்குக.

சுல் - (சொல்) - சொலி. சொலித்தல் = விளங்குதல். சொல் - சொன்றி, சோறு.

சொல் = பொன்போற் பொலியும் கூலமாகிய நெல்.

சுள் - சுடு - சுடர். சுடர்தல் = ஒளிவிடுதல்.

துல் - துலகு - துலங்கு - துலக்கு - துலக்கம் = விளக்கம்.

துள் - துளகு - துளங்கு - துளக்கு - துளக்கம் = விளக்கம். துளங் கொளி = கேட்டை.

துளங்கு - தளங்கு - தயங்கு - தயக்கம் = விளக்கம்.

(துகு) - தகு. தகதக என்று சொலிக்கிறது என்பது வழக்கு. தகு - தங்கு - தங்கம். தகு - தகை = அழகு, விளக்கம்.

(துகு) - (திகு) - திகழ். திகழ் - திங்கள்.

(நுல்) - நில் - நில - நிலா - நிலவு. நில் - நெல் = பொன்போல் விளங்கும் கூலம்.

***"சடைச்செந்நெல் பொன்விளைக்கும்"*** ***(நள. 68)***

பொன்விளைந்த களத்தூர் முதலிய தொடர்களை நோக்குக.

நில் – நிழ – நிழல் = ஒளி. நிழல் – நிகர் = ஒளி.

நிழல் – நிழறு – நிழற்று.

புல் – (பூல்) – பூ = பொலிவு, அழகு, மலர். பூத்தல் = பொலிதல், அழகாதல், பூ மலர்தல்.

புள் – பள் – பள – பளபளப்பு. பள் – (பாள்) – பாளம் = பளபளப்பு. பாள் – வாள் = ஒளி.

***"வாள்ஒளி யாகும்"*** ***(தொல். உரி. 69)***

பள் – பட்டு – பட்டம். பட்டுப்பட்டென்று நிலா அடிக்கிறது. பட்டப்பகல் என்னும் வழக்குகளை நோக்குக.

பள் – பளீர் (ஒளிர்தற் குறிப்பு). பள் – பளிச்சு (ஒ.கு.).

பள் – பளிங்கு = கண்ணாடி, வெள்ளி (Venus).

பட்டு = பொலிவுற்ற துணி.

புல் – பொல் – பொலி – பொலிவு. பொல் – பொற்பு. பொல்லுதல் = பொலிதல்.

பொல் – பொலம் – பொலன். பொல் – பொன் = பொலிவு, அழகு, பொலியும் தங்கம்.

பொல் – பொற்றி – பொறி = அழகு. பொற்ற = அழகிய, நல்ல.

***"பொற்ற தாமரையிற் போந்து"*** ***(சீவக. 2608)***

பொல்லாத – பொல்லா = அழகற்ற, தீய.

***"பொல்லாச் சிறகைவிரித்து"*** ***(மூதுரை. 14)***

பொல்லாப்பு = தீமை, பொல்லாங்கு = தீமை. பொல்லார் = தீயவர். நல்லது பொல்லது, நலம் பொலம் முதலிய இணைமொழிகளில் பின்மொழி எதுகை நோக்கித் திரிந்ததாகும்.

முல் – (மில்) – மின் – மின்னல். மின் – மீன் = மீனம்.

(மில்) – வில் = ஒளி.

முள் – (மள்) – மழ – மழமழப்பு. மழ – மாழை = பொன்.

மாழை – மாடை – மாசை = பொற்காசு.

மள் – மண் – மணி = விளங்கும் கல். மண்ணுதல் = அலங்கரித்தல்.

முள் – (மிள்) – மிளிர். முள் – மெள் – மெரு – மெருகு = பளபளப்பு.

முள் - விள் - விளங்கு - விளக்கு - விளக்கம்.

விளங்கு - பிறங்கு - பிறக்கம் = விளக்கம்.

விள் - (வெள்) - வெட்டு - வெட்டம். வெட்டுதல் = மின்னுதல்.

வெள் - (வெளிச்சு) - வெளிச்சம்.

வெட்ட வெளிச்சம் என்னும் வழக்கைக் காண்க.

**iv. நீறாதல்**

எல்லாக் கனப்பொருள்களும் எரியினால் எரிக்கப்பட்டபின் நீறாகும். நீறு பூத்த நெருப்பு என்னும் வழக்கை நோக்குக.

கும்பு - கும்பி = சுடுசாம்பல். உள் - உண் - உடு - அடு - அடல் - அடலை = சாம்பல்.

சும் - சும்பு - (சம்பு) - சாம்பு - சாம்பல் - சாம்பர்.

சாம்பு - சாம்பான் = பிணத்தைச் சுடுபவன்.

**v. கா-ச்சுதல்**

நெருப்பில் சுடப்படும் பொருள்களும் உலையிலிட்டுக் கா-ச்சப் படும் பொருள்களும் காயும் அல்லது அவியும்.

உல் - உலை = சமையற்குக் கா-ச்சும் நீர், கொல்லன் நெருப்பு.

கொல்லன் களரியை உலைக்களம் உலைத்தரை என்றும் சமைத்தற்கு நெருப்புள்ள அடுப்பின்மேல் நீரிட்ட கலம் ஏற்றுவதை உலையேற்றுதல் என்றும் கூறுவது காண்க.

உவி - அவி. உவியல் - அவியல்.

(குள் - கள் - காள்) - கா- - கா-ச்சு. கா-தல் = சுடுதல். கா-ச்சுதல் = சுடவைத்தல்.

கும் - குமை. குமைதல் = புழுங்குதல். கும் - கும்மாயம் = குழைய.

சுள் - சுடு.

சுண்டு - சுண்டல் = நீர் சுண்டிய பயறு. சுண்டுதல் = அவித்தல்.

துவர் - துவரம் = துவட்டல்.

துவர் - துவர்த்து - துவட்டு - துவட்டல்.

புள் - புழுங்கு - புழுங்கல்.

புழுங்கு - புழுக்கு - புழுக்கல்.

பொள் - பொரி - பொரியல். பொரி = பொரிந்த அரிசி.

பொள் - பொசு - பொசுங்கு - பொசுக்கு. பொசுக்குதல் = சுடுதல்.

பொசுக்கு - பொதுக்கு. பொதுக்குதல் = வாழைக்காயைச் சுட்டுப் பழுக்கவைத்தல்.

**vi. உலர்தல்**

வெயிலிலும் நெருப்போரத்திலும் காயும் ஈரப் பொருள்கள் உலரும்.

உல் - உல. உலத்தல் = கா-தல். உல - உலவை = கா-ந்த மரம். உல - உலர் - உலறு.

உள் - உண் - உண. உணத்தல் = உலர்தல்.

உண - உணங்கு. உணங்குதல் = உலர்தல்

உணங்கு - உணக்கு (பி.வி.).

(உல் - எல்-) எரி - எரு = கா-ந்த சாணம்.

குல் - கல. கலகலத்தல் = நன்றாகக் கா-தல்.

(குள் - கள் - காள்) - கா-தல் = உலர்தல்.

சுள் = கருவாடு. சுள் - சுள்ளி = கா-ந்த குச்சு.

சுள் - சுட்கு. சுட்குதல் = வறளுதல். சுட்கு - சுட்கம் = வறண்டது.

சுட்கு - சுக்கு = கா-ந்த இஞ்சி.

சுக்கு - சுக்கல் = கா-ந்தது. சுக்குதல் = உலர்த்தல்.

சுள் - சுண்டு - சுண்டி = சுக்கு.

சுண்டு - சண்டு = கா-ந்த புல்தாள்.

சுள் - சுர் - சுரி. சுரித்தல் = வற்றுதல்.

சுர் - (சர்) - சரக்கு = கா-ந்த பொருள்.

(சர்) - சருகு = கா-ந்த இலை.

சும்பு - சுப்பு - சுப்பல் = சுள்ளி. சுப்பு - சுப்பி = சுள்ளி.

சுப்பு என்பது விரைந்து நீர்வற்றுதற் குறிப்பு.

சுள் - சுரு - சுரி. சுரித்தல் = வற்றுதல்.

***"நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்"*** ***(கம்பரா. இரணிய. 737)***

சும்பு - சம்பு - சாம்பு. சாம்புதல் - வாடுதல்.

சும் - (சுவ்) - சுவறு. சுவறுதல் = நீர்வற்றுதல்.

சுவ்வென்று உள்ளே நீரை இழுக்கிறது என்பது வழக்கு.

சுடு - சொடு - சொடி. சொடிதல் = வெயிலில் வாடுதல்.

சொடித்தல் = வற்றுதல். சோடை = வறட்சி.

துவர்தல் = உலர்தல். துவர் = விறகு, சருகு.

துவர் - துவர்த்து - துவட்டு. துவர்த்துதல் = ஈரம் புலர்த்துதல்.

(துவ்) - துவி - தாவம்.

(துவ்) - (துகு) - தகு - தகை = தாகம். தகு - தாகம்.

புல் - புலர். புல் - பொல் - பொலு. பொலுபொலுத்தல் = நன்றாகக் கா-தல்.

பொல் - (பொரு) - பொருக்கு = கா-ந்த சோற்றுப்பருக்கை.

முள் - முளி. முளிதல் = கா-தல், உலர்தல்.

**vii. செந்நிறம்**

நெருப்பானது சிவந்த நிறமாயிருப்பதால், நெருப்பின் பெயர்களி னின்றும் அப் பெயர்களின் அடிகளினின்றும் செந்நிறத்தைக் குறிக்கும் சொற்கள் திரிந்துள்ளன. இளங்கோவடிகள்,

***"எரிநிறத் திலவம்"*** ***(சிலப். 5: 214)***

என்று கூறுதல் காண்க. எரிமலர் = முருக்குமலர் (சீவக. 662).

எரிமலர் = செந்தாமரை (சீவக. 2741).

உல் - அல் - அலத்தம் - அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு.

அல் - அர் - அரன் = சிவன் (செந்நிறத்தான்.)

தமிழருள் ஒரு சாரார் இறைவனைத் தீவடிவினனாகக் கருதிய தால், அவனை அரன் என்றும் சிவன் என்றும் பிறவாறும் அழைத்தனர்.

அர் - அரக்கு = சிவந்த மெழுகு.

அர் - அரத்தம் = சிவப்பு, குருதி. அரத்தம் - அத்தம் = சிவப்பு. அத்தம் - அத்தி = சிவந்த கனிதரும் மரம்.

அர் - அருணம் = சிவப்பு. அருணன் = காலைச் செங்கதிரோன். அருணமலை = சிவன் அழற்பிழம்பாக நின்ற மலை. அருணமலை = அண்ணாமலை.

அர் - (ஆர்) - ஆரியம் = சிவந்த கேழ்வரகு.

உல் - (இல்) - இலந்தை = சிவந்த கனிதரும் முட்செடி.

(இல்) - (இர்) - இரத்தி = இலந்தை.

(இர்) - இராகி = கேழ்வரகு.

உல் - எல் - (எர்) எருவை = செம்பருந்து.

உல் - உரு - உரும்பு - உரும்பரம் - உதும்பரம் = சிவப்பு, செம்பு.

குல் - குலிகம் = சிவப்பு, சாதிலிங்கம்.

குல் - குரு = சிவப்பு. குருவெறும்பு = செவ்வெறும்பு.

குரு - குருதி = சிவப்பு, அரத்தம்.[4] குருதிக் காந்தள் = செங் காந்தள். குருதிக்கிழமை = செவ்வா-க்கிழமை.

சுள் - (சொள்) - சோண் - சோணம் = சிவப்பு. சோண மலை = அருணமலை. சோணை = சிவப்பு.

சொள் - செள் - (செட்டு) - செட்டி - செம்மலர் மரவகை (வெட்சி).

செட்டு - செட்டை - செச்சை = சிகப்பு, செந்துளசி.

செ- = சிவப்பு. செ-யன் = சிவந்தவன்.

செள் - செ- - செ-யான் = செம்பூரான்.

செ- - செயிர். செயிர்த்தல் = சிவத்தல், கோபித்தல்.

***"கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள"*** ***(தொல். உரி. 74)***

செ- - செயலை = சிவந்த அசோகந் தளிர்.

செ- - சே- = சிவப்பு, முருகன். சேயோன் = சிவன், முருகன்.[5]

செ-ம்மை - செம்மை.

சே- - சே. சேத்தல் = சிவத்தல். சே - சேது = சிவப்பு. சேது - சேத்து = சிவப்பு. சேத்து - சேந்து - சேந்தன் = சேயோன் (முருகன்). சேது - கேது = சிவப்பு.

சுல் - (சோல்) - சால் - சாலி = செந்நெல்.

(சோல்) - சேல் = செங்கெண்டைமீன்.

சேல் - சேலேகம் = சிந்துரம்.

(சோல்) - சோர் - சோரி = அரத்தம்.

---

4. அரத்தம் என்பதே சரியான வடிவம். அது முதல் கெட்டு வழங்கி வடசொல்லெனப் பிறழ வுணரப்பட்டு, பின்பு இகரம் முன்னிட் டெழுதப்படுகின்றது. ஒ.நோ: அரங்கன் – ரங்கன் – இரங்கன்.

5. முதற்காலத்தில் சேயோனும் சிவனும் ஒருவரே.

சும் - செம் - செம்பு - செப்பு - கெப்பு - கெம்பு = சிவந்த கல். செந்தூள் - செந்தூளம் - செந்தூரம் - செந்துரம் - சிந்துரம் = செஞ்சுண்ணம்.

செம் - செவ் - செவிள் = மீனின் சிவந்த மூச்சுறுப்பு. செவிள் - செகிள். செவிள் - செவிடு = செவிப்பக்கம், கன்னம். செவிடு - செவி = செவிட்டிலுள்ள காது. செவிடு - செகிடு.

(சொகு) - சொக்கம் = செம்பு. சொக்கன் = சிவன்.

(சொகு) - செகு - செகில் = சிவப்பு. செகில் - செகு = சிவப்பு.

சேகு - சேகை = சிவப்பு. செகு - செக்கம் - செக்கர் = சிவப்பு, செவ்வானம்.

செக்கச் செவேர் என்னும் வழக்கை நோக்குக.

செவ் - செவ - சிவ - சிவப்பு - சிகப்பு. சிவ - சிவம் - சிவன் - சிவை. சிவ - சிவத்தை. செவல் - சிவல் - சிவலை - செவல் - செவ்வல்.

கல்லா மக்கள் சிவப்பைச் சுவப்பு என்று சொல்வது கவனிக்கத் தக்கது.

ஆரியர் இந்தியாவிற்குள் புகுமுன்னரே தமிழர் சிவவழி பாட்டினரா யிருந்தமையாலும், சிவன் என்பது தமிழ்ச் சொல்லாத லாலும், அதற்குத் தமிழ்வழியா-ப் பொருள் கூறாது வடமொழி வழியா- நன்மை செ-பவன் என்று பொருள் கூறுவது பொருந்தாது. அந்தி வண்ணன் செந்தீ வண்ணன் மாணிக்கம் முதலிய பெயர்கள் சிவனுக்குப் பயின்று வருதல் காண்க.

சும் - (தும்) - தும்பு - துப்பு = சிவப்பு, பவழம்.

துப்பு - துப்பம் = அரத்தம்.

தும்பு - தோம்பு = சிவப்பு.

தோம்பு - (தாம்பு) - தாம்பரம் = சிவப்பு, செம்பு.

தாம்பரம் - தாம்பரை - தாமரை = செம்மலர்வகை.

தாமரை - மரை.

நாட்டுப்புறத்து மக்கள் இன்றும் தாமரையைத் தாம்பரை என்றே வழங்குவர். தாமரை என்பது செம்மலரையும் முளரி என்பது வெண்மலரையும் தொடக்கத்திற் குறித்ததாகத் தெரிகின்றது.

துள் - (தள்) - தளவு - தளவம் = செம்முல்லை.

தும் - (துவ்) - துவர் = சிவப்பு, காவி, பவழம், பாக்கு, காசுக்கட்டி. துவர்ப்பு = சிவப்பு, காசுக்கட்டி, அதன் சுவை.

துவர் - துவரி = காவி, இலவம்பூ.

துவரித்தல் = செந்நிறமூட்டுதல்.

துவர் - துவரை = செம்பயறு.

துவரை - தோரை = செங்கா-ப்பனை, அரத்தம்.

துவர் - தோர். நெ- + தோர் = நெ-த்தோர் = அரத்தம்.

துவர் - துகிர் = பவழம்.

துவள் - துவண்டை = காவியுடை.

அரன், சிவன், சேந்தன், சேயோன், சொக்கன் என்பன ஒரு பொருட் சொற்கள். கரியோன், கண்ணன், மாயோன், மால் முதலியவை திருமாலையும்; கரியோள் (கருப்பா-), காளி, மாயோள், மாரி முதலியவை காளியையும்; கருமைபற்றிக் குறிக்கும் ஒருபொருட் சொற்களாயிருத்தலை நோக்குக. சொக்கன் என்பது அழகன் என்று பொருள்படுமேனும், சிவனைக் குறிக்கும்போது அப் பொருள் படாது.

**viii. தெரிதல்**

விளங்கும் (ஒளிரும்) பொருள்கள் தெளிவாகத் தெரிதலால், விளக்கத்தைக் குறிக்கும் சொற்கள் தெளிவாகத் தெரிதலைக் குறிக்கும்.

துலங்குதல் = விளங்குதல், தெளிவாகத் தெரிதல்.

துல் - தெல் - தென். தென்படுதல் = தெரிதல், தோன்றுதல், புலப் படுதல்.

துளங்குதல் = விளங்குதல்.

***“துளங்கு மிளம்பிறை யாளன்”*** ***(தேவா. 88:10)***

துளங்கொளி = மிக்கவொளி. துள் - துண் - துணி = ஒளி (பிங்.).

துள் - தெள். தெள்ளுதல் = விளங்குதல், தெளிவாதல்.

***“தெள்ளுங் கழலுக்கே”*** ***(திருவாச. 10:19)***

தெள் - தெளி. தெளிதல் = விளங்குதல், நன்றா-த் தெரிதல்.

தெளி - தெரி. தெரிதல் = விளக்கமாதல், தோன்றுதல். தெளி - தெசி.

முள் - விள் = விளங்கு. விளங்குதல் = ஒளிர்தல், தெளிவாகத் தெரிதல்.

**ix. அறிதல்**

தெரியும் பொருள் அறியப்படும்.

தெள்ளிமை = அறிவுநுட்பம். தெள்ளியர் = தெளிந்த அறிவினர்.

தெளிதல் = அறிதல்.

தெளி - தெரி. தெரிதல் = அறிதல்.

தெள் - தெருள். தெருள்தல் = அறிதல், உணர்தல்.

தெரி - தேர். தேர்தல் = அறிதல்.

**x. ஆரா-தல்**

தெரியாத பொருளைப்பற்றிய அறிவு ஆரா-ச்சிவழிப் படுவதாம்.

தெள்ளுதல் = ஆரா-தல்.

தெள் - தெளி. தெளிதல் = ஆரா-தல்.

தெளி - தெரி. தெரிதல் = ஆரா-தல், தெரிந்தெடுத்தல்.

தெரி - தேர். தேர்தல் = ஆரா-தல்.

**xi. தெளிதல்**

ஆரா-ச்சியால் ஐயம் நீங்கித் தெளிவு பிறக்கும். அதன்பின் தெளியப்பட்டதன்மீது நம்பிக்கையுண்டாம். அதனால் ஒரு வினை முயற்சிக்கு உறுதியான தீர்மானஞ் செ-யப்பெறும்.

துணிதல் = தெளிவாதல், உறுதியாக முடிவு செ-தல். துணிவு = உறுதி, சூழ்ச்சித் தெளிவு.

***“துன்னல் போகிய துணிவினோன்”*** ***(புறம். 23)***

துணிச்சல் = கடுமனத்திடம்.

துல் - தெல் - தென் - தென்பு = தெளிவு. தென்பு - தெம்பு.

தெள்ளுதல் = தெளிவாதல். தெள் - தெளி. தெளிதல் = ஐயநீங்குதல், நம்புதல்.

தெள் - தெண் - தெட்பு - தெட்பம் = தெளிவு. தெட்டவர் = தெளிந்தவர்.

தெருள்தல் = தெளிதல்.

தெரி - தேர். தேர்தல் = உறுதிகொள்ளுதல், முடிவு செ-தல்.

தேர் - தேறு. தேறுதல் = தெளிதல், திடங்கொள்ளுதல், நம்புதல், துணிதல்.

தேறு - தேற்று - தேற்றம் = தெளிவு, உறுதி.

தேற்றன் = உண்மையறிவுள்ளவன். தேற்று - தேற்றரவு = தேற்றுதல், தெளிவித்தல்.

தெளிவு என்பது கலக்கத்திற்கு எதிராயிருப்பதால், உள்ளம் ஐயுறவு நீங்கி உண்மையறிவதும், ஒருவன் நோயுண்ட நிலையில் ஏற்பட்ட கலக்கம் நீங்கி அவன் உடம்பு வலுப்பெறுவதும், தேர்விற்கு முன்னுள்ள ஐயம் நீங்குமாறு மாணவன் தேர்ச்சி காட்டுவதும் தெளிதல் அல்லது தேறுதல் என்னுஞ் சொல்லாற் குறிக்கப்பெறும்.

### xii. நீர்த்தெளிவு

நீர்த் தெளிவும் கலங்கல் நீக்கமே. மண்ணுந் தூசியும் பிறவும் கலந்திருக்கும்போது நீரூடு பார்த்தல் இயலாது. அவை நீங்கிய நிலையில் நீர் பளிங்குபோலிருப்பதால், அதன் உள்ளும் அடியும் உள்ள பொருள்கள் தெளிவா-த் தெரியும். அங்ஙனம் தெரியும் நீர் தெண்ணீர்.

சிலவிடத்து, ஊடு தெரியாத நீர்ப்பொருளும் அதனினுந் திண்ணிய நிலையுடன் ஒப்புநோக்கித் தெளிவு எனப்படும்.

துள் - துண் - துணி. துணிதல் = தெளிதல்.

***"துணிநீர் மெல்லவல்"*** ***(மதுரைக். 283)***

துள் - தெள் - தெண் - தெட்பு - தெட்பம் = தெளிவு.

தெள் - தெளி - தெளிவு.

தெட்ட = தெளிந்த.

***"மால்கரி தெட்ட மதப்பசை"*** ***(கம்பரா. சரபங். 8)***

தெள் - தெடு. திண்ணமில்லாத கஞ்சியைத் தெடுதெடுவென் றிருக்கின்ற தென்பர்.

தெள் - தெரி - தேர் - தேறு = தெளிவு. தேறுதல் = தெளிதல்.

தேறு = நீரைத் தெளிவிக்கும் தேற்றாங்கொட்டை.

***"தேறுபடு சின்னீர் போல"*** ***(மணிமே. 23:142)***

தேறு - தேற்று = தெளிவு, தெளிவிக்கை, தேற்றாங்கொட்டை (பிங்).

***"தேற்றின் வித்திற் கலங்குநீர் தெளிவ தென்ன"***

***(ஞானவா. மாமவியா. 3)***

தேற்று - தேற்றா (தேற்றாங்கொட்டை, அக்கொட்டை மரம்).

***"தேற்றாவினுடைய விதையைக் கொண்டு கலத்தே மெல்லத் தேற்றக்***
***கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறுபோல"*** ***(கலித். 142, உரை)***

**xiii. கள் தெளிவு**

கள்ளும் தேனும் பொதுவாக அரித்தும் வடிகட்டியும் தெளிவான தாக எடுக்கப்பெறுவதால், தெளிவு என்னும் சொல் அவ்விரண்டையும் ஆகுபெயரா- உணர்த்திற்று.

இனிமையும் வெறிவிளைப்பும் கள்ளுக்குந் தேனுக்கும் பொது வியல்பாதலால், கள் தேன் மது மட்டு முதலிய பெயர்கள் அவ் விரண்டையும் பொதுப்படக் குறிக்கும்.

இயற்கைக் கள்ளும் செயற்கைக் கள்ளும் எனக் கள் இருவகைப் படும்.

துல் - (தெல்) - தென் = (தெளிவு, கள்) இனிமை.

***"தென்னிசை பாடும் பாணன்"*** ***(திருவாலவா. 56:7)***

தென் - தேன் = தெளிவு, கள், மது. தேன் - தேம் - தீம் - தீவு = இனிமை. தேன் - தேனி. தேனித்தல் = இனித்தல். தீவிய = இனிமையான. தீம் - (தி) - தித்தி.

துள் - தெள் - தெளிவு = பதநீர், கருப்பஞ்சாறு.

தேறு - தேறல் = தெளிந்த கள், தேன்.

### xiv. வெண்மை

ஒளியானது வெண்மையா யிருத்தலால், ஒளியை அல்லது விளக்கத்தைக் குறிக்கும் சொற்களினின்று (அல்லது சொல்லடி களினின்று) வெண்மையைக் குறிக்குஞ் சொற்கள் பிறந்துள்ளன.

நெருப்புச் சிவந்ததென்றும், கடுமையான கதிரவனொளி வெண்மை யானதென்றும், பொதுவாகக் கொள்ளப்படும்.

குரு - குருகு = வெண்மை.

துல் - துல்லியம் = வெண்மை.

துள் - தெள் - தெளி. தெளிதல் = வெண்மையாதல்.

புல் - பல் - பால் = வெண்மை.

பால் - வால் = வெண்மை.

முள் - முரு - முருந்து = வெண்மை.

முள் - விள் - விளர். விளர்த்தல் = வெண்மையாதல்.

விள் - வெள் - வெண்மை. வெள் - வெள்ளை. வெள் - வெளு.

### xv. வெளுத்தல்

விள் - விளர். விளர்த்தல் = வெண்மையாதல், வெட்குதல்.

விள் - விடி - விடியல் = கரிய இருள் நீங்கி வெளிய ஒளி தோன்றல்.

விள் - வெள் = வெள்ளென = விடிய. வெள்ளெனக் காட்டி - வெள்ளெங்காட்டி = விடியற்காலை.

வெள் - வெளு. கிழக்கு வெளுத்தல் = விடியுமுன் கீழ்த்திசை வெள்ளையாதல்.

வெளுத்தல் = வெண்ணிறமாதல், வண்ணான் துணிகளை வெள்ளையாக்குதல் அல்லது துப்புரவாக்குதல்.

வெள் = வெள்கு. வெள்குதல் = நாணத்தால் முகம் வெளுத்தல். வெள்கு - வெட்கு - வெட்கம். வெள் - வெளிறு. வெளிறுதல் = சிறிது வெண்ணிறமாதல்.

### xvi. வெண்மையான பொருள்கள்

உல் - எல் - எலும்பு - என்பு.

எல் - எலி = வெள்ளையான எலிவகை. கருப்பை = காரெலி.

சுல் - சுல்லு = வெள்ளி.

துல் - துலம் = பருத்தி. துலம் - துலவம் = பருத்தி.

துல் - தூல் - தூலினி = இலவு (பஞ்சு).

தூல் - தூலை = பருத்தி.

தூல் - தூலம் = இலவு.

தூலம் = தூலகம் = பருத்தி.

துள் - து- = பஞ்சு. து- - தூ- - தூசு = பஞ்சு.

துள் - தும்பு - தும்பை = வெண்பூச் செடிவகை.

வெள்ளாடைக்குத் தும்பைப்பூவை எடுத்துக்காட்டுவது உலக வழக்கு.

புல் - பல். பல் - (பன்) - பன்னல் = பருத்தி. பன் - பனுவல் = பருத்தி.

பல் - பால். பால் - வால் = வாலுகம் = வெண்மணல்.

புள் - பள் - பளிங்கு. பள் - பாள் - பாளிதம் = சோறு.

பால் - பாலை = பாலுள்ள மரவகை, அம் மரம் வளரும் நிலம்.

முல் - முல்லை = வெண்பூக்கொடி வகை, அது வளரும் நிலம்.

முல் - மல் = மல்லி - மல்லிகை.

முள் - முரு - முருந்து = மயிலிறகின் அடி, எலும்பு.

முள் - முளரி = வெண்டாமரை. முள்- (முண்டு) = முண்டகம் = வெண்டாமரை.

முள் - விள் - விள = வெண்தோட்டுக்கா- மரவகை. விள - விளம். விள - விளா - விளவு - விளவம். விளா - விளாத்தி. விள - விளர் - விளரி = விளா. விளா = நிணம்.

விளவம் - வில்வம் = விளாவிற்கு இனமான கூவிளம்.

கருவிளம் = மரப்பட்டை கருத்துள்ள விளாவகை.

விள் - வெள் - வெள்ளில் = விளா.

வெள் - வெள்ளம் = வெளுப்பான புதுப்பெருக்கு நீர்.

வெள் - வெள்ளி. வெள் - வெள்ளை.

வெள் - வெளிச்சி = வெண்ணிறக் கெண்டை மீன்

வெள் - வெளிர் - வெளிறு = விளையாத வெண்மரம், அறிவின்மை.

குறிப்பு: குருகு என்பது கொக்கை மட்டுங் குறியாது நாரை காரன்னம் முதலிய பற்பல நீர்ப்பறவை வகைகளைக் குறித்தலால், அவற்றைக் குறிக்கும்போது வளைந்த கழுத்துள்ளது என்று பொருள் கொள்ளப்படும். இதன் விளக்கத்தை வளைதலியலிற் காண்க.

**xvii. தூ-மை**

அழுக்கெல்லாம் பெரும்பாலும் பிற நிறமா யிருப்பதாலும், அழுக்கற்ற சாயந் தோ-க்காத ஆடை வெண்மையா யிருப்பதாலும், சுவரின் அழுக்கைப் போக்க வெண்சுண்ணம் பூசுவதாலும், வெண்மை தூ-மைக் கடையாளமாம்.

துள் - து- - து-ய = தூய. தூ- - து - துப்பு - துப்புரவு = தூ-மை.

து- - தூ- - தூ-மை. தூ- - தூ.

புல் - பல் - பால் - வால். வான்மை = தூ-மை. வாலாமை = தூ-மையின்மை. வாலறிவு = தூய அறிவு.

முல் - முல்லை = கற்பு.

முள் - வெள் - வெள்ளை = தூ-மை, தூய ஆடை, வெண்பா. வெள் - வெளி = வெண்பா.

எக்காரணத்தையிட்டும் வேற்றுத்தளை விரவாது தன்றளை கொண்டே இயலும் தூ-மையுடைய பா வெண்பா (வெள் + பா).

வெள்ளை = களங்கமற்றவன், சூதுவாதில்லாதவன்.

***“வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை”***

என்றார் ஔவையார்.

வெள் - வெள்ளந்தி = கள்ளங் கவடற்றவன்.

**xviii. வெறுமை**

தூ-மை யென்பது வேற்றுப் பொருளும் வேற்றுப் பொருளியல்புங் கலவாததாதலின், தூ-மைக் கருத்தில் தனிமைக் கருத்தும் தனிமைக் கருத்தில் வெறுமைக் கருத்தும் தோன்றும்.

தனிக்கருப்பைச் சுத்தக் கருப்பு என்று கூறுதல் காண்க.

வெண்மை = தூ-மை, தனிமை, வெறுமை.

வெள்ளிலை = இலை தவிர வேறு பூ கா- ஒன்றுமில்லாத கொடியிலை, அல்லது உணவின்றியும் வழங்கப்படும் இலை.

வெண்பாட்டம் = மாராயமில்லாது வெறுமையான பாட்டம்.

வெண்ணிலைக் கடன் = ஈடில்லாது வெறுமையாகக் கொடுக்கப் படும் கடன்.

வெள் - வெறு - வெறுமை = தனிமை, ஒன்றுமின்மை. வெறு இலை வெற்றிலை (வெள்ளிலை.).

வெறுஞ்சோறு = கறிவகையில்லாத் தனிச் சோறு.

'மாட்டுத்தாம்பணியில் (தாவணியில்) எங்குப் பார்த்தாலும் வெறும் மாடாயிருக்கும்' என்பது போன்ற வழக்கைக் காண்க.

வெறுவா- = ஒன்றுமில்லாத வா-.

வெறு - வெறுமம் - வெறுமன். வெறுமனே போ-விட்டான் என்பது, ஒன்றுஞ் சொல்லாது அல்லது செ-யாது போ-விட்டான் என்று பொருள்படுவதை நோக்குக.

வெறு - வெற்று. வெற்றிடம் = ஒன்றுமில்லாத இடம். வெற்று வண்டி = வெறு வண்டி. வெற்றாள் = தனியாள்.

வெறு - வெறி. வெறித்தல் = முகிலும் மழையுமின்றி வானம் வெறுமையாதல்.

வெறி - வெறித்து - வெறிச்சு = வெறுமை.

ஆளிருந்து போ-விட்ட வெற்றிடத்தைக் கண்டு, வெறிச் சென்றிருக்கிறது என்பர்.

### xix. வெறுமை

பொருளில்லா வெறுமையே வறுமை.

வெள் - (வெண்கு) - வெங்கு - வெங்கன் = ஒன்றுமில்லாதவன்.

வெள் - வெறு. வெறும்பயல் = ஒன்றுமில்லாத பயல்.

வெறு - வெற்று. வெற்றுக்கட்டை = ஒன்றுமில்லாதவன்.

வெற்றெனத் தொடுத்தல் = (சிறந்த) பொருளின்றிச் சொல்லை யடுக்குதல்.

வெறு - வறு - வறுமை = பொருளின்மை.

வறுங்கூவல் = நீரில்லாக் கிணறு.

‘ஒருநாளும் போகாதவன் திருநாளுக்குப் போனானாம். திரு நாளும் வெறுநாளா-ப் போனதாம்’ என்பது பழமொழி.

வெறு நாள் = (சிறந்த) நிகழ்ச்சியற்ற நாள்.

**xx. வீண்மை**

பயனில்லா வெறுமை வீண்மை.

விள் - வீண்.

வெள் - வெட்டி. வெட்டிவேலை = பயனற்ற வேலை. வீண் வேலை.

வெட்டியாள் = வேலை செ-யாத ஆள்.

வெள் - வெறு. வெறும் பேச்சு = பயனற்ற பேச்சு.

வெறு - வறு - வறிது = வீணானது, வீணாக.

**xxi. வெளி**

வானவெளி ஒன்றுமற்ற வெற்றிடமாதலால், அல்லது வெற்றிட மா-த் தோன்றுதலால், அது வெறுமை யுணர்த்துஞ் சொற்களாற் குறிக்கப்பெற்றது.

விள் - விண் = ஆகாயம். விண் - விண்டு = ஆகாயம்.

விள் - (விசு) - விசும்பு.

விள் - வெள் - வெளி = ஆகாயம்.

வெள்ளிடை = வெறுமையான இடம்.

***“வறிது நிலைஇய காயமும்”*** ***(புறம். 20)***

**xxii. வெளிப்பாடு**

வெளிப்பாடாவது ஒன்று இன்னொன்றன் உள்ளிருந்து வெளி வருதல்.

விள்ளுதல் = வெளிவிட்டுச் சொல்லுதல்.

விள் - விளம்பு - விளம்பரம்.

விள் - விடு. விடுதல் = வெளிவருதல், பிஞ்சு விடுதல். இந்த மரம் பிஞ்சு விட்டிருக்கிறது என்பது வழக்கு.

விடுத்தல் = வெளிப்படக் கூறுதல்.

விடு - (விடி) - (விடிச்சி) - விரிச்சி = தெ-வத்தால் விளம்பப் படுவதாகக் கருதப்பெறும் நள்ளிரா நற்சொல்.

பாக்கத்து விரிச்சி = படைமறவர் சென்று தங்கிய பக்கத்து ஓர்ந்து கேட்கும் விரிச்சி.

விடு - விடை. விடைத்தல் = வெளிப்படுத்துதல்.

விள் - வெள் - வெளி - வெளிச்சி = காதிற் புறப்படும் கொப்புளம்.

கொப்புளத்திற்குப் புறப்பாடு என்னும் பெயருண்மை நோக்குக.

வெளி - வெடி. வெடித்தல் = வெளிவருதல், பிஞ்சு விடுதல்.

**xxiii. சோம்பல்**

சூட்டினால் சோம்பல் உண்டாகும்.

***"பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை***
***தெரிகின்ற தீக்குணமோ ரைந்து"***

என்பது அடியார்க்குநல்லார் மேற்கோள்.

சுள் - சுணங்கு - சுணக்கம் = வேலைத் தளர்ச்சி, தாழ்ப்பு, தடை, சோர்வு.

சுணங்குதல் = சோம்பற்படுதல்.

சுணங்கு = சுணங்கல் = சோம்பல், சோம்பேறி.

சுணங்கு - சுணங்கி = சோம்பேறி.

சுணங்கி - சோணங்கி = சோர்வுற்றவன்.

சோடன் = சோம்பேறி. சோடை = சோர்வு.

சும் = சோம்பல், ஒன்றுஞ் செ-யாமை.

சும் - சும்மா = ஒன்றுஞ் செ-யாமல்.

சும்மாவிருத்தல் = வேலையொன்றுஞ் செ-யாதிருத்தல், ஞானச் சோம்பல்.

சும்-சும்பு-சும்பன் = சோம்பேறி, பயனற்றவன்.

சும்பு - சொம்பு - சோம்பல். சோம்பு ஏறியவன், சோம்பேறி.

### xxiv. உறைப்பு

உறைப்பு என்னும் பண்புப் பெயர் விதந்து சுட்டுவது காரத்தையே. உறைக்கும் பொருளைச் சுள்ளென்றிருக்கிறது என்பர்: காரத்தை எரிச்சல் என்று கூறுவர். இதனால், உறைத்தலைச் சுடுதலோ டொப்பக் கொண்டமை புலனாம்.

உறு-உறை-உறைப்பு.

உல்-எல்-எரி-எரிச்சல்.

(குள்)-கள்-கடு. கடுத்தல் = உறைத்தல். கடு = காரம்.

கடு-காட்டம் = உறைப்பு.

கடு-கடி = காரம்.

கடி-கரி. கரித்தல் = உறைத்தல்.

கரி-கார்-கார்ப்பு. கார்-காரம்,

சுள் = உறைப்பு. சுள்ளம் = உறைப்பு. சுள்ளாப்பு = உறைப்பு.

சுள்ளக்கா- = மிளகா-. சுள்ளிடுவான் = மிளகு, மிளகா-.

சுள் - சுர்-சூர் = காரம், மிளகு.

(நுள்)-நெள்-நெரி-நெரியல் = நெருப்புப்போல் எரியும் மிளகு.

நெரியல் - மெரியல் - மிரியல் = மிளகு.

நெரிப்பு - மெரிப்பு.

தெலுங்கர் மிளகாயை மெரப்பக்கா- (மெரிப்புக்கா-) என்று கூறுதல் காண்க.

முள் - முளகு - மிளகு. முளகா- - மிளகா-.

முளகு - முளகி - மிளகி = மிளகுச்சம்பா.

### xxv. கடும் புளிப்பு

கடும்புளிப்பும் காரம்போல் காட்டமானதாகும். புளிப்பு முதிர்ந்த கள்,

***"தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்"*** ***(புறம். 192)***

***"அரவுவெகுண் டன்ன தேறல்"*** ***(புறம். 176)***

***"பாப்புக் கடுப்பன்ன தோப்பி"*** ***(அகம். 348)***

என்று கூறப்படுதல் காண்க.

உறு - உறை = புளித்த மோர்.

குள் - கள் - கடு. கடுத்தல் = புளித்தல். கடு - காடி = புளிப்பு, புளித்த கள், புளித்த கஞ்சி, ஊறுகா-.

கடு - காட்டம் = கடும்புளிப்பு.

சுள் - சுடிகை = பனங்கள். சுள் - சூழிகை = கள்.

சுர் - சூர் = காட்டம்.

***"சூர்நறா வேந்தினான்"*** ***(பரிபா. 6:72)***

சுள் - சுண்டு = கள். சுண்டுசோறு = சுட்சத்துள்ள சோறு.

சுண்டு - சுண்டம் = கள். சுண்டகன் = கள்ளிறக்குவோன்.

சுண்டு - சுண்டி. சுண்டியுண்டை = புளிக்க வைக்குங் குளிகை.

சுண்டு - சுண்டை = கள்.

சுண்டி - சொண்டி = சுண்டியுண்டை.

கடும் புளிப்பிற்குத் தாக்குவது போன்ற உறைக்கும் திறனுண்மை பற்றியே, பாலைப் புளிக்கவைத்தலைப் பிரைகுத்துதல் என்றும் பிரை தைத்தல் என்றும் கூறுவர். தைத்தல் குத்துதல்.

தை (த-) - தயிர் = பிரை தைத்த பால், ஒ.நோ: மை - மயிர்.

**xxvi. சினத்தல்**

சினம் தீயைப் போன்றதாதலின், எரிதலைக் குறிக்கும் சொற்கள் சினத்தையும் குறிப்பனவாயின.

***"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்***
***ஏமப் புணையைச் சுடும்."*** ***(குறள். 306)***

என்று வள்ளுவர் கூறுதல் காண்க.

உல் - உலறு. உலறுதல் = சினத்தல்.

உருத்தல் = சினத்தல். உருத்திரம் = சினம். உரு - உருப்பு - உருப்பம் = சினம்.

உல் என்னும் வேரினின்று பிறந்த அழலுதல் அனலுதல் அன்றுதல் எரிதல் முதலிய வினைகளும் சினத்தலைக் குறிக்கும்.

குருத்தல் = சினத்தல்.

குல் என்னும் அடியினின்று பிறந்த கனலுதல் கன்றுதல் என்னும் வினைகளும், குள் என்னும் அடியினின்று பிறந்த கா-தல் என்னும் வினையும், சினத்தலைக் குறிக்கும்.

குள் - கள் - கடு. கடுத்தல் = கோபித்தல், வெறுத்தல்.

சுள்ளம் = கோபம், சுள்ளக்கம் = கோபம். சுளித்தல் = கோபித்தல்.

சுண்டுசொல் = சுடுசொல்.

**குறிப்பு:** தொடுதல் (அல்லது முட்டுதல்) என்பது, உள்ளிருந்து தொடுதல் வெளியிருந்து தொடுதல் என இருவகைத்து. கருப்பைக் குள்ளிருந்து தா- வயிற்றைக் குழவி முட்டுதல் உள்ளிருந்து தொடுதல்; தா- வயிற்றினின்று பிறந்த உயிரிகள் தம்மை அடுத்தவற்றைத் தொடுவது வெளியிருந்து தொடுதல்; மரத்துள்ளிருந்து துளிரும் நிலத்துள்ளிருந்து முளையும் முண்டி வெளிவருவது போல, தா- வயிற்றினுள்ளிருந்து குழவியும் முண்டி வெளிவருவது, அதற்குத் தோற்றம். ஆகவே தோற்றமும் உள்தோற்றம் வெளித்தோற்றம் என இருவகைத்து. முட்டைக்குள் குஞ்சும் கருப்பைக்குள் குட்டியும் தோன்றுவது உள்தோற்றம்; அவை பிறப்பது வெளித்தோற்றம். ஆகவே, சிலவற்றிற்கு ஒரு தோற்றமும் சிலவற்றிற்கு இரு தோற்றமும் உளவாம்.

# மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் வாழ்க்கைச் சுவடுகள்

| | | |
|---|---|---|
| தி.பி. 1933<br>சுறவம் 26ஆம் நாள்<br>(7.2.1902): | : | திருநெல்வேலி மாவட்டம்<br>சங்கரநயினார் கோயிலில் பிறந்தார்.<br>தந்தை: ஞானமுத்து<br>தாயார்: பரிபூரணம் |
| தி.பி. 1938<br>(கி.பி. 1907) | : | வடஆர்க்காடு மாவட்டம்<br>ஆம்பூர் மிசௌரி |
| தொடக்கக் கல்வி | : | நல்லஞ்சல் உலுத்தரின்<br>விடையூழிய நடுநிலைப்பள்ளி |
| உயர்நிலைக் கல்வி | : | திருநெல்வேலி மாவட்டம்,<br>பாளையங்கோட்டை திருச்சபை<br>விடையூழிய உயர்நிலைப்பள்ளி<br>(9.10.11 - வகுப்பு) |
| தி.பி. 1950 - 1952<br>(1919 - 1921) | : | முகவை மாவட்டம்<br>திருவில்லிப்புத்தூர் வட்டம்,<br>சீயோன் மலையிலுள்ள<br>சீயோன் நடுநிலைப்பள்ளியில்<br>முதற்படிவ ஆசிரியப் பணி |
| தி.பி. 1952 - 1954<br>(1921 - 1922) | : | வடார்க்காடு மாவட்டம்,<br>ஆம்பூர் நடுநிலைப் பள்ளியில் |
| தி.பி. 1959<br>(1928) | : | தலைமைத் தமிழாசிரியர்,<br>பின்லே கல்லூரி உயர்நிலைப்பள்ளி,<br>மன்னார்குடியில் பணியாற்றினார்.<br><br>முதல் மனைவி எசுத்தர் அம்மையார்<br>மறைவு. |
| தி.பி. 1961 (1930) | : | நேசமணி அம்மையாரை மணந்தார். |
| தி.பி. 1964<br>(1934) | : | தலைமைத் தமிழாசிரியர்,<br>பிசப் ஈபர் உயர்நிலைப் பள்ளி, புத்தூர்<br>திருச்சிராப்பள்ளியில் பணியாற்றினார். |

| | | |
|---|---|---|
| தி.பி.1967 (1936) | : | "கட்டுரை வரைவியல்" என்னும் உரைநடை இலக்கண நூல் வெளியீடு. |
| தி.பி.1968 (1937) | : | முதல் இந்தி எதிர்ப்புப் போரை மையமாகக் கொண்டு "செந்தமிழ்க் காஞ்சி" நூல் வெளியீடு. |
| | | இந்தி எதிர்ப்புக் கிழமை கொண்டாடினார். |
| தி.பி.1971 (1940) | : | "ஒப்பியன் மொழிநூல்" முதற்பாகம், "இயற்றமிழ் இலக்கணம்" நூல்கள் வெளியீடு. |
| தி.பி. 1973 (1942) | : | தலைமைத் தமிழாசிரியர், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். |
| | | கீழ்க்கலைத் தேர்வில் வெற்றி பெற்றார். |
| தி.பி. 1986 (1955) | : | சேலம் "தமிழர் பேரவை" இவரின் தொண்டைப் பாராட்டிச் சிறப்பித்தது. |
| தி.பி.1987 (1987) | : | "தமிழர் திருமணம்" நூல் வெளியீடு |
| | | விரிவுரையாளராக அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியில் சேர்ந்தார். |
| தி.பி. 1988 (1957) | : | திசம்பர் 27, 28, 29இல் தில்லியில் நடைபெற்ற அனைத்திந்தியக் கீழைக் கலை மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பித்தார். |
| தி.பி. 1991 (1960) | : | தமிழின வழிகாட்டி 'தந்தை பெரியார்' தலைமையில் சேலம் 'தமிழ்ப்பேரவை' 'செந்தமிழ் ஞாயிறு' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. |
| | | தமிழ்நாட்டு அரசின் ஆட்சித் துறையில் கலைச் சொல்லாக்கத் தொகுப்பில் பங்கேற்றுச் சிறப்பித்தார். |
| கி.பி. 1992 (1961) | : | "சென்னைப் பல்கலைக்கழக அகராதி யின் சீர்கேடுகள்" நூல் வெளியீடு |

"அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட சிக்கலால் "எனக்கு வறுமையும் உண்டு - மனைவியும், மக்களும் உண்டு -அதோடு எனக்கு மானமும் உண்டு" என்று கூறிவிட்டுப் பல்கலைக்கழக பணியிலிருந்து வெளியேறி னார். "என்னோடு தமிழும் வெளியேறியது" என்று கூறினார்.

முனைவர் சி. இலக்குவனார் முனைவர் வ.சுப. மாணிக்கனார், புலவர் குழந்தை உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர் பங்கேற்றுச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் "திருக்குறள் தமிழ் மரபுரை" "இசையரங்கு இன்னிசைக் கோவை" "தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?" நூல்கள் வெளியீடு.

கி.பி.2002 : பறம்பு மலையில் நடைபெற்ற பாரி விழாவில் "செந்தமிழ் ஞாயிறு" என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தனர்.

கி.பி. 2003 : தஞ்சையில் பாவாணர் தலைமையில் உலகத் தமிழ்க் கழக மாநாடு - "தமிழன் பிறந்தகத் தீர்மானிப்பு" மாநாடாக நடந்தது.

கி.பி. 2004 : "தமிழர் வரலாறு" "தமிழர் மதம்" நூல்கள் வெளியீடு.

கி.பி. 1973 : "வேர்ச்சொல் கட்டுரைகள்" நூல் வெளியீடு.

கி.பி. 2005 : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகத் தமிழ் நாட்டரசின் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களால் அமர்த்தப்பட்டார்.